உ

கணபதிதுணை.

க்ஷணிகாசலபதயேநமஃ

# மாணிக்கவாசகசுவாமிகள்

# புராணவசனம்.

இஃது

சென்னைத்திராவிடவர்த்தனசபையாரது

வேண்டுகோட்பிரகாரம்

புலோலியம்பதி

மஹாவித்துவாம்சராகிய

வ. கணபதிப்பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு,

மேற்படி சபாகாரியதரிசி

பு. ன. முனிசுவாமி நாயகரால்

சென்னை

இலக்ஷ்மீவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1875.

*(Registered Copy Right.)*

# விஞ்ஞாபனம்.

## திராவிடவர்த்தன சபையாரால் இயற்றப்பட்ட புஸ்தகங்களுள் அச்சிடப்பட்டன.

| | விலை. | அணா |
|---|---|---|
| சமஸ்கிருதபிரதமவாசக புஸ்தகம் | ,, | ௫ |
| இரகுவம்சம் முதற்பாகம் | ,, | ௪ |
| இரகுவம்சம் இரண்டாம்பாகம் | ,, | ௪ |
| வில்ஹணீயம் | ,, | ௧௦ |
| மாணிக்கவாசகசுவாமிகள் புராணவசனம் | ,, | ௧௨ |
| கந்தரனுபூதிவிருத்தியுரையும், அருணகிரிநாதர் ஜீவியமும் | ,, | ௫ |

இவைவேண்டுவோர் சென்னபட்டணம் இலிங்கசெட்டிவீதியில் (307) வது. கதவிலக்கமுள்ள வீட்டிலே வசிக்கும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளலாம்.

இங்ஙனம்

ஷை சபாகாரியதரிசி

பு. எ. முனிசுவாமிநாயகர்.

சிவமயம்.

# முகபந்தனம்.

---

பிரமாண பூதரசிகரத்திற் பிரகாசியாநின்ற அதுல்யமான சைவசமயத்திற்குப் பிரதானகுரவர்நால்வருள் ஒருவராகிய திருவாதவூரடிகளது திருச்சரித்திரம் தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் பத்தியரூபமான பிரபந்தங்களுள் அடங்கியிருக்கின்றது; ஆயினமையின் அவை கலைவல்லார்க்கேயன்றி ஏனையோர்க்கு சுலபமாய்ப் புலப்படா. சிவனடியார்களாகிய அறுபத்து மூன்றுநாயனமாரது திருச்சரித்திரத்தை சைவசித்தாந்தசாகரத்தை நன்குபருகியவரும், பரமததிமிரபாஸ்கரரும, சைவமென்னும் செஞ்சாலிவளர வேதாகம பிரசங்கமாகிய மழைபொழியும் காலாம்புதமும, அதுல்யவித்துவ சூடாமணியும், திரவியத்தைத திரணமாகக்கருதி, சிவபெருமானது திருப்புகழை பிரவிஸ்தீரணம் செய்தலே விநோதமாகக்கொணட மஹானுபாவரும் ஆகிய ஸ்ரீமத ஆறுமுகநாவலரவர்கள் கத்தியரூபமாக வியற்றித் தமது பரோ

பகாரசிந்தையினை விளக்கினர். ஆதலின் ஜன்மசாபல்யம் அபேக்ஷித்தசைவர்கள்யாவரும் அம்மஹானுபாவரது பெரியபுராணவசனமாகிய ஔஷதத்தையுண்டு பவரோகந்தீர்ந்து சிவலோகசுகம் அடைகின்றனர். அறுபத்துமூன்று நாயன்மாரது திருச்சரித்திரத்திற்குச் சமமுடைத்தாய திருவாதவூரடிகள் சரித்திரமும் கத்தியரூபமாகவே யிருப்பின் அஃது சைவசமயஸ்திரிகளுக்கும் பாலர்களுக்கும் ஏனையோர்க்கும் பிரயோசனமுடைத்தாய் இருக்குமென்பதைக்கருதி, சைவப்பயிர் வளர்த்தலில் பேரவாவினராய திராவிடவர்த்தனசபையாரும், சைவவேளாளகுலதிலகப்பிரபுகளாகிய நாகூர் - ம-ா-ா-ஸ்ரீ, ச. இராஜசேகரபிள்ளையவர்களும், திரிசிரபுரம - ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீசிவாசகபிள்ளை யவர்களும், சென்னைமாநகரம் வணிககுலதிலகமான ம-ா-ா-ஸ்ரீ-அப்பா துரைசெட்டியாரவர்களும், ஏனையசைவப்பிரபுகளும்,எனது வீட்டிற்குவந்தும், பஃறரம் பத்திரிகாசம்பிரேஷணஞ்செய்தும், மாணிக்கவாசகசுவாமிகளது திருசசரித்திரத்தைக் கத்தியரூபமாய்ச்செய்யுமாறுபலகால்வேண்டினர். ஆதலின் அவர்கள் வேண்டுகோட்பிரகாரமே நான் ஹாலாஸ்யமாஹாத்மியம், திருவிளையா

டல், திருவாதவூரடிகள் புராணம், முதலிய பக்திவிலாச கிரந்தங்களைப் பரிசோதனைபண்ணி அவற்றிலடங்கிய கதைகளைச் சங்கிரகித்து, ஒன்றற்கொன்று விரோதமாகி வருவனவற்றை, எனக்கு சம்ஸ்கிருதபாஷாபோதனைசெய்த கருணையங்கடலும், என்கண்ணைவிட்டகலாத குரவருமாகிய சுரோத்திரியம் சதுர்வேத வையாகரண ஸ்ரீநிவாஸாசாரியசுவாமிகளது திருமுன்னிலையில் அவிரோதமாக்கி, யாவர்க்கும் புலப்படும் வசனநடையில் விளக்கினேன். என் வெள்ளறிவுரையிற் குற்றமாய்தல் விவேகிகளுக்கு அரிதன்றேனும் "நீர்பிரித்தன்னமுண்ணும் தூயதீம்பால்போல" மாணிக்கவாசகப்பெருமானது திருச்சரித்தைக் கொள்க மஹான்கள்.

இங்ஙனம்
சென்னைத் திராவிடவர்த்தனசபை
வ. கணபதிப்பிள்ளை.

# விஞ்ஞாபனம்.

திராவிடவர்த்தனசபைப் பண்டிதரில் ஒருவராகிய
ம-ள-ள-ஸ்ரீ, வ. கணபதிப்பிள்ளை யவர்களால்
இயற்றப்பட்ட கிரந்தங்களுள்
அச்சிடப்படுவன.

## சம்ஸ்கிருதம்.

துவிதீயவாசக புஸ்தகம்
சந்திதர்ப்பணம்
வியாகரணசங்கிரகம்
சப்தருக்மமாலிகா
தாதுரூபதர்சிநீ
கங்காநதிபிரவாஹ
மஹாமாநுவர்ணனம்

## தமிழ்.

இரகுவம்சம் மூன்றாம்பாகம்
இரகுவம்சம் நாலாம்பாகம்
இரகுவம்சம் ஐந்தாம்பாகம்
இரகுவம்சம் ஆறாம்பாகம்
தாகசசாஸ்திரவிஞ்ஞவிடை
பதப்பிரயோகவிவரணம்

# சுத்திபத்திரம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௮ | ௧௪ | தொறும் | தோறும் |
| ,, | ௧௮ | மேழுகே | மெழுகே |
| ௩௪ | ௧௧ | இருங்காரணம் | இருக்குங்காரணம் |
| ௪௭ | ௧௦ | வருத்துதலை | வருந்துதலை |
| ௪௯ | ௩ | சிவவபெருமான் | சிவபெருமான் |
| ௫௩ | ௧௮ | மீபத்தே | சமீபத்தே |
| ௫௬ | ௧௩ | நனகு | நன்கு |
| ௬௧ | ௩ | நீவிர். | நீவிர் |
| ௬௬ | ௮ | ஆயின்மை | ஆயினமை |
| ௭௬ | ௧௦ | தான் | தான |
| ௭௭ | ௧௫ | சிவபெருமான்; | சிவபெருமான் |
| ௧௦௪ | ௧௭ | வாங்கும்பொட்டு | வாங்கும்பொருட்டு |
| ௧௩௧ | ௧௬ | துக்கசாரத்தில் | துக்கசாகரத்தில |
| ௧௩௮ | ௧௨ | விசனம் | வியசனம் |
| ௧௫௨ | ௮ | திருச்சிற்றம் | திருச்சிற்றம்பலம் |
| ௧௬௩ | ௧௫ | பல்பகை | பல்வகை |
| ௧௬௫ | ௭ | பசியினலுள்ன்று | பசியினலுழன்று |
| ௧௬௬ | ௨ | சின்ருகமத்திற் | சின்னகமத்திற் |
| ௧௬௭ | ௧௨ | தரிசனத்தனர் | தரிசனித்தனா |
| ௧௭௨ | ௧௯ | ஆனந்த் | ஆனந்த |
| ௧௭௬ | ௧௫ | எழுதல | எழுதல |
| ,, | ௧௮ | சது | சதுர் |

## வந்தனதாயினி.

எம் திராவிடவர்த்தன சபையில் உள்ள சம்ஸ்கிருதபண்டிதருள் ஒருவரான ம-௱-௱-ஸ்ரீ. வ. கணபதிபிள்ளையவர் எங்கள்வேண்டுகோளைச் சம்மானித்து, அநேககிரவாணதிராவிடகிரந்தங்களைப் பரியாலோசனைசெய்து இந்நூலையியற்றித் தமதுபரோபகார சிந்தனையைப் பிரதரிசனித்ததற்காக மிகுந்த வந்தனஞ் செய்கின்றோம்.

இங்ஙனம்

திராவிடவர்த்தன சபையாராகிய

சவாககபுர ஆதீனம்

இராமலிங்கதம்பிரான் முதலியோர்

---

## சூசிகை.

இம்மாணிக்கவாசக சுவாமிகள் புராணவசனம் பெரும்பாலதாய் ஹாலாஸ்யமாஹாத்மியந்தழுவி இயற்றப்பட்டது. ஆதலின் சம்ஸ்கிருதநூலறியார்க்குச் சிலகதைகள் விரோதயுக்தமாய்த்தோன்றின், அன்னோர் முற்கூறப்பட்ட சம்ஸ்கிருதகிரந்தத்தைக்கண்டு ஆசங்கையகலுக.

உ

கணபதி துணை

க்ஷணிகாசலபதயேநமஃ

# மாணிக்கவாசகசுவாமிகள்

## புராணவசனம்

## பாயிரம்.

### காப்பு.

பவளமால்வரையினிலவெறிப்பதுபோற்
பரந்தநீற்றழகுபச்சுடம்பிற
றிவளமாதுடனின்றருடியபரமன்
சிறுவனைப்பாரதப்பெரும்போர்
தவளமாமருப்பொன்றொடித்தொருகரத்திற்
றரித்துயர்கிரிப்புறத்தெழுதுங்
கவளமாகளிற்றின்றிருமுகம்படைத்த
கடவுளைநினைந்துகைதொழுவாம்

### நடேசர்துதி.

ஞ்சாரதருமடந்தையொடிசைந்துயிருடம்புபோல
விசும்படுலகங்களின்விரிந்தொளிவிளங்குவார்

## மாணிக்கவாசகசுவாமிகள் புராணவசனம்

மதங்கமொடு தூது துமிவளங்கெழுமுழங்கவே
இதமபாநடமய்யிலசெழுங்கழலிணைறஞ்சுவாம.

### சிவகாமிஸ்துதி.

உட கசிதமபாவணங்குமையணங்கிலா
நா கனனநதசுகநனருபுணபங்கிஞா
ஏட க டணமபொருவவெங்களுமிசைநதுளாா
ஏப ல ஙகுசறுபங்கயமிணைறஞ்சுவாம.

### சுப்பிரமணியஸ்துதி.

ஆக்கய கருமபவயா துமபிமுகனெம்பிசா
ஈ வகுஞெகிழுஞசிறுசதங்கைகளபுலமபவெ
காட ஈபுயைகண குளிரவநதுலவுகினறதா
உ ா லாகொலைமிகுமனபுடணிணைறஞசவா

### நூறபயன.

ஒ சவாநறகைதுயிபமபிணாயாநதே
சிதை துயினிணைபபவாசெவிபபுலனிணைறபயோ
ப ப் சிழுபபுவிபுரயபருடைவிடடா
வாக யுலகததினிலரனசபையிலவாழவாா

திருச்சிறறமபலம

சிவமயம்.

# மந்திரிச்சருக்கம்.

---*---

ஆதிமத்தியாந்த ரகிதரும், சர்வபூதாதாரமானவரும், நிஷ்களரும், நிராமயரும், நின்மலரும, பரஞ்சோதியும், மாயாபாச பந்தப்பட்டுழலும் ஆன்மாககளுக்கு அருள்வெள்ளம் பொழியும் வண்ணம், ஆறுதிருவதனஙகளும, கேதனம் வச்சிரம் அஙகுசம விசிகம வேல் அபயம் வரதம் பங்கயம மணி பருதண்டு வில்லென்பன இயைந்த பன்னிருதிருககரஙகளும் கொண்டு சகலீகரித்த பெருமானும், ஆகிய சுப்பிரமணியக் கடவுளது பக்தகோடிகளுள அக்கிரகண்ணியரும், வேதசாஸ்திர மஹாநிதியும, உருத்திராக்ஷமாலாபரணரும், பஸ்மோத்தூளிதவிக்கிரகரும், ஸ்கந்தவிஞ்ஞானதீபத்திற்கு வர்த்தியெனவயந்தவருமாகிய அகஸ்தியமஹாமுனிவர் எழுந்தருளியிருந்து திராவிடசாதியர்கரு நாதோற்பததி, வாணேற்பத்தி, அர்த்தவிவிர்த்தி, அலங்கார ரசயுக்தமான விருத்ததகின் இலக்கணம் ஆகியவற்றை மொழியப்பெறறதும, தேவாதிதேவராகிய சோமசுந்தரக்கடவுள் அனேகம திருவிளையாடல்கள் செய்யப்பெற்றதும, வேகவதி தாமிரவர்ணியென்னும் உபயநதி

கிளின் வளங்கள் மல்கப்பெற்றதும், இயலிசைநாடகமென்னும் முத்தமிழையும் பூவைக்குழாங்கள் பகர்ந்து தலைசாய்த்திருக்கும் மனோகரமான சோலைகள் மலியப்பெற்றதும், பரமகுருவாகிய குகப்பிரமமும் சங்கத்தமிழ்ப்புலவராக இருக்கப்பெற்ற மஹிமைசேர்ந்ததும், நக்கீரர்முதலிய பொய்யடிமையில்லாத புலவர்கள் வசிக்கப்பெற்றதும் ஆகியபாண்டிமண்டலத்திலே, பல்வகைவளம்வாய்ந்து ஒப்புயர்வின்றி விளங்கும் திருவாதபுரம் என்னும் ஒருபதியுளது. அப்பதிக்கண்வசிக்கும் பிராமணருள் ஞானசாரங்களிற் சிறந்தவரான ஆமாத்தியகுல வேதியர் ஒருவாருளர். அவர்பாரியாகிய சதீத்துவாத்தினத்தின திருவுதரத்திலே, கருணைபயோநிதியாகிய சோமசுந்தரக்கடவுளது அனுக்கிரகவலத்தினாலும், மஹான்கள்புரிந்த புண்ணியபலத்தினாலும, சிவஞானமே ஓர்வடிவெடுத் துற்பவித்தாலென்ன ஓர்குழந்தைபிறந்தது. உலகின்கண்ணே பல்லிடத்தும் வியாபிக்கும் மாயாஜாலமாகிய அந்தகாரபடலம் அகலவும், அம்மாயாஜாலத்திலகப்படுவோரை நரகப் படுகுழியில வீழ்க்கும் பரமதங்களாகிய தாரகாகணங்கள் ஒளியழுங்கவும், சிவபத்தர்களது இருதயங்களாகிய பங்க

யங்களெல்லாம் மலரவும் உதயஞ்செய்த ஞானபா லகராகிய அக்குழந்தைக்கு, ஞாதியர்யாவரும் திருவாதபுரேசர்என நாமமிட்டனர். பூர்வபக்ஷசந்துச்ச திரன் சகோரம்மகிழவும் சந்திரகாந்தம் நெக்குநீர் பொழியவும், குமுதகடாகங்கள் குலாவிப்பொலியவும், நாளுக்குநாள் கலாவிருத்தியெய்தி வளர்ந்தாலென்ன திருவாதபுரேசர், தந்தைமகிழவும், தாய்நயனங்கள் ஆனந்தபாஷ்பஞ்சொரியவும், சிவனடியாரது சிந்தைகள்மலர்ந்து திகழவும், நாளுக்குநாள்வளர்ந்தனர். நிஷ்காமனுபுண்ணியமாகிய விதையினுளடங்கியிருந்து, அங்குரித்து, ஜனனமென்னும் பங்கத்தினின்றுநீங்கி, சிவானுக்கிரகமாகிய குருத்துவாய்ந்து, நானுவகை விக்கினமென்னும் களைகள் நீங்கப்பெற்று, சைவநிச்சயமென்னும் பலம்விளையும் வண்ணம வளர்ந்த செந்நெல்என்று உருவகித துணாக்கப்படும் தகைமையினராகிய திருவாதபுரேசருக்கு அவர்ஞாதியர் அன்னப்பிராசனம் சௌலம் ஆதியகிரியைகள் இயற்றி, வித்தியாரம்பஞ்செய்வித்து, உபநயன விதி முடித்தனர்.

சைவமுனிவர்கள் இயற்றிய மாதவங்களும், திருவாதபுரேசர் பூர்வஜனனங்கடோறும் புரிந்த சிவ

புண்ணியங்களும், அவரது தந்தைதாயர்செய்த தருமங்களும், கருணாம்புதியாகிய பரமசிவனது அனுககிரகமும் ஒருங்குசேர்ந்தமையாலே, அவர்வேதாங்கங்களாகிய சிக்ஷை, கற்பம், வியாகரணம், சந்தசு, சோதிஷம், நிருக்தி ஆகியவற்றையும, தருமசாஸ்திரங்களையும், சர்வபுராணங்களையும், தருக்கமீமாம்ஸசாஸ்திரங்களையும், ஆயுர்வேதம் தனுர்வேதங்களையும், பல்வகைக்கலைகளையும், வேதாகமங்களையும்,நானாதேச பாஷைகளையும், இராஜநீதிகளையும், பதினாறு வயசினுள்ளேகற்று சமானமற்றபாண்டித்தியமெய்தினர்.

திருவாதபுரேசர் மானுடர்க் கின்றியமையாச்சிறப்பினவாயகலைகள் யாவற்றிலும், அவற்றின் பயனாய ஞானத்திலும், அதன் பயனா ஒழுக்கத்திலும் சிறந்து யாவரும் புகழ்ந்துரைக்கும்வண்ணம் நிலவாநின்றனர் என்னுஞ் சமாசாரஞ் செவியுற்று, சந்தனப்பொதியச்செந்தமிழ்முனியும்சௌந்தரபாண்டியனெனும் மஹாராஜனும் சங்கப்புலவரும் தழைத்தினிதமர்ந்த மங்கலப்பாண்டி வளநாட்டின் கண்ணே மறம் எனப்படுவனவனைத்தும் ஓட்டி, அறம் எனப்படுவனவனைத்தும் நாட்டி இராச்சிய பரிபாலனஞ்

செய்து கொண்டிருந்த அரிமர்த்தன் பாண்டியமஹா ராஜன் அதிகசந்தோஷமடைந்து, அவனைத் தமது சமூகத்துக்கழைப்பித்து, அவருக்குச் செயற்பாலன வாய உபசாரங்கள் யாவுஞ்செய்து, சிறுவயசிலே அவரடைந்த பெருங்கல்வியைச்சுட்டி மிகவும் ஆச்சரியமுற்று, "இவ்வாறுசம்பவித்தமை கிருபாசமுத்திரமாகியசோமசுந்தரக்கடவுளது திருக்கருணைகடாக்ஷத்தினால்" என்று புகழ்ந்தோதி, அவனைத்தனது பிரதானமந்திரியாக்கி தென்னவன்பிரமராயன் என்னும் நாமம்வழங்கி, சகலராஜர்களும் மதிக்கும்வண்ணம்பீதாம்பரம், இரத்தினாபரணம், வெண்கவிகை, சாமரை, யானை, குதிரைமுதலிய பலவரிசையளித்து, அவனைசசன்மானித்தனன். கருவித்திறமறியும் நூல்களிலும் மனுநீதியிலும் மஹாநிபுணரான திருவாதபுரோசர் இராச்சியபரிபாலன கருமத்திலே சிறிதுந்தவறாது முயன்றும், அன்னியதேசங்களிலிருந்து கொணரப்படும் யானை குதிரை இரத்தினமுதலியவற்றை குணதோஷபரீக்ஷைசெய்து அரசன் பொருட்டுவாங்கியும், மன்னரிடுந்திறைகளைக் கிரமப்படி ஏற்றகாலத்தில் ஏற்றும், பிற ஆவசியககருமங்களை விதித்தகாலத்திலே முடித்தும், அரிமர்த்தனபாண்டிய மஹாரா

ஜனது ஆனந்தத்தை நாடோறும் விருத்திசெய்வா
ராஜா. இங்ஙனம் நிகழுங்காலத்தில் அரிமர்த்தன
பாண்டியமஹாராஜன் இராச்சிய பரிபாலனத்திற
கொண்ட கவலையாதானுமின்றி, தன்மாளிகையினி
ல்இனிதுவதிந்து சகலபோகங்களையும் அனுபவித்து
வநதான்.

திருவாதபுரேசர் மஹாபிரபுத்துவமான இரா
ஜபதமடைந்தனரேனும், பாவததிற் கஞ்சுகின்றவரு
ம, தனலோபம் பரமாணுப்பிரமாணமேனு மில்லாத
வருமாதலில், பொருட்களின் நித்தியாநித்தியததை
க் கைத்தலநெல்லியங் கனியேபோல் நன்குணர்ந்த
மஹான்கள் ஒழுகிய பத்திநெறியே தாமும் ஒழுக
விரும்பி, சிவனடியார்க்குத்திருவமுதளித்தலாகிய உ
ததமபுண்ணியங் தினந்தொறும் புரிந்தும், சகலான்
மாக்களுக்கும் திருவருள் சுரக்குந் திருவுளத்தராய்ச
சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியிருக்கும் திருவா
லயஞ்சென்று, அவர் சந்நிதியினின்று, இருகரஞ்சிர
மிசைகூப்பி, அழலிடைப்பட்ட மெழுகேபோல உ
ள்ளநெக்குருக, உரைதடுமாற, உரோமஞ்சிலிர்ப்ப,
கண்களினின்றும் ஆனந்தவருவிசொரிய, பேரின்பக்
கடலிலமிழ்ந்தி, துதித்துச் சேவித்தும், பவசாகரதீர

மேற்றுந் தெப்பமான சிவநாமத்தை உச்சரித்தும், மெய்யன்பு செய்துவருவாராயினர். இங்ஙனமே நாடோறும் நடைபெறுங்காலை, திருவாதபுரேசர் பூர்வஜன்மஙகடோறும் புரிந்த நிஷ்காமஞ்புண்ணியங்களின்பயனுய், மெய்ம்மையாம் பொருள்விவேகமும பல்வகைப்பட்ட பொய்ம்மையாம் பொருள்விவேகமும், அவருக்குத் தோன்றலும், இகத்திலே யனுபவிக்கப்படும பாலவான இராச்சிய சுகமுதலியவற்றிலும்;பரததிலே யனுபவிக்கும்சுவர்க்காதிபோகங்களிலும் நிராசையுற்று, சூரிய கிரணேஷ்ணத்தால் வருநதிய பிரயாணிகள் சாயாவிருக்ஷத்தடியை யடைதல்போலவே, ஜனனவெயில் வருத்தம் நீக்கும்படி சிவபெருமானது திருவடித்தாமரை நிழலிற்சேரவிரும்பி, கிருபாசாகரமாகிய எம்பெருமான், ஆன்மாக்கள்யாவும் பாசபந்தம் நீங்கி முத்திபெற்றுய்யும் வண்ணம திருவுளங்கொண்டு திருவாய்மலர்ந்தருளிய நிமலாகமங்களை அதிசிரத்தையுடன் அல்லும்பகலும கற்றுவந்தார.சைவாகமங்களைக் கற்றுவருங்காலை, நானுவிதமாயப் பாசம்வியாபிக்கின்றமையும், அப்பாச சம்பந்தததினுலேஆன்மாக்கள்ஜனனமரணமென்னும பெருங்கடலுட்கிடந்து மயங்கித்தியங்குகின்றமை

யும், அவ்வான்மாக்களிடத்துக் கொண்டபெருங் கருணைததிறததினுலே, சிவபிரான் அப்பாசததைநீக்கிக கைவல்யசுகங்கொடுத்தருளுகின்றமையும், ஏகபிரமமாயும், சத்தியஞானசுகமளிப்பவராயும், நிஷ்களராயும், விசுவாதிகபிரபுவாயும், சர்வஞ்ஞராயும, சர்வகாததராயும், பரஞ்சோதியாயும், நிஷ்டாபிராப்தராயும, அப்பிரமேயராயும் இருக்கின்ற சிவபெருமானைததிரிகரணங்களாலும் மெய்யன்போடு சேவிக்கும அடியார்க்கேயன்றி ஏனையோர்க்குக் கைவல்யபிராபதி அசாததியம் என்பதும், இருவினையொப்பு மலபரிபாகம் விரைவிலேயடையும் விதியுடையார்க்கு முன்னுண்டாவதாகும் அதிதீவிரபக்குவம் உற்றார்க்குச் சததியஞான முணர்த்துவது எம்பெருமானது திருவாயினின்றும் பிறந்தபரிசுத்த ஆகமம் எனபதும திருவாதபுரேசருக்கு நன்குபுலப்பட்டன.

புலப்படவே மெய்ஞ்ஞானத்திற்குச் சாதனமான விசாரமடைந்து திருவாதபுரேசர் "வேதாநதத்துணியும் ஆகமத்துணியும்பேதமுடையன எனமனசிலே நிகழும்சந்தேகத்தையொழித்து, குருவடிவாகிய தம்மையும் சீஷனுகியஎன்னையும் நன்கு உணர்த்தியருளும்ஞானுசாரியர்வந்து எனக்குஉபதேசஞ்செயப்

பெறுநாள் எந்நாளோ" என்றுபலவாறு புலம்பியும், "மெய்யன்பினாக்கெளிவரும் பெருங்கருணைக் கடலாகிய ஞானாசாரியரது அற்புதபோதனையினாலன்றிப் பிறிதொருவாற்றால் பாசவிமோசனஞ்செய்யவுன்னுதல், மரக்கலமின்றி மஹாசமுத்திரத்தைக் கைகளால் நீந்திக்கரையேறத் துணிதல்போலும்" எனச்சிந்தித்தும், பேரின்பவீடெய்தும் விருப்பமிகுதியால், சற்குரவர் உளரோ என்று அறியும்வண்ணம் சைவாசாரியர்களுடனே எண்ணிறந்த வாதங்கள் செய்வாராயினர். தேனுண்ணும் அபேக்ஷையுடைய வண்டு சோலையிலும் தடாகத்திலும் அலர்ந்திருக்கும் பல் வகைமலர்களிலும் வீழ்ந்து வீழ்ந்து அவற்றிலிருக்கும் மதுவினால் உதாபூரணமுறாது, மிகுதேன் பொருந்தியமலரைத்தேடித் திரிதல்போலவே, மோக்ஷசுகமாகிய இன்பமதுப்பருகும் அபேக்ஷயினராகிய திருவாதபுரேசர் பற்பல சைவாசாரியர்களுடன் வாதஞ்செய்து செய்து, மனப்பூரணமுறாமையாலே, ஆசங்கைகள் யாவற்றினையும் நீக்கும் மஹாசக்தியுடையாராகிய ஞானாசாரியனைத்தேடித்தேடித் திரிந்தனர்.

இங்ஙனமே ஆத்துமவிசாரங்கொண்டு 'சிவபெருமானது திவ்வியசரணபுண்டரீக நிழலடையும் ஆ

சைமீதூரத் திருவாதபுரேசரிருக்குங் காலத்தில், ஓரா அரிமர்த்தனபாண்டிய மஹாராஜன் பல்லலங்காரங்களுடனும் வந்து சிங்காசனத்தின்மீது வீற்றிருந்தனன். அவ்வமையத்தே மஹாராஜனது குதிரைகிளைகாப்போர் அவன்சந்நிதிசென்று வீழ்ந்துநமஸ்கரித்து "மஹாராஜனே! சந்திரகுலதீபமே! உமது சாலையினின்ற குதிரைகளுள் அனேகம் இறந்துபோயின; எஞ்சியவை வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கின்றன; ஆயினமையால் புதியகுதிரைகள் ஆவசியகமாக வாங்கவேண்டும், அன்னியதேசங்களுக்குச் சென்று பரராஜர்கள்யாவரையும் வென்று வாகைமாலை சூடற்குக் குதிரைப்படையே அதிசகாயம்; ஆனகாரணத்தால் எவ்வகை முயற்சிசெய்தேனும் குதிரைசம்பாதித்தல் வேண்டும்" என்று அஞ்சலிக்கரதத்தினராய் மொழிந்தனர். அச்சமயத்திலே சிலதூதுவர்கள் மஹாராஜனது சந்நிதிசென்று கும்பிட்டு "மண்டலேசுரா; சோழதேசக் கடற்கரையிலே ஆரியதேசத்தவர்கள் உத்தமகுதிரைகொண்டு வந்திருக்கிறார்கள், யாம்அதுகண்டேம்" என்று சொன்னார்கள். அச்சமாசாரங்கேட்டலும் அளவில்லாமகிழ்வுற்று மஹாராஜன் அவர்களது விசுவாசத்தை

வியந்தோதிப் பின்பு மந்திரியாகிய திருவாதபுரோச ரைநோக்கி "மந்திரீ! நீரோ எனதுகண். உம்மையன் றிவேறியாவர் இராஜகாரியம் விசுவாசபூர்வகமாயச் செய்கின்றார்கள்? என்குதிரைச் சாலைகாப்போர் குதிரைகளில் எண்ணிறந்தன மாண்டன வென்றும், எஞ்சியன வியாதிகளாற் பீடிக்கப்பட் டிருக்கின்றன வென்றும், யுத்தத்திற்கேற்ற உத்தமமான குதிரை ஒனறேனு மில்லையென்றும் எனக்குச் சொன்னார்கள்; ஆதலாலே நீர் என்திரவியசாலைதிறந்து அளவில்லாததிரவியம் எடுத்துக் கொண்டுபோய், சோழதேசக் கடற்கரைசென்று அங்கே கொடுவரப்படும் உத்தமகுதிரைகளில் அதியுத்தமமாயின எண்ணிறந்தன வாங்கிவாரும்" என்று ஆஞ்ஞாபித்தனன்.

அதுகேட்டுத் திருவாதபுரோசர் இராஜன்கட்டளையிட்டவாறே புரிவோராய், இராஜனது திரவிய சாலைதிறந்து உத்தமவாசி கொள்ளவேண்டிய திரவியஙகளெல்லாம் எடுத்துப்பின் அறைத்தாழிறுக்கி, அத்திரவியச் சுமையைத் தமதுவீட்டில்வைத்து, பிரயாணத்தின்முன்னே எமபிரானாகிய சோமசுந்தரக கடவுளைத் தரிசித்து வணஙகி, அவரது விடைபெற்றுச்செல்லவேண்டும்சங்கற்பமுடையராய், தீர்த்தா

யகமாகிய சுவர்ணபுஷ்கரிணி என்னும் பிரசன்னசலில
மநிறைந்த வாவியில்வீழ்ந்து ஸ்நானஞ்செய்து, பா
வங்களனைத்தையும் தூளியாக்கும் சிவசின்னங்களா
கிய விபூதி உருத்திராக்ஷ மணிமாலைதரித்து, நித்தி
யகருமங்களியாவும் முடித்து, அத்தடாகத்தின் சமீ
பத்தே வீற்றிருந்தருளும் விநாயகக்கடவுளை நாளிகே
ரம் கந்தம் தூபம் தீபம் முதலியவற்றால் பூசித்து, பி
ன்பு கிருபாசாகரமாகிய சுப்பிரமணியக் கடவுளைச
சேவித்து, தமது மனோபிலாஷைகள் சம்பூரணமாகும்
வண்ணம் பரப்பிரமமான அவனைப் பிரார்த்தித்
து, பின்னர் அனுக்கிரகரூபிணியாகிய மீனாக்ஷிதே
வியார் திருச்சந்நிதிமுன்னின்று வணங்கித்துதித்து,
பின் சோமசுந்தரக்கடவுள் திருச்சந்நிதிசென்று, வெ
யிலிடைப்பட்ட வெண்ணெயேபோல மனமுருகி அ
ஞ்சலியஸ்தராய் உரோமாஞ்சிதமுற்று "சிருஷ்டி
ஸ்திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் எனப்படும்
பஞ்சகிருத்தியங்களும் நடைபெற ஆனந்ததாண்ட
வம் புரிந்தருளும் எமபிரானே! அருட்கடலே! அ
டியார்க்கெளியரே! பத்திவலையிற்படுபவரே! எனக்கா
ருயிரே! தேவாதிதேவரே! அகிலகாரணரே! சிவபி
ரானே! அடியேனது பிரயாணம் சபலமாகும்வண்ண

ணமும, இத்திரவியமனைத்தும தேவரீருக்கும் தேவ
ரீரை மெய்யன்போடு வழிபடுமடியாருக்குமவிநியோ
கமாகுமாறும, திருவுளம்பற்றியருளுக" என்றுபிரா
ர்த்தித்து நின்றனர். இவ்வாறுசிவபிரானைப் பிரார்
த்தித்துத் திரும்பும் அமையத்தில் ஓர் ஆதிசைவப்
பிராமணர், அவர்க்கெதிர்சென்று, அவர்கையிலே தி
ருநீறுகொடுத்தனர்; அதனை அளவில்லாத சிரத்தை
யுடன்வாங்கித் திருவாதபுரேசர் "இதுவே எம்பிர
யாணசித்திக்கு முற்குறி" என்று பெருவகைபொங்க
மேனியெங்கும பூசினர். பின்பு சிவபிரானைத்துதி
த்து விடைபெற்று, பாண்டியமஹாராஜனது மாளி
கைபுகுந்து, அவனுக்குத்தமது பிரயாணத்தைமொ
ழிந்து, அவனனுமதிபெற்று, சங்கம், படகம், பேரி,
சல்லிகை,தாரைமுதலிய வாத்தியங்கள் எங்கும்முழ
ங்கவும், வெண்குடைகவிப்பவும், சாமரையிரட்டவு
ம, சதுரங்கசேனைசூழவும், இரத்தினகசிதமான பெ
ருசிவிகைமீதிவர்ந்து, கல்வரையும பாலைக்கடுஞ்சுர
மும நான்யாறும் முல்லை மருதங்களுங் கடந்து கீழ்
த்தசமுத்திரத்தின கண்ணதான திருப்பெருந்து
றை நோக்கிச்சென்றனர்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# திருப்பெருந்துறைச்சருக்கம்.

இங்ஙனம் நிகழ்வுறவே, இரிவர்க்கங்கள் யாவரு முள்ளும் மகிமைதங்கி யிராநின்ற கைலாசத்திலே, சாம்பூநதமாகிய உத்தம செம்பொன்னு லியன்று, நவமணியழுத்தி விளங்கும் திருவாலயத்திலே, ஆயிரகோடி பாலாதித்தியர்கள் ஒருங்குதித்தாலென்ன, அனந்தங் கிரணங்கள்வீசி திகாந்தங்களினுள்ள இருளகற்றிப் பிரகாசியாநின்ற கனகமணிமண்டபத்திலே திவ்விய சிங்காசனத்தின்மேலே, ஏகபிரமமாயும், பரிபூரணராயும், சர்வஞ்ஞராயும், சர்வவியாபகராயும், சர்வசத்தியராயும அகிலபிரபஞ்ச சாக்ஷியாயும், நித்தியராயும்உள்ள சிவபிரான், தமது கிருபாசத்தியாகிய பார்வதிதேவியாரை வாமபாகத்திற்கொண்டு அருட்கடல் பூரணமாய்ப் பொங்கித்ததும்பும திருநயனங்கள் பொலிய எழுந்தருளியிருந்தனர். அவ்வமையத்திலே பிரமதகணங்களிற்சிலர் பேரி, காகளம், சுரமண்டலம், துந்துபி, சின்னம், சங்கம், சல்லிகை என்பனவாதியான வாத்தியங்களை முழக்கினா. சிலர் இருபுடையினுங் கவரிவீசினர்; சிலா ஆலவட்டமசைததனர்; சிலர் முத்தவெண்குடை கவித்தனா,

தும்புருநாரத சித்தவி[redacted]தாரகள் வீணைசோத்து
ச் சிவபிரானது திரும[redacted]ஸ்தவ கீதத்தினைப் பிரதி
பாதிக்குஞ்சாமவேதங்களைப்பாடினா். உடையாளும
பிரமபுந்தாங்கிச் சித்தாந்தசைவசிகாமணியாகிய திரு
நந்திகேசுரர் சிவபெருமானுக்குப் பக்கமாய்நின்றனா்.
இலக்ஷுமியும் பூமிதேவியும் தேவமாதாசரும உலக
மாதாவாகிய பாாவதிதேவியாா சமீபமானறு சேவி
த்தனர். அவ்வமையத்திலே பிரம்விஷ்ணுமுதலி
யோர் உரைக்கருஞ் சிந்தையுடனெழுந்து "சிவபெ
ருமான் கருணைகூர்ந்தருளுஞ் சமயமிதுவே" என்று
சிரமிசை கரதலங்கூப்பி ஹரஹரமுழக்கஞ்செய்து,
அழல்வாயப்பட்ட மெழுகேபோல மனம் நெகிழ்ந்
துருக, தேகங்கம்பிக்க, உரோமஞ்சிலிர்ப்ப, மெய்
க்காரேறும சுவேதசல முண்டாக, கண்களினின்
றும் ஆனந்தபாஷ்பஞ்சொரிய, நாத்தழுதழுப்ப, வா
ரைதடுமாற, தம்மைமறந்து பேரின்ப சாகரத்தமிழ்
ந்திநின்றனர். இவ்வாறு நிகழவுறுந்தமயத்திலே எ
ம்பெருமான கருணைவெள்ளம பொழிந்திடும திருமு
கத்திலே திருப்புன்னகைகாட்டி, தமது திருச்சந்
நிதியினிற்குங் கணநாயகர்களையும், பக்தர்களையும் நோ
க்கிய நருள் "அன்பர்களே! திருவாதப்பிரசங்க லை

வனுக்கு ஞானோபதேச[illegible]ய்யுமாறு துணிந்தேம
[illegible] நீவிராயாவரும [illegible]சாரிய வடிவங்கொண்
[illegible] நடக்குச் சீஷர்களா யமையுமவண்ணம்
[illegible] எம்முடனவமமின்'' என்று
[illegible] நளினா. எமபிரான் கட்டளையிட்டரு
[illegible] அவர்கள்யாவரும அவ்வாறவ
[illegible]. அவர்களோடு, சிவபிரானஞானா
[illegible] வடிவங்கொண்டருளி அரிபிரமேந்திராதிய [illegible]
[illegible] வேதங்களின் சிரசுகளாகிய உப[illegible]
[illegible] அதிதமாயிருக்கின்ற திருசசரண[illegible]
[illegible] ஜனமாந்தரங்களோறுமபஞ்ச[illegible]
[illegible]தியினின்று வருந்தியயறறிய துஷ்கரமான
[illegible] பெருமபயனென்ன, தனைமீதுதிண்ட
[illegible] சென்று திருப்பெருந்துறையென்னு
[illegible] கேஷத்திரமடைந்து, அங்கே, புன்னாகம,
[illegible], சமபகம, நாரதம், குங்குமம, செருந்தி, கோ
ங்கு, பாடலம், பனசம, சூதம, குரா, பூகம், தெங்கு
முதலிய சாயாவிருக்ஷங்கள் செறிந்து சூரியகிரண
அணுப்பிரமாணமெனும வீழப்பெறாது, சைத்[illegible]
பொருந்தி, மலர்மந்தமாருதம வீசபபெறு[illegible]
[illegible] பூஞ்சோலைசென்று, அதனமத்தியி[illegible]

பொழியும், சுகந்தமலர்நிறைந்த சாகைகள்செறிந்த, குருந்தவிருக்ஷத்தடியிலே அடியார்குழாங்சூழ, எழுந்தருளி, திருவாதபுரேசரது பாசபந்தம் கழிந்தறுகிய காலம்பார்த்து இனிதிருந்தனர்.

அவ்வமையத்திலே திருவாதபுரேசர் தானைபுடைசூழ, மாமணிச்சிவிகையினமர்ந்து பலருஞ்செல்லப்பெரும்பெருமவீதியிற்சென்று, மறைச்சூத்திரத்திருவாளைவிழுந்து கனாசிறிதுங்காணுறு, வேகமாருதம் விசிபுலைப்ப, சோகவன்னிபட்டகமவருத்த, பறபலதிசைட்டுத்திரிந்தேர்களொன்றுங்காணும், வழியறைபட்டதமகிழ்வுடையோராய், அதனைச்சேர்ந்தாரெலனவே, பாவபுண்ணியபாசவாறறலாறபல்வகைபட்டசுந்தோனறும் ஜனனசமுத்திரத்தினுள்ளேவீழ்ந்து, ஆசையென்னும்பிரபலவாயு வீசிவீசியலைப்ப, நாறுவனைந்தாக வியாகுலமெனனும் அக்கினிமனத்தினைவேக, வருந்தித்திரிந்தவராகிய திருவாதபுரேசர், அகக ரைகளையடைதற்கேற்ற இருவினையொப்புமலபரிபாகஞ் சமபவிக்கப்பெற்று, சிவபெருமானது திருவாசத்தியின்வசத்தால் திருபபெருந்துறையடைந்தனர். திருப்பெருந்துறையின்கண் உளவாகிய விவிதமான சோலைகளையும், பூந்தடாகங்களையும், செங்கெ

ல்வயல்களையும், கன்னல்வேலிகளையும், ஏனைய வள
ங்களையுங் காணுந்தோறும் பேருவ[illegible]யய்தித் திரு
வாதபுரேசர், சிவபிரான்ஞானாசாரிய[illegible]ருமேனிகொ
ண்டெழுந்தருளியிருக்கும் சைத்தியபூஞ்சோலையினை
ருகேசெல்லுங்காலையில், அங்கே சிவபக்த சங்கத்தி
னின்றெழும் நிமலசைவாகமங்களின் அதிமதுரதொ
னி, அவரது சுரோத்திரரந்திர வழிச்சேறலும், மன
முருகி, தேகமெங்கும் உரோமாஞ்சிதமுற்று, எல்லை
யில்லா ஆனந்தந்தலைக்கொள்ள, தமக்குப்பாங்கே
நின்றபரிசனரிற் சிலரைப்பார்த்து "ஏவலாளர்களே!
இச்சத்தம்யாது அதனைஇப்பூங்காவிற்சென்று அறி
ந்துவந்துரைமின்" என்று கட்டளையிட்டனர். திரு
வாதபுரேசர் இட்டகட்டளையைச் சிரமிசைதாங்கி ஏ
வலர்கள் புஷ்பநந்தனவனஞ்சென்று பின்னர்த் தி
ரும்பிவந்து "சுவாமீ! இவ்வுத்தியானமத்தியிலே ஓர்
குருந்தவிருக்ஷநீழலிலே ஓராசனத்தில் வியாக்கிரச
ருமத்திலே, சடாமுடியினராயும், விபூதிருத்திராக்ஷ
மாலிகை விளங்கும் மேனியினராயும், புஸ்தகந்தாங்
கிய கரத்தினராயும், தக்ஷிணாமூர்த்திபோன்ற ஓர் ஆ
சாரியர் வீற்றிருக்கின்றனர். அவருக்கு நாற்புடையி
னும் எண்ணிறந்த அடியார்கள் சூழ்ந்து வீற்றிரு

து யாதோ ஓர் நூலைப் படிக்கின்றனர். இஃது அவர் கள் படனத்தா லுண்டாகும் ஒலி" என்றனர். ஏவ லாளர்கள் இவ்வண்ணம் உரைத்தலும் அம்மஹா னைக்காணும் ஆவலோடு திருவாதபுரேசர் அவ்வாரா மத்திற்சென்று, அகமும் முகமும் அலர்ந்து யா மணிச்சிவிகை நின்றுமிழிந்து; தம்முடன்வந்த பரி சனரையெல்லாம் அங்கணிறுவி, தாமேதனியே ஆ தரத்தோடு செல்லுகையில் அவர்மனசெல்லாம் நெ ருப்பிலிட்ட வெண்ணெயபோலவுருகியது; கண்களி னின்று ஆனந்தபாஷ்பம் தாரைதாரையாய் பொழிந் தது. வலக்கண்ணும் வலதோளும் ஒவ்வொரு துடித் தன. உரோமம்புள்ளியாயின. இங்ஙனம் நிகழலும் திருவாதபுரேசர் சிறிது அதிசயமடைந்து "எனக் கு இம்மஹானைக் காணமுன்னமேதானே ஓர்காலு முண்டாகாத பக்தியுண்டானது. விழியினின்றும் ஆ னந்தவருவிசொரிகின்றது. மெய்ம்மயிர்பொடித்தது. வலதோளும் வலக்கண்ணுந் துடிக்கின்றன. என் மனசு வன்னிபெய்வெண்ணெய்போல வலியழிந்து ருகுகின்றது. என்தேகமும் உணர்ச்சிமுற்றும் சுவா தந்திரியமற்றன. இஃதென்ன அற்புதம்! இங்ஙன ம்நிகழுங் காரணத்தானே இவரோ அடியேனது மல

பாசத்தினையொழித்து ஆட்கொண்டருளும்வண்ண
ம் வந்தருளிய ஞானதேசிகமூர்த்தி. இதிற்சிறிதுஞ்ச
ந்தேகமில்லை,, என்றுசொல்லி வினாவிடைந்து குரு
ந்தவிருக்ஷசமீபஞ்சென்றனர். அவ்விருக்ஷத்தின் கீ
ழுளதான ஓர் பிராசாதத்திலே அதிபாவனமான ஸ்ரீ
பீடத்திலே, வேதங்கள் ஓர்புடையிலும், சிவாகமங்க
ள் ஓர்புடையிலும், புராணங்கள் ஓர்புடையிலும்,
ஆறுபேதமான சமய நூல்கள் ஓர்புடையிலும் தொ
ழிய, வேதங்களாற் பிரதிபாதிக்கப்படும் தருமார்த்
தகாம மோக்ஷவைபவங்களையும், அவ்வேதங்களுக்
கு அதீதமானசித்தாந்தமெனச் சைவாகமங்களிற்பி
ரதிபாதகஞ்செயும் சரியை கிரியை யோகம் ஞானமெ
னப்படும் சதுஷ்பாதங்களையும் நன்குணர்ந்த மாண
வர்கள் வினாவிடைபேச ; சரியையில்வல்ல தொண்
டர்களும், கிரியையில்வல்ல வடியாரும் சிவயோகத்
தில்வல்ல தாசர்களும் ஞானத்தில்வல்ல பத்தரும்
பொலிய ; மூலவேதங்களோதி முடியாதபொருளா
கிய சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய சிவாக
மங்களின் அளவினையறைப்பவராயும், அவற்றின் அ
ர்த்தங்களையுணர்ந்து அவற்றின் மகிமையால் ஆகரு
ஷிக்கப்பட்டு ஆராமைப்படுபவராயும்; அவற்றைக்க

பவராயும்; நித்தியானந்தகாரணமாகத் திருநடனம்பு
ரிபவராயும், அழுதும் தொழுதும் நகைத்தும் அயர்
பவராயும்; ஞானநயனங்களாலே பரமசிவனது திரு
வுருவைக்கண்டு பின்பு இப்பிரபஞ்சத்தினைக் காண
மனமின்றி விழித்தகண்குருடராய்த் திரிபவராயும்;
தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது அடியா
ரும், உருத்திராக்ஷமாலையைச் சிரத்திலுங் காதிலுங்
கரத்திலும் உரத்திலும் கழுத்திலுந் தரித்து, நெற்
றியிலே விபூதி அணிந்து, காஷாயவஸ்திரம் உடுத்து,
வெண்டுகிற்கோவண முடையராயும், கரத்தில[illegible]
ம் சிவஞானபோத புஸ்தகத்தினராயும், காட்டிய சி
ன்முத்திரையினராயும், தண்டிகையினில் விளங்க, ந
வின்ற பஞ்சாக்ஷரோச்சாரணஞ்செய்து, திருவடிக
ளில் பாதுகைசேர்த்தி, புசங்கபந்தனம் விளங்குமயூ
ரகலாபங்கள்பொலிய, யோகாசனத்திலே ஞானா
சாரியர் வீற்றிருந்தமையைக்கண்டு திருவாதவூரர்
குருமூர்த்தியை அன்புநிறைந்த மனசினால் வணங்கி,
வணங்காதவர் போலவும் பெருமிதமுற்றவர்போல
வும் நடந்து, ஞானதேசிகரை நோக்கி "ஐயனே! தே
வரீரது திருக்கரத்துத் திகழ்வுறும் புஸ்தகமியாதெ
னச்செப்பியருளுக" என்று வேண்டினார். அப்போ

து ஞானசாரியா "இப்புஸ்தகம் சிவஞானபோதம்" என்று உத்தரமளித்தருளினர். அதுகேட்டுத் திருவாதபுரேசா" சுவாமீ! சிவமாவதுயாது? ஞானமாவதுயாது? போதமாவதுயாது? அடியேனதுஇவ்வினைகட்குப் பிரதியுத்தர மளித்தருளுவீராயின் முற்காலத்திலே திருக்கைலாசகிரியின் தக்ஷிணசிகரத்தினிருந்த கல்லாலவிருக்ஷத்தின் கீழலிலே சனகர், சனந்தனா, சனாதனா, சனற்குமாரா என்னும் முனிவா நால்வாக்கும உபதேசஞ் செய்தருளும்வண்ணம் தக்ஷிணமூர்த்தியாய் எழுந்தருளிய பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமானே தேவரீர், அடியேனும்தேவரீரது திருவடிக்கடிமையாவேன்" என்றனர்.

அதுகேட்டுக் குருசுவாமிகள் சிவமாவது சமானதிகரகிதமாய் நிற்குஞ் சத்தியப்பொருளே; அப்பொருளையறிவதே ஞானம், அறிந்ததனே உணர்வதுவேபோதம்" என்று திருவாதபுரேசரது புத்தியிற் போந்த ஆசஙகை அகலும் வண்ணங் கூறியருளினர். அவா புகன்றருளிய வார்த்தையைக்கேட்டலும் அதிதீவரபக்குவமடைந்தவராகிய திருவாதபுரேசா "பொன்னம்பலத்தின்கண்ணே சிருஷ்டி ஸ்திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் எனப்படும் பஞ்ச

கிருத்தியங்களும் நடைபெறும் வண்ணம் ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளுஞ் சிவபெருமானே அடியே னை ஆண்டு கொண்டருளும் வண்ணம் திருவுளம் பற்றி ஞானதேசிகத் திருமேனிகொண்டு வந்தனர்'' என்று மனத்திலே நிச்சயித்து, அவரது திருச்சரணபுண்டரீகங்களின் முன்வீழ்ந்தெழுந்து, அஞ்சலியஸ்தராய் "எம்பெருமானே! ! கருணையங்கடலே!' மின்னினும் அநித்தியமுடையனவும், எக்காலத்தும துக்கத்தை விளைப்பனவுமான பிரபஞ்சப்பொருட்களெவற்றிலேனும் அடியேன் விரும்பேன்; தேவரீரது திருவடிக்கமலங்களை யடைந்து, இருவினைப் பற்றினாலே தொடார்ந்துவரும் ஜனனமென்னும் வியசனத்தை யொழிக்கு மாறுபெருங்காதல் கொண்டேன்; ஆயினமையின் எம்பிரானே! தமியேனை இங்கே ஆட்கொண்டருள்க'' என்று பிரார்த்தித்து, முகமெல்லாம் கண்ணீர்முத்தெனச்சொரிய இரங்கிய ழுதுநின்றனர். இவ்வண்ணமே புகன்று திருவாதபுரேசர் அழுதுநிற்கின்றமையைக்கண்டு, அங்கமம் வதிந்த பதத்தசங்கத்திலே சிரேஷ்டரானஒருவர்அவர்க்கு இருவினையொப்பு மலபரிபாகம் சம்பிராப்தமாயதென்று நிச்சயித்து, எழுந்து ஞானதேசிகர் திரு

முனின்று "எம்பிரானே! கருணாசாகரமே! தேவரீர் இவ்வன்பர் மீது திருவருட்கண்செய்து, இவரது வினைகள் யாவற்றையும் அகற்றி ஆட்கொள்ளும் வண்ணம் திருவுளம்பற்றியருளுக" என்று பணிந்து வணங்கினர்.

அதுபொழுது பரமதயாநிதியாகிய ஞானாசாரியார், ஜனனத்திற்கஞ்சிச் சிந்தைவெருவி அதனையொழித்தலையே முக்கிய மனோரதமாய்க் கொண்ட திருவாதவூரர்மேல், திருக்கருணைகடாக்ஷஞ்செய்து, ஆதித்தியனைமுன்னர்ப் பதுமம் அலர்ந்துநின்றாலென்ன, தமக்கு முன்னர் முகமலர்ந்து நின்ற பக்குவரைப்பார்த்து "அன்பனே! நின்னையடிமைக் கொள்ளும் நிமித்தமாயேயாம், இருவினையொப்பும் மலபரிபாகமும் எய்தப்பெற்ற இம்மாணவகுழாத்துடன் இத்தலத்தைச்சார்ந்தேம். நீ பூர்வஜனனங்களிலே மஹாநிஷ்காமமா புண்ணியம்செய்தனை; நின் புண்ணியமே நின்னை சமரக்ஷணைபுரியும், நீயாதொன்றற்கேனும் அஞ்சேல்" என்று திருவாய்மலர்ந்து அந்நாளே அவரையாட்கொள்ளற்குவாய்ந்த நன்னாளாகக்கொண்டு, தமது திருச்சந்நிதியில்வீற்றிருந்த மாணவர்யாவருள்ளும் சிரேஷ்டமானவரொருவரைப்பார்

ர்த்து "மைந்தனே! சிவபுண்ணியம்புரிந்த விவேகியா கிய இவ்வன்பனது வியசனங்கள்யாவையும் விமோசனிப்பித்து, ஞானோபதேசஞ்செய்து ஆட்கொள்ளும வண்ணம் சித்தமுற்றேம, ஆதலின்சைவாகமங்களிலே பிரதிபாதகஞ்செயுமவாறே செயற்பாலனவான யத்தனங்கள யாவையும் நீ விரைவிற்செய்து முடி" என்று ஆஞ்ஞாபித்தருளினர். ஞானதேசிகர் நவின்றருளிய தேனினுந தெளிபாலினுமினிய மதுரவாசகங்கேட்டலும் அவ்வடியார் பேருவகைபூத்து; குருசுவாமிகளது திருக்கருணையை வியந்து அக்கணந்தனிலே அப்பூங்காவினிடையே புஷ்பமாலிகைகளினாலும பட்டுவஸ்திரங்களினாலும் ஓர் ஆலயம சமைத்து, அவ்வாலயத்தின மத்தியில் திவ்விய ஓர் ஆசனமமைத்து, ஞானோபதேசத்திற்கு வேண்டிய சமபாரங்கள்யாவையும் சம்பாதித்துவைத்துப்பின்பு, ஞானாசாரியரது திருச்சந்நிதிசென்று கைகளைச சென்னிமேலேற்றிக் கும்பிட்டு "மனக்கோட்டமுடையார்க்குச் சுவப்பனத்திலுந் தோன்றாதபெருமானே! தூயவகத்தினராய அடியார்கட்கெளிவரும கருணாநிதியே! தேவரீர் ஆனுமதிப்பிரகாரமே ஆலயஞ்சமைத்தது" என்று விண்ணப்பஞ்செய்தன

ர. பின்பு, சூரியாஸ்தமயனமாய், ஞாலமெங்கும் இருட்படலஞ்செறிந்து பதினைந்து நாழிகையாய சகல பிராணிகளும நித்திராவஸ்தை யடைந்திருக்கும் அர்த்தராத்திரியில், திருவாதபுரோசருக்கு மாயாமலம் நீங்கும சமயமசம்பவித்தது.

அததருணத்தைப் பிரதீக்ஷித் திருந்தவராகிய ஞானாசாரியா, திருவாதபுரோசரையாட்கொள்வதற்கு வாயததகாலம இஃதே" என்று மாணவகுழாத்தை விட்டெழுந்து திருமஞ்சனச்சாலைசென்று, குங்குமம புழுகுகஸ்தூரிசந்தனம் முதலிய வாசனைவஸ்துகளை மிசசிரஞ்செய்து, திருமேனியெங்கும் அர்ப்பணஞ்செய்து, பரிமளமூட்டிய குளிர்ந்த தூயகங்காசலததிலே ஸ்நானஞ்செய்து, திருமேனிக்கண்ணுள்ள தான நீரைவஸ்திரத்தினல் துடைத்து, அநர்க்கியமான பட்டுவஸ்திரம் உடுத்து, நவீன ஆலயத்துட் பிரவேசித்து, தென்முகமாக ஆசனத்தின்மேல் வீற்றிருந்தருளினர். அப்பொழுதே திருவாதபுரோசரும் தூயநீரிலே ஸ்நானஞ்செய்து, சுப்பிராம்பரந்தரித்து, திருமேனியிலே திருநீறணிந்து, தமது சிரமிசை இருசரணபங்கயங்களையுஞ் சூட்டிக் கைவல்லிய சுகமளிக்கும் வண்ணம் திருவுருக்கொண்டெழுந்தருளி

யவராகிய ஞானாசாரியரது திருமுன்னிலையிற் சென்று மகிழ்கூர்ந்து நின்று, அவரது திருப்பாதபுண்டரீகங்களை அபிஷேகித்து, முன்னர் அவற்றிற்கு அர்ச்சனைபுரிந்து; பின்னர் பனிநீர்முதலாய வாசனைவஸ்துகள் சேர்ந்த சந்தனத்தை, அவரது திருமேனியெங்கணுமபூசி, மதுகரமுரலும் வண்ணமென்வாசச செங்கழுநீர்த்தாமம சூட்டி, அவரது திருக்கோலத்தை நயனங்கள்கொண்ட அவா நீஙகபபார்த்து, எல்லையில்லாப பேரானந்தங்கொண்டு; ஆதரத்துடனே கைகூப்பிவணஙகி, பருப்பு நாரிகேலபழதது ருவல்சருக்கரை ஆகியவற்றைச் சேர்த்து, பசுப்பாலிலே சமைத்த திவ்வியவமுதினை, ஞானாசாரியர் சந்நிதியில் கனகபீடத்திலே சுவாணபாத்திரத்திற் படைத்து, அதில் நெய்சொரிந்து, வாழைப்பழம மாம்பழம் பலாப்பழம் ஆதியவற்றைச சேர்தது, ஆதரத்துடனும் அச்சத்துடனும், குருசுவாமிகளைப்பார்த்து, "பூர்வகாலத்திலே அரிபிரமேந்திராதியா பிழைக்கும் வண்ணம் ஆலாகலவிஷத்தை யுண்டருளியபெருமானே ! அடியேன் இப்பொழுது தேவரீரது சந்நிதியிலே விநியோகித்த அமுதினையுண்டருள்க" என்று பிரார்த்தித்தலும், காருண்ணியவிக்கிரகமா

யஞானாசாரியர், அன்பரது வேண்டுகோளின்வாறே உண்டு ஜலத்திலே திருக்கரசரோருகங்களைப் பிரக்ஷாலனஞ்செய்தனர். அதன் பின்னர் திருவாதபுரேசர் வெள்ளிலை பாக்குமுதலியவற்றை அர்ப்பணஞ்செய்து கண்டாநாதத்தோடு தூபதீபங்காட்டி, ஞானாசாரியரது திருமேனியிலே திருநீறுதரித்து, தர்ப்பணங்காட்டி, அவரது திருமுடியின்மேற் பட்டுக்குடைகவித்து, வெண்சாமரம் ஆலவட்டம்பற்றி அடியார்கள் பரிவுடன்சூழ, திருவாதபுரேசர் நனிமலர்ந்த காதலத்தோடு, குருசந்நிதியிலே இனிது வீற்றிருந்தனர்.

அவ்வேலையிலே, ஞானாசாரியர், பதினோர்மந்திரங்களும், எண்பத்தோர்பதங்களும், ஐம்பத்தோரக்ஷரங்களும், இருநூற் றிருபத்துநாலு புவனங்களும், முப்பத்தாறு தத்துவங்களும் ஐந்துகலா பேதங்களும், ஆறு அத்துவாக்களும், அகற்றி, மனோதீதமான சிவத்தோடு அறிவுசேரப் பாசபந்தம் நீங்கப் பெறுபவராகிய திருவாதபுரேசர்மேல் இரங்கி கிருபாகடாக்ஷஞ்செய்து, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஸ்தூலரூபமாகவும் சூக்ஷுமரூபமாகவும், அவரது செவிவழியே உபதேசித்து சாக்ஷுஷதீக்ஷை செய்தருளினர். திருவாதபு

கோசரது சகலபவனங்களும் ஞானதேசிகரது அடியக யோகத்திறலே தீபத்தின்முன்னர் அந்தகாரம்போலடங்கின. அதுபொழுது திருவாதவூரடிகள் தேசிகசுவாமிகளது திருவடிக்கமலத்தின்கீழ் வீழ்ந்தனர், ஆனந்தமுற்று வாழ்ந்தனர். அதன்பின் குருசுவாமிகள் வேதசிரங்களுக்குமதீதயான தமது திருப்பாதங்களிணையையும், சந்தோஷத்தோடு, அன்பரது சென்னியிற்சூட்டினர். உடனே அவர்க்கு சம்சாரவாசனை அகன்றது. அநாதியாயிருந்த பசுகரணங்கள் அனைத்தும் மாண்டன. மித்தியாஞானமயாவும் ஒழிந்தன. சிவகரணங்களும், அவற்றின் பயனாய சுஞானமும் சுகவிந்துவமும், சுகவறிவும் ஜனித்தன. இங்ஙனந சம்பவித்தலும், திருவாதவூரடிகள், தமது சென்னியின் மீதிருந்த குருசரணாரவிந்தங்களை, இருநயனங்களினும் சேர்த்தினர்; இருகரங்களாலும் மார்பிலணைத்தனர். பின்னர் மஹானந்தத்தோடும் சத்தியஞானத்தோடும் எழுந்து நின்றனர். அப்போது சுரசமூகத்துடன் தேவேந்திரன் பஞ்சதாருக்களினக ந புஷ்பங்களை வருஷம்போலப் பொழிந்தனன். பஞ்சதுந்துபிகள் ஆர்த்தன. அடியார்கள் ஆனந்தாவேசமுற்று நடனம்புரிந்தனர். எண்ணிலலா

ஞானசாரியர்க்கு இருபுடையினும் சாமரம் வீசி னா; ஆலவட்டமசைத்தனர். இன்னணம் நிகழவீற றிருந்த ஞானதேசிகரது சந்நிதியில் வீழ்ந்திறைஞ் சி, சிரதநினில் இருகரங்கூப்பி, வெயிலிடைப் பட்ட வெண்ணெயேபோல உருகுகின்ற மனசினராய் தி ருவாதவூரடிகள் "பிரம விஷ்ணுக்களுக்குங் காண் பரியபெருமானே! தேவர்கள் முனிவாகள் தொழுத றகரியபிரானே! ஒன்றற்கும் பற்றுத சிறியேனது ப வங்கள் யாவையுங் வீட்டி, மேலாம்பதத்தில் நாட் டி யருளுதற்கா இத்தேசிகத்திருமேனிகொண்டு எ ழுந்தருளினீர்? என்பிதாவே! என்னையடிமைகொ ண்டருளிய ஆதிகர்த்தர்வே! மான்மழுத்திகழும தி ருக்கரமுடையாரோ! காலனையுதைதத திருவடியின ரோ! என்குலதெய்வமே! பொய்யர்க்குப் பொய்ய னே! மெய்யர்க்குமெய்யனே! மந்தனதாருவில் வன் னிபோலவும், பாலினில் நெய்போலவும் மறைந்து நிற்பவரோ! அன்பெனும் பாசமிசித்துட் பற்றுவார்க் கு எளிதில் வெளிவரும் கருணாமூர்த்தியே! போற் றி! போற்றி" என்று புகன்று அழுதுநின்றனர்.

அன்றிராவி னிருள்நீங்கி பிராமியமுகூர்த்தமா தலும் திருவாதவூரடிகள் ஞானசாரியது திருமேனி

சந்தனாதிபரிமளவஸ்துகள் நறும்புஷ்பமாலிகை என்பனவற்றின் பாரந்தாங்கலாற்றாதென்றிரங்கி, அவற்றைநீக்கி, மனத்துயர்யாவுமகன்று அடியார் குழாத்திடை விளங்கினர். பின்பு சூரியோதயமாதலும் ஞானதேசிகர் திருவாதவூரடிகளுக்கு நிமலாகமங்களின் அர்த்தங்களைப்போதனைசெய் தருளுவாராயினார். "வாராய்மகனே! செம்பினிற்பற்றியகளிம்பு போலவே நின்னைப்பற்றியமலம், எதிரபபட்டவஸ்துகளின் வண்ணங்களைப் பொருந்துகின்ற ஸ்படிகம்போலிருக்கின்றது. அம்மலவாசனை காரணமாக எண்ணில்லாத ஜனனமெடுத்து உழன்றனை. நீபிறந்த புவனங்கடோறும் யாம்நின்று நினது புண்ணியபாவங்களுக்கேற்பச் சுகதுககங்களை நுகர்வித்தேம். நீ அவற்றை நுகர்ந்து மனக்கோட்டங்காரணமாக மீட்டும் பிறவிக்கு விததுண்டாக்கித் திரிந்தனை. ஆன்மாக்கள் புரிந்த புண்ணியபாவங்களுக்கேற்ற பிரயோசனமான சுகதுக்கங்களை யாம் நுகர்விப்பதென்னையோ? என்று சந்தேகிப்பையேல் அதனை நிராகரணஞ்செய்வேம், கேள், நினக்குச் சர்வஞ்ஞத்துவமேயில்லை; ஆதலின் இக்காலத்திலே இஃது நுகரற்பாற்று, இஃது அடையற்பாற்றுஎன்று அறியநீவல்லை

பலலே, நினது வினைகள் நின்னையறிந்து சேரும்வ ண்மையினவல்லவா என்று சந்தேகிப்பையேல் அச சந்தேகம் ஒழிப்போம்,கேள். வினைகள் சடமாதலா ல அவற்றிற்கு அவ்வகையான சக்தியின்று. ஆத லில் நின்னையும் நின்வினைகளின் பயனான சுகதுக்க ங்களையும் உணர்ந்து சர்வஞ்ஞத்துவமுடைய நாம அவற்றை நின்னைக்கொடு நுகாவித்து, மெய்ஞ்ஞான மளித்து, மலவாசனையகற்றி, கைவல்லியசுகம் நின னையனுபவிப்பித்தல் அதியாவசியகம். இம்மலவாச னையை யார்க்கும ஒருங்ககற்றி யாம் அவரையெல் லாம மோக்ஷசுகம் அனுபவிப்பியாது இருங்காரண மென்னையோவென்று சந்தேகிப்பையேல், மகனே கேள் ! யார்யார்க்கு பாவபுண்ணியங்களின்பலன் து லைத்தட்டிலிட்ட சமபாரமுள்ள இருபொருட்கள் போல் சமமுறுகின்றனவோ அவ்வவர்க்கே மலபரி பாகம் சம்பிராப்தமாகும். அக்காலம்வரை தெய்தப் பெறுதோர், அஃது வருங்காலபரியந்தம் வருந்தி, ம யங்கி, ஜனனமென்னும் மஹாசாகரமத்தியில் வீழ்ந் துஉலைவர்; அவர்களது பவபந்தனை யொழியுங்காலத் தைப் பிரதீக்ஷித்திருக்கும் எம்மையேனும், ஜனன மரணவேதனைப்பட்டுலையுந் தம்மையேனும் அக்கால

மளவும், விசாரியார்கள். இருவினையொப்புமலபரிபா கம எப்போதுகூடும் என்றுகேட்பையேல் உத்தரம ளிப்பேங்கேள். ஒருவன்யாம்வசிக்கும்க்ஷேத்திரங்க டோறும்யாத்திரைசெய்துபுரியுஞ்சிவபுண்ணியத்தி ன்பலன் எப்போது அனுபவிக்கநிகழுமோ, அப்போ தே இப்பருவம் வந்துகூடும். நமக்குளவாகிய ஸ்வரூ பமூன்றுண்டு, அவைஉரூபம் அரூபம, உரூபாரூபம எனபனவே. அவற்றுள் உரூபம் நினது நயனேந்திரி யத்திறருக் கோசரமாகிவந்த இக்குருவடிவம். அரூ பம, ஆதிமத்தியாநத வாசசிதமாய், சாவாந்தரியாமி த்துவமஎய்தி, சகலான்மாககளதும பாசவோகளை ந்து அவாங்மனகோசரமாயிருப்பது. உரூபாரூபம், சகலரும்வந்து வணங்கற்கெளிதாய் ஆன்மாககள் வெஃகியவரங்களெல்லாம் அளிததருளும சிவலிங கவடிவமே. சாலோக சாமீப சாரூப சாயுச்சியமெ ன நமபதம் நான்குள. நமபொருட்டு நந்தனவனம வைத்தல், அவ்விருக்ஷங்களின் மலாபறித்தல, மலா களாலே பலவகை மாலைதொடுத்தல், ஓயாது நம து கீர்த்தியைப் புகலல், யாம் வசிக்கும் ஆலயம் ப ரிஷகரிததல், கோமயலேபனஞ்செயதல், அங்கே தீ பமேற்றல், நம்மடியார்க்குத தொண்டுசெய்தல் என

பனவாதியான் சரியையை அனுசரிப்பவர் சாலோக பதமடைவர். கந்தவர்க்கங்களும், தூபதீபங்களும், திருமஞ்சனமும், புஷ்பமும், ஏனையபூசனைசம்பாரங் களும், சம்பாதித்துக்கொண்டு, மாயாவசப்பட்ட கு ணஞ்சிறிதுமின்றி, பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திர சுத்தி, ஆத்துமசுத்தி, இலிங்கசுத்தி எனப்படும் பஞ் சபவித்திரீகரண கிருததியங்கள் முடித்து, மனம் வாக்குக்காயம் என்னும் திரிகரணங்களாலும் நம் மைவந்தித்து, ஆக்கினிகக்கடன்கழித்து சைவாகம பிரகாரம் ஒழுகலாகிய இக்கிரியையை யியற்றவல் லவர் சாமீபபதம்அடைகுவர். இராஜசதாமசசாத்து விகமென்னும் திரிகுணங்களையும், சப்தஸ்பரிசரூப ரசகந்தமாகிய பஞ்சேந்திரிய நுகர்வையும் அடக்கி, மூலவாயுவை யெழுப்பும் வழிகளாகிய இடைபிங்க லையிரண்டையும் அடைத்து, சுழுமுனைவழியைத்தி றந்து, நமது நடனச்சிலம் பொலியுடன்போய், பஞ் சாக்ஷரங்களும் ஏகாக்ஷராகாரமாயிருக்கும் தன்மை கண்டு, நாதமுங்கடந்தவெளியிலேபுகுந்து மஹாநு பவமடைந்தவர்கள் நமது சாரூபபதமடைவர். பல்வ கைப்பட்ட கலாசமூகங்களையும், சதுர்வேதங்களையு ம், சட்சமயசாஸ்திரங்களையும், சைவாகமங்களையும்

நன்குணர்ந்து, அந்தஞானவாற்றலானே பதிபசுபாசம் என்னும் திரிபதார்த்தலக்ஷணமே பிரதானமெனக் கொண்டு, விஷயங்களின் மதிமருண்டு திரிதலையொழிந்து, சிவபோதம் விருத்தியாகப்பெற்றுத்திகழுமமனசுடைய மஹான்களே நமது சாயுச்சியபதமடைவார்கள். சைவசின்னங்களாகிய விபூதிருத்திராக்ஷமாலை பூண்டவர்கள், பொல்லாவுருவினரோனும், இழிகுலரோனும், ஞானுசாரமற்றவரோனும், நம்மிடத்துப் பக்தியில்லாரோனும், அவரை, அவர்பூண்டசைவவேடத்தினிமித்தஞ் சம்பாவித்து, அவர்முன் வீழுந்து, வணங்கி அமுதருத்தி அவர்க்கடியவராகித் தமமையடியார்க்கடியனெனப் புகலுபவர் அகங்கார மமகாரங்களை அறுப்பர். மகனே! நானாபேதமாய்விரிந்துகிடந்த நினது சஞ்சிதகன்மங்களெல்லாம் நமது சாக்ஷாத்தீக்ஷையால் நீங்கின. நினது பிராரத்தகன்மம் இத்தேகத்துடனொழிந்துபோம். நமது அருள் ஆகாமியகன்மங்களையகற்றும். உன்னுடையனவென்றுபுகலும் உடல்பொருளாவிமூன்றும் நம்முடையனவே. இன்று நினக்கு யாம்காட்டிய குருவடிவத்தை எக்காலத்தும் தியானஞ்செய்துகொண்டிரு. இவைகளே யாங்கூறும் ஆகமமுக்கிய போதனைகள்" என்று ஞா

ஞசாரியர் திருவாய்மலர்ந்தருளலும், அவரது அம லவாசகங்கேட்டுஅகங்களித்து,திருவாதவூரடிகள் அ வரது திருப்பாதாரவிந்தங்களின்கீழ் வீழ்ந்து நமஸ் கரித்து எழுந்துநின்று "எம்பெருமானே தேவரீர்பி த்தனுகிய அடியேனிழைத்த பிழைகளனைத்தையும பொறுத்து அனுக்கிரகம் செய்தருளினமை தேவரீ ரது பெருங்கருணைத்திறத்தையே காட்டுகின்றது. அடியேனைஎக்காலத்தும் இரக்ஷித்தருளுக,பிரானே! என்னுடையனவென முன்னெண்ணப்பட்ட உடல் பொருளாவியாகிய மூன்றும் நும்முடையனவேயாக அர்ப்பணஞ்செய்தேன்"என்றுரைத்துஉருகித்தமது மேனியினிருந்த ஆபரணம் பீதாம்பரம் பட்டுவஸ்தி ரம் குதிரைகொள்ளும்பொருட்டுக்கொடுபோந்த திர வியங்கள் ஆகிய யாவையும் ஞானசாரியரது திரு முன்னிலையில்வைத்து வணங்கினர்.

அப்போது ஞானதேசிகர் திருப் புன்முறுவ லோடு முகமலர்ந்திருந்தனர். பின்பு ஞானசாரியா தம்முன்னர் நின்ற அடியாருள் சிரேஷ்டமானவ ரொருவரைப்பார்த்து "அன்பரே! இப்பொருளையெ ல்லாம் நமது ஆலயத்திருப்பணிக்கும், மாதவர்க்கு ம், ஆதுலர்க்கும்வழங்கி வியயஞ்செய்யும்"என ஆஞ்

ளைுசெய்தருளினர். ஞானதேசிகரது திருவாஞ்ஞை யைச் சிரத்தையுடன் சிரத்தின்மீதுகொண்டு, அவ்வடியவர் அவ்வாறேவியயஞ்செய்தனர். இவ்வண்ணமங்கழலும் ஞானமாகிய மருந்துண்ட திருவாதவூரடிகள் பாசப்பிணியகலப்பெற்று, ஜீவனமுத்தராயினர். முத்தவெண்குடைகவிப்ப மாமணிச்சிவிகையினிவர்ந்து சர்வாபரணம் பொலியுந்தேகத்தினராய் வந்த திருவாதவூரடிகள், அவற்றையெல்லாம பரித்தியாகஞ்செய்து, மேனியெங்கும் வெண்ணீறணிந்து, உருத்திரமணிபூண்டு, கௌபீனவுடையராய், ஆனந்தவருவி நிரந்தரஞ்சொரியுங் கண்களுடன் ஞானதேசிகரைப்பார்த்துநிற்பர்; அழுவர், தொழுவர், விழுவர், எழுவர், பின்செல்வர், முன்போவர்; நடிப்பர்; பரன்புகழ்படிப்பர்; இவ்வாறுநின்று, எங்கும்பரஞ்சோதிரூபங்காணுங் காரணத்தினலே, இராப்பகல்களின்பேதம் தெரியாது, பித்தர், பாலர், பிசாசர்ஆகிய இவர்தன்மையடைந்தவராய் இருந்தனர்.

திருவாதவூரடிகள் இந்நிலைமையராயினமையைப்பார்த்து, அவரது பிரதானபந்துக்களும சைனியவீரர்களும் சகித்தற்கொண்ணுப் பெருந்துயருற்று "அரிமர்த்தனபாண்டிய மஹாராஜனது சிரோஷ்ட

மந்திரியாகிய திருவாதபுரேசர் இராஜகாரியஞ்செய்த லையொழிந்து, சிவபகதசங்கத்திற்சேர்ந்து இங்ஙனமாயி னரோ! ஐயையோ! இச்சமாசாரம் மஹாராஜனதுசெ விப்புலமுறில் அவன் அழல்வாய் நாகம்போற்சீறிச சினந்து இவர்க்குத் தண்டஞ்செய்வான். அங்ஙன ஞ்சம்பவிததக்கால் இவர் யாதுபுரிவர்? மஹாராஜ னது திரவியசாலையிலிருந்து அளவின்றிய தனஙகொ டுவந்தனரோ ; அதையெல்லாம சிவனடியார்க்கு வழ ங்கிச் செலவழித்தனரோ, மஹாராஜனுக்குக் குதிரை கொள்ள யாதுபுரிவர்? அறிகிலேம். ஐயையோ ! வீ ணாக இவ்வடியாருடன் சேர்ந்து, திரவியத்தையெல் லாம்போக்கினரோ. நாம்யாதுசெயவல்லேம்?" என்று பலவாறுபுலம்பிப் பின்புயாவரும் ஒருஙகுசேர்ந்து தி ருவாதவூரடிகள் திருமுன்னிலையிற்சென்று அஞ்சலி யஸ்தராய வணங்கிநின்று "சுவாமீ ! நீர் பாண்டியும ஹாராஜனுக்குக் குதிரைகொள்ளும்பொருட்டன்று அளவில்லாத் திரவியங்கொண்டு ஈண்டுவந்தீர்? அ ஙஙனமாகவே இராஜகாரியஞ்செய்தலில் மனவூக்கங் கொள்ளலையொழிந்து, அவனது, திரவியத்தையெல் லாம வீணேசெலவழித்தமை சிரேஷ்டமந்திரியாகி யநுமக்குத் தகுதியன்றே; இராஜனது பிரதானபுரு

ஷரான நீர் இவ்வாறு உதாசீனத்தோடிருப்பில் நும் துஆஞ்ஞைப்படியே ஒழுகும் பண்பினராய நாமெல்லாம் யாதுபுரியவல்லேம? சுவாமீ! அடியேங்கண் மேற் கருணைகூர்ந்து எங்களுடன் வந்தருள்க" என்றுபலவாறு பிரார்த்தித்தனர். அதுகேட்டுத் திருவாதவூரடிகள் சிறிதுகோபமுற்று அவரையெல்லாமபார்த்து "அஞ்ஞானாந்தகாரம நிறைந்தசிந்தையீர்! நீவிரெல்லீரும் யாவர்? நுமக்கும் எனக்கும் யாதுசம்பந்தமுண்டு? இனி என்முன்னின்று மாயாபேதமான இப்பொய்ம்மொழிகளெல்லாம் பகரன்மின்; எனைவிட்டுத் தூரத்தே அகலுமின்" என்றனர்.

இவவண்ணம் திருவாதவூரடிகள்கூறலும் அவர்கள்யாரும அதிவியசனமுற்று, பிரலாபித்து "ஐயையோ! இனியாம் யாதுசெய்வேம்? யாம்சொல்வதை புத்தி கேட்கின்றிலர், தாமேனும் கிரமப்படிநடக்கின்றிலர். எங்களைத்தூரத்தே ஓட்டுகின்றனர். எங்களாலியன்ற தந்திரமனைத்தும் பிரயோகித்தேம்! அவற்றிலொன்றேனும் பயனுடைத்தாயிலதே. இனியிவ்விடத்துக்கலங்கிநின்றழுதலால்யாதும்பிரயோசனம இல்லை. நாமனைவரும் அரிமாத்தனபாண்டிய மஹாராஜன்சமீபஞ்சென்று, ஈண்டுநிகழ்ந்தவிருத்தாந்தம

கள் யாவற்றையும் தெரிவிப்பதே சூக்ஷி" என்றுநி ச்சயித்து மதுராபுரிக்குச்சென்றனா. மதுராபுரிசே றலும் பாண்டியமஹாராஜனது சமூகத்துச்சென்று அவர்களெல்லாம் சிரமிசைக் கரதலங்கூப்பி, இராக் காலத்துத் தாமரைத்தடாகங்கள்போலவே சோபை குன்றிய முகத்தராயும், கவல்கின்ற உளத்தராயும், விதிர்க்கும் மேனியராயும், அரிமர்த்தனனைப் பார்த் து "இராஜசேகரமே! உமது நாமந்தரிக்கப்பெற்று, உமக்குப்பிரதியாய் இராச்சியபரிபாலன கருமஞ்செ யுஞ் பதம்பெற்றவராகிய திருவாதபுரோசரது செயல் களையெல்லாம் உமதுசந்நிதியில் அச்சமின்றிக் கூற வல்லேமா? மஹாராஜனே! கேட்டருள்க, திருவா தபுரோசர் உமதுவிடைபெற்றுத் திருப்பெருந்துறைக் குச் சென்றபின்பு, அவ்விடத்துளதான ஓர் பூஞ்சோ லையிலே, குருந்தவிருக்ஷத்தி னிழலிலே, விபூதிருத் திராக்ஷமாலை தரித்தவராயும், சிவபிரானது திருநா மத்தை இடைவிடாது உச்சரிக்கும் வாயினராயும், ஆனந்த பாஷ்பஞ்சுரக்கும் கண்ணினராயும், புஸ்தக ங்கள்தாங்கிய கரத்தினராயும் அனேகஞ் சீஷர்கள் சூழ்ந்திருக்க, நக்ஷத்திரக் குழாத்தினிடையே சந்தி ரன் பிரகாசிப்பதுபோலவே, அவ்வடியார் குழாத்தி

னிடையே ஓர் திவ்விய ஆசனத்திலே வியாக்கிராசி னத்தின்மீது ஓர் தாபதர் வீற்றிருந்தமையைக் கா ண்டலும், உமது மந்திரியார் மாமணிச்சிவிகை யினி றிழிந்து, நீலமேகத்தைக்கண்ட மாயூரசமூகம்போல வும் சந்திரோதயங்கண்ட சகோரங்கள்போலவும், ப ரமானந்தமடைந்து, செய்வது யாதென்றறியாது, கைகூப்பிக்கும்பிட்டு, அத்தாபதருடனே பிரீதியாய ச் சிலவார்த்தைபேசி, "சங்கரா! சிவனே! காளக ண்டா! சந்திரசேகரா! பக்தவற்சலா" என்று தோ த்திரஞ்செய்து, அவரது பாதமிரண்டையும் தமது சென்னியிற்சூடி வந்தித்து, குதிரைகொள்ளும்பொ ருட்டுக் கொடுபோந்த திரவியங்களையும் ஆடையாப ரண முதலியவற்றையும் மனமுவந்து அவர்க்கீந்து, இராஜர்களது பிரதானபுருஷர்களுக் குரியனவாய பீ தாம்பரம் வெண்பட்டு சுவர்ணாபரண மாதியவற்றை இகந்து, கௌபீனவுடையுகந்து, சிரசிற்சிகையைவிரி த்து, மேனியெங்கும் திருநீறணிந்து பஞ்சாக்ஷரத தை ஓயாமல் உச்சரித்துக்கொண் டிருக்கின்றார். "சு வாமீ!! இராஜகாரியஞ்செயும் நம்போலியோர்க்கு இச்செய்கை தகுதியன்றே" என்றுசொன்ன எங்க ளையுங்கோபித்துத் துரத்திப் பித்தர்போல இருக்கி

ன்றூர்: இவையே திருப்பெருந்துறையில்நிகழ்ந்த வி ருத்தாந்தங்கள்" என்றனர்.

இவ்வார்த்தைகேட்டலும் கோபாக்கினியினு லே அரிமர்த்தனபாண்டியமஹாராஜனது கண்கள் சிவந்தன; உதடுகள் துடித்தன; மேனியெல்லாம்வெ யர்த்தது; அவன் சமீபத்தேநின்றோர் யாரும் அஞ் சியகன்றனர். சிறிதுபொழுதுகோபாவேசத்தினுலே யாதும் உரையாடாதிருந்து, பின்னர் ஒருவாறு மன ந்தேறி "பூமண்டலாதிபதிகளுக்கு இத்தகைய மந் திரிகள் இருப்பின் திரவியம் சேனைமுதலியவற்றில் யாதுதான் இராது" என்று அட்டகாசஞ்செய்தன ன். பின்னர் ஓர் பத்திரிகை வரைந்து தன் தூதுவர் கையிற்கொடுத்து "சாரணரே! நீவிர் வாயுவேகமும ம‌னோவேகமும் பின்னிடவிரைந்து திருப்பெருந்து றைசென்று, மஹாதிரவியத்தை அபகரிக்கவிரும்பி க் கெடுமதியுரைப்பார் சொல்லால் மருண்டு கையி லிருந்தபொருளெல்லாம் இழந்து பித்தர்போல் நடி க்கின்ற திருவாதபுரேசருக்கு இப்பத்திரிகையைக் காட்டி, அவரைப்பிடித்து ஈண்டு சீக்கிரம்வாருங்க ள்" என்று ஆஞ்ஞாபித்து அனுப்பினன். அனுப் பலும் தூதுவர் அதிவேகமாய்ச்சென்று திருப்பெ

ருந்துறை அடைந்து, அங்கே அழுதகண்ணும் தொழுதகையுமாய், பரானந்தப் பரவைமூழ்கியிருக்கின்ற திருவாதவூரடிகளைககண்டு அவரது பாதாரவிந்தத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து "சுவாமீ! இஃது அரிமாத்தனபாண்டியமஹாராஜன் அனுப்பியபத்திரிகை" என்று அவரது திருமுன்னிலையில்வைத்தனர். அதுபொழுது திருவாதவூரடிகள் உதாசீனராய், அதனைச் சாதாரண ஜனங்களனுப்பிய பத்திரிகைபோலவே எண்ணி,ஒருவனைக்கொண்டு வாசிப்பிக்க "அரிமாத்தனபாண்டியன் தென்னவன்பிரமராயனென்னும மந்திரிக்கெழுதுவது———என்திரவியசாலையிலிருந்து குதிரைகொள்ளும்பொருட்டு எண்ணில்லாத திரவியம வாரிக்கொண்டு திருப்பெருந்துறை சென்றீரே; அத்திரவியத்தை யெல்லாம் வீணே வியயஞ்செய்து, குதிரைகொள்வதற்குப் பிரதியாய்க் கௌபீனவுடைதரித்து, பித்தர்கள்போலே நடிப்பது உமக்குத்தகுதியன்றே. இதுவாநுமதுகல்வியினாலே நீரடைந்தபயன்? நன்று நன்று. இராஜர்களாய்ப் பிரஜாபாலனஞ்செய்வதினும், உதராக்கினிதணிக்கும் பொருட்டு வீடுகள்தோறும் யாசிப்பது மேன்மையா? முக்கியசகாயர்களா யிருந்த இராஜர்களுக்குப் பிழைசெ

ய்து, அவர்கள் சித்தத்திற்குப் பிரதிகூலமான கரு மஞ்செய்வது தகுதியா? இதுவா பாலியவயசுதொ டங்கி நீர் அல்லும்பகலும் அதிக பரிச்சிரமமுற்றுப் படித்தகல்வியால் அடைந்தபிரயோஜனம்? அரசாக ளை அடைந்து வாழுதல் கொடியசாப்பத்துடனே வாழுதல்போலும் எனுந்துணிபு உமக்குப் புலப்பட் ட விஷயமாயின், இப்பத்திரிகை கண்டகணததேதா னே சிறிதுந்தாமசஞ்செய்யாது, இத்தூதர்களுட னே எனது இராஜதானியாகிய மதுராபுரிக்குவருக" என்று எழுதியிருத்தலைக்கேட்டலும் திருவாதவூர டிகள திருவுளத்தே சிறிது வெகுண்டு "எம்மை அ டிமைக்கொண்டருளிய கிருபாசமுத்திரமான சிவ பிரானது அடியார்க்கே நாம் அடிமையன்றி வேறி யார்க்கேனும அடிமையல்லேம்; அங்ஙனமாகவே, அரிமர்த்தனபாண்டியன்தான் எமக்கு முதல்வனெ னறும், தனக்குயாம பிழைசெய்தேமென்றும் சொல் வதுஎனனேயோ?" எனத் திருவுளத்தெண்ணி; "எம மையாட்கொண்டருளிய திருவருட்கடலாகியபரமசி வனது பலததினலே காலனேனும்யமதூதுவரேனும தருமராஜனது ஓலைகொண்டு எம்முன்வருதற்கு அ ஞ்சியலைந்துலைவரோ ; அவ்வாருயின், திரிபுரசஙகாரி

யாகிய சிவபெருமானது அடிமையாகிய நாம் யார்க்
கேனும் அஞ்சுதல்தகுதியா ?" எனச்சொல்லி, சோ
மசுந்தரக்கடவுளையும் மீனாக்ஷிதேவியையும் மனத்தி
லேதியானித்து, பின்புதமது பாசபந்தமகற்றி அடி
மைக்கொண்டருளிய ஞானாசாரியரது திருச்சந்நிதி
சென்று, அவரது திருவடிக்கமலங்கள்முன் வீழ்ந்
து நமஸ்கரித்து எழுந்து பத்தியுடனின்று "எம்பெ
ருமானே! அரிபிரமாதியர்க்கெட்டா அரும்பொரு
ளே! இடபகேதனனே! வெயிலிடைப்பட்ட புழுப
போல் நாயினேன் பாசவல்லிடர்ப்பட்டு வருந்துத
லைக்கண்டு, அதனையொழித்து அடிமைக்கொண்ட
ருளும் பொருட்டுத் திருமேனிகொண்டருளிய பிரா
னே! ஆன்மாக்களனைத்தும் கதியடையும்வண்ணம்
நிமலாகமங்களைத் திருவாய்மலர்ந்தருளிய கருணாசா
கரமே! மெய்யர்க்குமெய்யனே! பொய்யர்க்குப்பொ
யயனே! சிருஷ்டிஸ்திதிசங்காரம்திரோபவம்அனுக்
கிரகம் எனப்படும் பஞ்சகிருத்தியங்களும் நடைபெ
றும்வண்ணம் ஆனந்தநிருத்தம் புரிந்தருளுஞ்சுவா
மீ! அடியேன் இப்போது யாதுபுரிவேன்; அரிமர்த்
தனபாண்டியன் குதிரைகொள்ளும் நிமித்தம் கொடு
த்த திரவியங்களையெல்லாம் தேவரீரது ஆஞ்ஞைப

படியே; உமதுதிருவாலயத்திற்கும் உமது அன்பர்க்கும் மனப்பூர்த்தியுடன்வழங்கினேன் ; அப்பொருளில்திலப்பிரமாணமேனும் என்கையிலில்லை; அரசன் குதிரைகளை யனுப்பும்படி அடியேனுக்குப் பத்திரிகை விடுத்தனன்; குதிரையனுப்பாக்கால் கொடும்நாகம்போலச் சீறுவன் ; இதனைஎண்ணி எண்ணி வலையிடைப்பட்ட மான்பிணைபோல் மனமேலாமவருந்தி மயங்குகின்றேன் ; திருப்பாற்கடல்கடைந்த காலத்துத் தேவர்கள்யாரையும் இரக்ஷித்தருளத் திருவுளமபற்றி ஆலகாலவிஷத்தை யுண்டருளிய பிரானே, உம்மடிகளையே கதியெனநம்பி யிருககும் அடியேனுக்குற்ற இடரைநீக்கி அருள்க" என்றுபிரார்த்தித்தனர்.

அச்சமயத்திலே ஆகாசத்தினின்றும் " எம்அன்பனே! காம்பீரிய மில்லார்போலவே நீமனக்கிலேசமடைவதென்னை ? குழந்தாய்! அப்பா ! சிறிதும் அஞ்சேல் ; மகனே மாணிக்கவாசகா நீ கவலைகள் யாவும் ஒழிந்து இக்கணத்தேதானே அரிமர்த்தனபாண்டியனுக்குப் பத்திரிகையனுப்பு. சகலருமநின்பெருமையை வியந்தோதும்வண்ணம் நாமே குதிரை கொடுபோந்து பாண்டியனுக்குக் கொடுத்து

ழீள்வேம். யாம் நின்பக்ஷத்தில் எக்காலத்தும்நிற்கின்றேம்; நீ ஸ்திரசித்தனுகு'' என்று மனோகரமான வார்த்தையொன்று கேட்டு, தீனாக்ஷகராகிய சிவபெருமானது பெருங்கருணைத்திறத்தை நினைந்துநினைந்து மனமெல்லாம் நெக்குநெக்குருகி "அரிபிரமேந்திராதியரது கனவினிலும் தோன்றியருள்புரியாத எம்பெருமான் அடியேனுக்கு இப்போதருளியமை அவர் அடியார்க்கெளிய ரொன்றும பேரருட்டிறத்தினை நனிவிளக்குகின்றதே'' என்று பரமசிவனது பெருங்கருணையை வியந்தோதி ஞானாசாரியரது திருச்சந்நிதிநின்றும் அகன்று, அரிமாத்தனபாண்டியனது தூதர்முன்சென்று "மஹாராஜனே நான் அறுபத்தைந்து தினத்துள் உமக்குகுதிரை கொணருவேன்; அதற்கு முன்னேதானே, அக்குதிரைகட்கேற்ற மந்துராகள் சமைக்கவும், தடாகங்கள் கல்லவும், மதுராபுரிவீதிகளை அலங்கரிக்கவும், ஆஞ்ஞைசெய்வீராக. என்மேல் மாற்சரியமுற்ற தீயரது வார்த்தைகளை விசுவசியீராக; என்மீது உமக்கு முன்னிருந்த விசுவாசம் இப்போதும இருக்குக'' என்று ஓர்பத்திரிகைவரைந்து அவர்கள் கைபிற்கொடுத்து மதுராபுரிக்கனுப்பினர் திருவாதவூ

ரடிகள். தூதுவர்கள்போனபின்னர், ஞானபத்திய டையரோனும் திருவாதவூரடிகள் மனச்சஞ்சலமீதூ ரவிருந்தனர்; அப்போது சப்தவாசிகள் பூண்டதே ருடனே திஞதிபதியாகிய சூரியன் மேல்கடலில் அ ஸ்தமயனமாயினன்; அப்போது அவர்மனசில் துய ரப்பாந்தாரம்போலப்பூமியெங்கும் அந்தகாரம்பரந்தது. சிறிது பொழுதின் பின்னர் குமுதினிநாயகனுகிய சந் திரன் கிழத்திசைக்கடலில் உதித்து, கிரணகரங்க ளால் இருட்குழாமனைத்தையும் போக்கினன். மனோ கரமான சந்திரப்பிரகாசத்தினலே சகலபிராணிக ளும் ஆனந்தமடைந்தனவேனும் திருவாதவூரடிகள் மனேஞையாகுல மேற்கொண்டு, திருமுகமெங்குஞ் சோகபாஷ்பஞ்சொரிய, சிவபெருமானது திருச்சர ணபுண்டரீகங்களை இருதயத்திற் றியானித்து, யாவ ரோடேனும் உரையாடாது துயின்றனர்.

அங்ஙனமே துயிலுகையில் வெள்ளியம்பலத் திலே நர்த்தனஞ்செய்தருளும் கருணமிர்தசாகரமா கிய சிவபிரான் குருந்தவிருக்ஷத்தடியி லெழுந்தரு ளிய திருஞானதேசிகத் திருவடிவோடு, திருவாதவூ ரடிகளது சுவப்பனத்திற்றேன்றித் தரிசனங்கொடு த்தருளி "அன்பனே! மாணிக்கவாசகா! எமது வாத

சல்வியகுழந்தாய் ! நீயே எனக்கு முக்கியபத்தன் ாமிருக்கையில் காம்பீரியமில்லார்போலவும், அனை னையில்லாப் பிள்ளைபோலவும் நீகவல்கின்றதென் னை ? மகனே ! நின்போல அதிவிசுவாசமுடைய ப த்தன் வேறியாவன்? மைந்தனே ! நின் மனோரதங்க ள யாவுஞ்சம்பூரணமாகும். நீவிரைந்து பாண்டியரா ஜன் சமீபஞ்செல். யாதொன்றையுஞ் சிந்தித்துதது க்கிடேல். அதிவேகமுள்ள குதிரைகளை நாமேகொ ணர்ந்து அரிமர்த்தனபாண்டியனுக்குக் கொடுப்பே ம். நின்மனசிலே எப்போதும சந்தோஷம் நிலைகரு க ' என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர். எண் ணில்லா ஆன்மவாக்கங்க ளனைத்தினும் வியாபித்து அன்னையைப்போலப் பரிந்தருளும் கருணையோதி தியாகிய பரமசிவன் மறைந்துபோதலும், திருவாத ஆரடிகள் ஆனந்தசாகரத்திற்படிந்து, தேகமெங்கும் உரோமாஞ்சிதமுற்று; நேத்திரங்களினின்று ஆனந்த வருவிசொரிய,எம்பெருமானது திருநாமத்தை உச்ச ரித்து, "தேவாகள்கனவினிலும தரிசித்தற்கரிய எம் பிரானது திருவுருவம் நாயேற்கு நனவிலுங்கனவிலு ம காணற்கெளிதாய வரும்படி, எமபெம்மானது தி ருக்கருணைத்திறம் இருந்தமை என்னேயோ" என்று

பரமசிவனது காருண்யத்தை வியந்தோதிப் பின்பு ந் துயின்றனர்.

துயின்றெழுந்து, சூரியோதயமாதலும நித்திய கருமங்களைமுடித்து திருவெண்ணீறிலங்கும் திருமே னியராய், குருந்தவிருக்ஷத்தடியிலெழுந்தருளிய ஞா னாசாரியரது திருமுன்னிலையினின்று, தோத்திரித்து க்கும்பிட்டு, குருசுவாமிகளைப் பிரதக்ஷிணமாய்வந் து பணிந்து நின்றழுதனர். அதுபொழுது ஞானா சாரியசுவாமிகள் திருவாதவூரடிகளை நோக்கி "அன் பனே! பாண்டியன் நின்னைவருத்துவானென்றெண் ணிசசிறிதேனுங் கவலையுறேல், நாமேஉனக்கு இத காரணரா யிருப்பேம்; ஒன்றற்குமஞ்சேல்; முன்ன ாப் பாண்டியனிடஞ்செல். ஆவணிமாசத்து மூல நக்ஷத்திரத்திலே குதிரைகள்வரும் என்றுசொல்லி யிரு" எனக்கூறியருளித் தமதுதிருக்கரத்தாலே, தி ருவாதவூரடிகள் நெற்றியிலே விபூதிதரித்து மந்திரி களுக்குரியனவான பீதாம்பரம் இரத்தினாபரணமுத லியகொடுத்தருளி, பாண்டியனுடைய முன்னிலை யில் வழங்கும் வண்ணம் விலைமதிப்பில்லா ஓரிரத்தி னமுமீந்து ஆசீர்வாதமொழிந்து, மதுராபுரிக்குச்செ ல்லுமாறு அனுமதிகொடுத்தருளினர். தாயைப்பிரிந்

த கன்று துயருற்று உலைதல்போலவே ஞானசாரியசு வாமிகளைப் பிரிந்தமையாலே திருவாதவூரடிகள் சகி ந்தற்கரிய துயருற்று, கண்களினின்றும் சோகபாஷ் பந்தாரைதாரையாய்ச்சொரிய, அழுது, புலம்பி, ம ஹாகிலேசத்துடன் திருப்பெருந்துறையை விட்டக ன்று, வழிக்குத்துணையாகச் சிவபிரானது ஸ்ரீபஞ்சா க்ஷரங்களை உச்சரித்துக்கொண்டு மதுராபுரியைய டைந்தனர். மதுராபுரியடைந்து, இராஜமந்திரத்துட் பிரவேசித்து, அங்கே தாரகாகணஞ்சூழச சந்திரன பிரகாசித்தாற்போல, மந்திரிகளின் மத்தியிலே அரி மர்த்தனபாண்டியன் சோபித்தலைக்கண்டு, உட்பிரீதி யின்றி வணங்கி, குருந்தமரநீழலில் வீற்றிருக்கும ஞானதேசிகா ஈந்தருளிய இரத்தினத்தை அரசன் கையிற்கொடுத்து விநயத்தோடுநின்றனர்; அப்போ து பாண்டியன்பணிக்க, அவன்முன்னே ஓராசன. துவீற்றிருந்தனர்.

திருவாதவூரடிகள் வீற்றிருத்தலும் அரிமாத்த னபாண்டியன் தனக்குச் சமீபத்தேநின்ற மந்திரிகள னைவரையும் தூரவகலுமாறியற்றி, அவரைநோக்கி" சிரேஷ்டமந்திரியாரே நீர் என்திரவியசாலையி லிருந் து குதிரைகொள்ளும்படி எவ்வளவு திரவியங்கொ

டுபோந்தீர் ? அத்திரவியத்திற்கு எவ்வளவு குதிரை
கொண்டீர் ? நீர்கொண்ட குதிரைகள் எவ்வெவ்விலக்
க்கணம்வாய்ந்தன ? அவைகள் எவ்வெத்தேசங்களி
ற்பிறந்தன ? சிறந்தஇலக்கண மமைந்தவற்றுள்ளே
உத்தமமானவை எத்தனை ? மத்திமமானவை எத்த
னை? அதமமானவை எததனை ? நீர் இதுகாறும் திரு
ப்பெருந்துறையிலே யாதுசெய்து கொண்டிருந்தீர்?
இவற்றை எனக்குமொழியும்'' என்றுகேட்டனன.
அப்போது திருவாதவூரடிகள் அடியார்க்காபத்துற
றகாலத்துப் பரிந்தருளும் கருணாசாகரமாகிய சிவபி
ரானைத் திருவுளத்தேதியானிதது மஹாராஜனைப்பா
ர்த்து "மண்டலேந்திரசேகரா ! உமதுதிரவியசாலை
யிலிருந்து யான்கொடுபோந்த பொன்னுமோ அளவ
ற்றது; அதற்குக்கொண்ட குதிரைகளுமோஎண்ணி
றந்தன ; அவைகள் நானாதேசங்களிலும் பிறந்தன ;
உத்தமமான இலக்கணங்கள் வாய்க்கப்பெற்றன ; அ
வ்விலக்கணங்களைக் கிரமமாய்க் கூறுவதற்குயான்
வல்லேனல்லேன். அவைகள்விரைவிலே யிஙகுவரு
ம் ; வந்தபின்னர் அவற்றின் இலக்கணங்களை நன்று
ணர்வீராக. அக்குதிரைகளை யுடைமையாலே நீர் அ
சுவபதியென்னும் விசேஷநாமமுறுவீர்; என்சாமர்

சத்தியத்தை யானே கூறுதல் தகுதியன்றே. இன்னத கைய குதிரைகளை யான்கொண்டபின்பு, அவைகளைமதுராபுரிக்குக் கொடுவரற்குசிதமான மங்கலதினம் யாதென்று சோதிடர்களை விசாரித்தேன்; அவர்கள் ஆவணிமாசத்து மூலநக்ஷத்திரமே வாய்ந்த தினமெனப் புகன்றனர்; ஆயினமையாலே இதுகாறும யான் திருப்பெருந்துறையிலே தாமசித்தேன். அங்ஙனமாகவே, என்னுடன்வந்த பரிஜனர்யாரும மதுராபுரி யடையல்வேண்டுமென்னும் வேட்கைமீதூர ஈண்டுவிரைவிற் றிருமபினர். அவர்கள்யாரும உமது கோபத்திற்கஞ்சி என்னைச்சுட்டி எண்ணில்லா அசத்தியங்களைப் புகன்றனா. அவர்பொய்ம்மொழிகேள்வி யுற்றமையாலே வெகுண்டு சீறி, என்மேறகொண்ட சினேகமுமிகந்து, அன்பிலார்போல் எனக்குக்காடின்னிய பத்திரிகையனுப்பினீர். அதனை வாசித்தலும் அஞ்சிஈண்டுஇப்போதே வந்தேன். உமது குதிரைகள் மேற்சுட்டியதினத்திலே ஈண்டுவரும். நீர் சந்தேகங் கொள்ளாதிரும்'' எனப்புகன்றனர்.

திருவாதவூரடிகள்கூறிய வார்த்தை கேட்டலும் அரிமர்த்தனபாண்டிய மஹாராஜன் சிறிதுமன்ந

துளங்கி அவரைப்பார்த்து "ஆமாத்திய சேகரமே; உமது பிரபாவத்தைச் சிறிதும் யானுணர்ந்திலேன்! உமக்கும் எனக்குமுண்டான சிநேகத்தைக்கெடுக்கும் வண்ணம் மாற்சரியங்காரணமாகப் பொய்பகர்ந்தோர் வார்த்தையைக்கேட்டு, மனத்தெழுந்தகோபங் காரணமாக அசம்பிரோக்ஷியமாய், அன்பிலார்போல உமக்குப் பத்திரிகைவரைந்து விடுத்தேன்; அதைச் சுட்டி நீர் கவலுதலொழியும்" என்று மதுரபாஷணைங்கூறி முன்தனக்கும் அவர்க்குமிடையே அபிவிருத்தியான சிநேகத்தை வியந்தோதி; அவரது இருதபங்கயத்தை அலர்த்தும்வண்ணம் திரவியங்களும் ஆபரணங்களும் வஸ்திரங்களும் அவர்க்கு வழங்கி நன்குசம்பாவனைசெய்து, அவர்தம்மனைக்குச் செல்ல அனுமதிகொடுத்து மஹானந்தத்துடனேயிருந்தான். திருவாதவூரடிகள் சீக்கிரமாய் சுவர்ணபதுமாகரம் எனப்படும் உத்தமதீர்த்தத்திலே வீழ்ந்து ஸ்நானஞ்செய்து, பவமனைத்தையும் நீறுக்கும் திருநீறுதரித்து, உருத்திராக்ஷமாலைபூண்டு, சந்தியாகாலவந்தனுதிகளை விதிப்படியே யியற்றி, பின்னர் அவ்வாவியினதீரத்தின்கண்ணே எழுந்தருளிய தாரகப்பிரமமான கணபதியைச் சேவித்து, அவர் திருச்சந்நிதி

மின் ரெருவி, தேவாதிதேவராகிய சுப்பிரமணியசுவாமிகளது திருச்சந்நிதிசென்று வந்தித்து, அதன்பின்னர், அந்தராவரணஞ்சென்று அவ்விடத்திலே அருவாகியும் உருவாகியும் அருவுருவங்கடந்த சத்திய ஞானானந்த ரூபமாயும், அகிலான்மாக்களிடத்தும் வியாபித்தும், உயிரனைத்திற்கு முணர்வாயும், சராசரமனைத்துக்கும் மூலகாரணமாயும், நிகிலபிரபஞ்ச சாக்ஷியாயும் இருக்கின்ற சிவக்கொழுந்தைக்கண்டு, பூமியில் வீழ்ந்து, அஷ்டாங்கபஞ்சாங்க விதிமுறையாற்பணிந்து, பின்பு சகல சித்திப்பிரதாயினியாகிய ஸ்ரீஞானாக்ஷி யம்மையையும் முன்னுரைத்தவாறே பணிந்து, எமபெருமான் சந்நிதியினின்று விழிதுளிப்ப, மொழிதழுதழுப்ப, உடல்பனிப்ப, திரிகரணங்களும் அன்புருவாய்த் தோன்ற "தேவாதிதேவரோ! அரசே! வெள்ளியம்பலத்தே திருத்தாண்டவம் புரிந்தருளிய சுவாமீ! அடியார்க்கெளிவரும் பெருங்கருணைக்கடலே! அநாதிமலமுத்தசித்துருவாகிய பரஞ்சோதியே! பாசபந்தப்பட்டுழன்ற நாயேனையு மோர்பொருளாகவெண்ணி ஆண்டுகொண்டருளிய மணியே! பாண்டியராஜன் குதிரைகொள்ளும்வண்ணம் ஈந்த திரவியங்களையெல்லாம், தேவரீரது திருவாஞ்ஞைப்

படியே உமது திருவாலயப்பணிக்கும் உமது மெய்ய டியார்க்கும்கொடுத்தேன்; பாண்டியன் என்மீது வெகுளா திருக்கும்வண்ணம் குதிரைசெலுத்தும வாறு எவ்வாறெண • எண்ணிஎண்ணி என்சித்தமெல்லாம நலிகின்றதே; எம்பெருமானே, நான்யாதுபுரிவேன்; நீரேகதி, என் உடல்பொருளாவிமூன்றும் உம்மு டையனவே" என்று வேண்டிநின்றனர். அச்சமயத் திலேஆகாசத்தில் "மெய்யன்பனே! மாணிக்கவாச கா! நீசிறிதேனும்மனவியாகுலமுறேல்; பயமென்ப தனை நின்மனத்தினின்றும் நிருமூலஞ்செய். நீ அபே க்ஷித்தவாறே, சூரியனது தேரிற்பூட்டிய குதிரைகளி னும் அதிவேகமுள்ளகுதிரைகளைக்கொணர்ந்து நின் பொருட்டுப் பாண்டியனுக்கு வழங்குவேம்யாம். ச முசயமுற்று வருந்தேல்" என்று ஓர் அசரீரிவார்த் தைகேட்டது. அது திருவாதவூரடிகளது சுரோத்தி ரரந்திரத்திற் புகுதலும் அவர் ஆனந்தபயோததிரா ப்பட்படிந்து, சிவபெருமானது பெருங்கருணையை ப் புகழ்ந்து தம்மனைபுக்கனர். தம்மனைசென்றபின்பு திருவாதவூரடிகள் "திருவருட்கடலாகிய சோமசுந்த ரக்கடவுள் நிச்சயமாயே பாண்டியனுக்குக் குதிரை கொணர்வர்; அன்றியும், அடியேனுக்குஞ் சீக்கிரமா

ய்க் கருணாகடாக்ஷஞ்செய்வர்" எனமனசிலே எண்ணி, பின்னர்ச் சிவனடியார்களையும் தமது பந்துக்களான பிராமணர்களையும் அறுசுவைப்போஜன முதலியவற்றினாலே சம்யாவித்து; தாமும் அடிசிலயின்று மனக்கிலேசம் பரமாணுப் பிரமாணமேனுமின்றி, மனோகரமான தமதுமாளிகையிலே இனிது வதிந்தனர். இங்ஙனமாகுங்காலையில் ஒருநாள் திருவாதவூரடிகளது சுற்றத்தாரும், இஷ்டரும் ஒருங்குகூடிவந்து, கவல்கின்ற நெஞ்சத்தினராயும், கம்பிக்கும் மேனியராயும், அவரைநோக்கி "திருவாதபுரேசரே! மந்திரத்தொழில் பூண்டு இராஜரிடத்தே சேவித்தல் பிராமணர்க்குத் தருமமன்றே. அத்தருமம்நெறிபிறழ்ந்து மந்திரித்தொழில் பூண்டக்கால் இராஜர்க்குப் பிரீதிகரமாக ஒழுகுவதே மானவசாஸ்திரத்தின் றுணிபு. நீர் முக்கியமந்திரியாகியும் இராஜதுரோகஞ்செய்தீரே; இஃது சகலகலாபண்டிதரான நுமக்குத் தகுதியா? எங்களயார்க்கும் எண்ணில்லா ஆண்டு கற்பிக்கும் திறமுடைய உமக்கு இவ்விஷயம் யாம் கூறுவது ஆவசியகமன்றே. நீர் திருப்பெருந்துறையிலே செய்தவைகளைப் பாண்டியராஜன் அறிந்திலன். இஃது பரமசிவனது திருவருட்டிறனேயன்றிப்

பிறிதென்னே? நீர் இழைத்த அபராதத்தைப் பாண்டி ராஜனுணர்வனேல் உம்மையும் உமக்குற்ற சனங்களாகிய எம்மையும் கொடுந் தண்டஞ்செய்விப்பனே. அங்ஙனஞ் சம்பவிக்குங்கால் யாமெல்லோமும் யாது புரிவோம்? நீர் செய்வதொன்று நன்றன்று; பாண்டியனுக்கு விரைவிலே குதிரைவருவதாக உரைத்தீரே; நானே என்சொல்ல வல்லீரையா? உமக்கு உற்றோராயிருக்கும் சுற்றத்தவரையும் இஷ்டரையும், சார்பினரையும் சம்ரக்ஷணை செயல்வேண்டுமென்னும் விருப்பு உமது மனத்திலே திலப்பிரமாணமேனும் இல்லையே. உமது ஒழுக்கத்திலே, உமது செய்கைகள்யாவும உமக்கே மிகவும் சிறந்தனவாய்த்தோன்றுகின்றனபோலும்; இஃது நன்று!! நன்று!! " என்று இடிமுழக்கம்போலப்பகர்ந்தனர். அவர்கூறிய வார்த்தைகேட்டலும் திருவாதவூரடிகள் புன்முறுவல்செய்து ஆதரத்துடன் அவர்களைநோக்கி " பெரியோரே கேண்மின்! எத்தினத்திலே பரமசிவன் ஞானதேசிகத்திருமேனிகொண்டு எமமை ஆட்கொண்டருளினரோ, அத்தினத்தேதானே, சுற்றத்தவர்களிடத்தும் இஷ்டர்களிடத்தும் கொண்டபந்தம நீங்கப்பெற்றேம்; சுகதுக்கங்களற்றேம்; தேகா

பிமானமொருவினேம், திரவியத்தில் ஙிராசையுற்றோம்; கோபமுமகங்காரமுமற்றேம், ‘ பாவபுண்ணியங்களொழிந்தேம். ஆயினமையின் நீவிர். எமக்குயார்? யாம் நுமக்குயார் ? எம் குருசுவாமிகளது கருணைகடாக்ஷத்தால் சம்சாரவாசனையெல்லாம் நீங்கியது. எமது தந்தை தாய்குரு என்னும மூவரும் சிவபெருமானே; பாரிநிராசையே; புத்திரர்கள் சகலான்மாக்களுமே; சுற்றத்தவர் சிவனடியார்களே; பகைவர் எழுவகைப்படும் ஜன்மங்களே; என்பது கைத்தலநெல்லியங்கனிபோலச் செவ்விதின் ஓர்ந்தேம்; ஊரிலுள்ளோர் சமைத்த அன்னமெல்லாம் நம்மதே; பூமியெவ்விடமும் நமது சயனபள்ளியே; கௌபீனமே நாமதரிக்கும் வஸ்திரம். விபூதியே நாம் மேனியிற்பூசுஞ்சந்தனம்; உருத்திரமணிவடமே நமக்குச் சிறந்த ஆபரணம். இத்தினத்தேதானே நமக்கு மரணஞ்சம்பவிக்குமேல், சம்பவிக்குக; எக்காலத்தும் பிராணனேடிருக்க நேரிடினும் அவ்வாறுருக; பாண்டியன் நம்மேல் வெகுண்டு தண்டனைபுரியினும் புரிகுக; அவ்வாறன்றி நம்மை மகிழ்விக்க வெண்ணினும் அவ்வண்ணம் புரிகுக; எமது பிராணன் மோக்ஷக நமனுபவிக்கச் சம்பவிப்பினும்,சம்பவிக்குக; அஃதன்றி

அநேககதியடைந்து யாதனை அனுபவிக்கநேரிடினு ம் நேரிடுக; எவ்வாறு நிகழினும் நிகழுக; நாம் ஓர்கா லும் சிவபிரானைமறவேம்; பிராரத்தகன்மம் வந்தணு கில் அதனையாவர் நீக்கவல்லவர்? எல்லாஞ் சிவன் செயலே என்றிருப்பதன்றி, கல்லார்போல் மனங்க லங்கியழுதலாலே அடையும் பிரயோசனமென்னே? பெரியோரே! இவையெல்லாம நுங்கட்கு நாம் கூற வேண்டிய ஆவசியகம் யாதேனுமின்றே. ஆயினமைம யாலே நீவிரொல்லிரும எமபொருட்டுத் துன்புறுதி ருமின்" எனசசொல்லி அவர்கள்யாவரையுமனுப்பி சி வாடபஜனஞ் செய்துகொண்டு யாதானுமோர் சிந்த னையின்றி இனிதிருந்தனர். இவ்வண்ணம் சிவஞான சசெல்வரான திருவாதவூரடிகள் இருக்குங காலையி லே, குதிரைவரவிற்கு நியமித்த தினத்துக்கு இரண் டுதினத்தின்முன்பு, ஓர்மந்திரி, அரிமர்த்தன பாண் டியமஹாராஜன் பரிஜனங்களின்றித்தனியே யிருந்த சமயமபார்த்து, அவன்முன்சென்று விநயத்துடனி னறு "இராஜசேகரா! போற்றி போற்றி; அடியேன் தேவரீருக்கு உரைக்கற்பாலதாய வார்த்தையொன் றுளது. அஃது யாதெனக் கேட்டருள்வீராக உம து பிரதான மந்திரியாகிய திருவாதபுரேசர் குதிரை

கொண்டனர் என்னுஞ் சமாசாரம் முழுதும் அ
சத்தியமே. அவர் திருப்பெருந்துறை சென்றபின
பு உமது திரவியசாலையிலிருந்து கொடுபோந்த தன
ங்களையெல்லாம் சிவனடியார்க்கும் திருவாலயப்ப
ணிக்கு மீந்தனர் ; நீர் கோபத்தால்விடுத்த பத்திரி
கையைக்கண்டஞ்சி, விரைந்து ஈண்டுவந்து, உமது
வெகுளியையகற்றிப் பிராணசம்ரக்ஷணை செய்யுமா
று, உம்மீது அன்புடையார்போலச் சில பிரீதிவாச
ங்கள் மொழிந்து, இங்கே குதிரைத்தொகுதி வரும
என்றார். மஹாராஜனே ! அவர் மொழிந்தவற்றில்
ஒன்றினேனும் விசுவசியா திருப்பீராக'' என்றுசொ
ன்னான் அதுகேட்டலும் சீறிச்சினந்து பாண்டியரா
ஜன் தூதுவனைநோக்கி "சாரணரே ! நீவிரொல்லிரு
மவாயுவேகமும் மனோவேகமும பின்னிடும் விரை
வுடன் திருப்பெருந்துறை யென்னும் திருப்பதிசெ
ன்று, அங்கு, குதிரைகள் உளவோ இலவோஎன்று
பார்த்துவந்து சொல்லுங்கள்'' என்றாஞ்ஞைசெய்த
னன். அநந்தரமாகவே அரிமர்த்தனபாண்டியன் தி
ருவாதவூரடிகளைக தனது சபைக்கழைத்து "முக்கி
யமாத்தியரே ! இன்னுங் குதிரைகள்வந்தில. அவை
கள் வாராமைக்குக் காரணமியாது? கூறும" என்

றனன். அதுகேட்டுத் திருவாதவூரடிகள் "மஹாரா ஜனே! இன்று முதல் மூன்று தினத்துக்குள்ளே குதிரைகள் ஈண்டுவரும்; அதனைச்சிந்தித்து யாதேனுஞ் சந்தேகமுறாதிரும். அன்றியும் அக்குதிரைகட்கேற்ற மந்துரைகள்சமைக்கவும், அவற்றிற்குத்தண்ணீரூட்டும் வண்ணம் தடாகங்கள்கல்லவும்; நகரலங்காரஞ்செய்யவும் கட்டளையிடும்" எனமொழிந்தனர். அரிமர்த்தனபாண்டியன் அவ்வாறேகட்டளையிடுதலும், அவனது ஏவலாளர்கள் பவனவேகத்துடன் நகரமெங்குமோடி அலங்காரஞ்செய்தனர்; சமுத்திரம்போன்ற தடாகங்கள் தொட்டனர்; விசாலமான மந்துரைகள் சமைத்தனர். அக்குதிரைகள் உண்ணும்பொருட்டு காணம்முதலிய பல்வகைத் தானியங்களை மலைகள்போலக் குவித்தனர். இவ்வாறுமூன்றுதினங் கழிந்தபின்னரும் குதிரைகள்வந்தில. அதுபொழுது பாண்டியராஜன் முன்னனுப்பிய தூதுவர்கள் அவன்முன்னிலையிற் சென்று "பூமண்டலாதிபதியே அடியேமெல்லோரும் அதிவிரைவுடனோடித் திருப்பெருந்துறையினும் ஏனையபதிகளினுந்தேடினோம், அங்கேகுதிரைப்படையைக் கண்டிலோம்" எனச்சொன்னார்கள். இவ்வார்த்தைகேட்ட

வக்கணத்திலே பாண்டியராஜனை சகித்தற்கருங்கோபங்கொண்டனன். அவன்கண்கள் செக்கர்வானம்போலச் சிவந்தன; உதடுகளுங்கைகளும் துடித்தன; மேனியெங்கும் வெயர்த்தது; இங்ஙனமே கோபாவேசமுற்றிருக்கும் அரிமர்த்தனபாண்டியனை முன்னிலையிலே திருவாதவூரடிகள் சிவபெருமானது திருச்சரணபுண்டரீகங்கள் தாங்கும் இருதயபங்கயத்துடனே, மெல்லமெல்ல நடந்து அவனைக் காணுமாறு சென்றனர். அவனைக் கண்டலும், யுகாந்தகாலத்திலே பிரசண்டமாருதம் தாக்கச் சமுத்திரம் கோஷித்தாற்போல, கோபமெனும் சண்டபவனந்தாக்க அரிமர்த்தனன் மஹாதொனிவிளைத்து, தனக்கெதிரே தண்டபாணிகளாய்நின்ற கிங்கரர்களைப்பார்த்து "தண்டத்தலைவர்களே! கள்வனாகிய இத்திருவாதபுரேசனை நீவிர்பற்றிக்கொடுபோய் நானாவகையான நிர்ப்பந்தங்கள்செய்து, இவன்குதிரைகொள்ளும் வண்ணங்கொடுபோந்த திரவியங்களையெல்லாம் வாங்கிவம்மின்" என்றாஞ்ஞைசெய்தனன். ஞானதேசிகராதசாக்ஷாத்தீக்ஷையினாலே திருவாதவூரடிகளை விட்டகன்ற மாயாபாசம் மீட்டும் அவரைப்பற்றி நலிவுசெய்யுமாறுசென்றாலென்ன, வன்கண்ணராகிய கிங்கரர்

கள் மாணிக்கவாசகப்பிரானைப்பற்றிச் செற்றத்துட ன்சென்று உஷ்ணமான வெயிலில்நிறுவி அவர்மு துகிலே பாரமானகல்லொன்றையேற்றினர். அவ்வே லையிலே சிவபத்தசிகாமணியாகிய திருவாதவூரடிக ள் திரிபுரசங்காரகாலத்திலே அதிபாரமுள்ள மே ருகிரியை வில்லாகத்திருக்கரத்தேதாங்கிய விஜய சீ லராகிய சிவபிரானது திருவடிக்கமலங்களைத் தியா னஞ்செய்து கொண்டுநின்றனர், ஆயின்மையில் எ ம்பெருமானது அனுக்கிரகவலத்தினாலே அக்கல்லி ன் பாரம் அவர்க்கு அணுவளவேனுந்தோன்றிலது. தமமையடைந்த மெய்யன்பரது பாரங்களையெல்லா ந்தாங்கும் காருண்ணியத்திறத்தினராய பரமசிவனு க்கு, திருவாதவூரடிகள் முதுகிலேற்றிய கல்லின்பா ரந் தோன்றுதிருக்கும்வண்ண மியற்றினமை அற்பு தமன்றே. தேவாதிதேவரது திருப்பாதாரவிந்தங்க ளையே பரிக்கும் மனத்துடன் பத்தசிரோமணியாகி ய மாணிக்கவாசகப்பெருமான், தமது முதுகினிலே ற்றியகல்லின் பாரந்தோன்றாது நிற்றலும், அதனைக் கண்டு வன்கண்ணராகிய தண்டத்தலைவர்கள்யாரு ம் அதிசயமடைந்து, அஃது மாயாதந்திரப்பிரயோ கத்தினாலே இயற்றிணையொன்று சிந்தித்து, அக்கொ

டியபாதகர்கள், எமது சுவாமிகளது திருக்கரங்களி லும் திருப்பாதங்களிலும் கிட்டிகட்டி ஆர்த்துமகி ழ்ந்து நின்றனர். அக்கொடுந்தொழிலுக்கும் அஞ்சா து சைவசமயாசாரியசுவாமிகள் சிவனருளாலே தள ர்வின்றிநிற்றலும், அதனையும்பார்த்துத் தண்டத்த லைவர்கள் அற்புதமடைந்தனரேனும், பாண்டியராஜ னது தண்டத்திற்கு வெருவி, மாணிக்கவாசகப் பிரா னது பிடரினமீது அதிபாரமான கல்லையேற்றினர். கனறினைபின் பரிந்துசெல்லும் தாய்ப்பசுப்போல, அ டியார்பின் பரிந்துசெல்லும் கருணாசாகரமாகியசோ மசுந்தரக்கடவுளது திருவருளினாலே அக்கல்லும எம்பிரானுக்கு யாதேனும் இடர்விளைத்திலது. அ தனைக்காண்டலும் தண்டத்தலைவர்கள் அதிகோப முற்று "நாம் எவ்வாறு தண்டம் புரியினும் இவ ர்வருந்துகின்றிலர்" என்று தம்முள்ளேசிந்தித்து, அவரைச் சிறைச்சாலையில் வைக்கும் வண்ணமு தந்தேசித்தனர். அன்னதோர்காலையில் சிவபத்தசி காமணியாகிய திருவாதவூரடிகளுக்குத் தண்டத்த லைவர் செயயுமாறு உத்தேசித்த தண்டங்களையெ ல்லாமறிந்து, அவற்றைக்காணா மனமஞ்சினான் போல ஆதித்தியன்ஒளிகுன்றி பச்சிமசமுத்திரத

தின மறைந்தனன். சூரியாஸ்த மயனத்தின்பின்னர், வெண்பிறைவிளங்கவும், தாரகாகணங்கள் சோபிக்கவும் செக்காவானமவந்தமை, கிருபாசாகரமாகியசிவபிரான், தம்மடியாராகிய திருவாதவூரடிகளுக்குச சம்பவித்த இடரினை அகற்றத் திருவுள்ளம்பற்றி, விஷ்ணுவாகிய வராகத்தின்தந்தமும் பிரமகபாலமாலைகளும் பிரகாசிப்ப, சிவந்ததிருமேனியுடன் தோற்றினாற்போலும். அப்போது முல்லைகள் அலர்ந்துசோபிக்க, புண்டரீகசரசுகளெல்லாம் பொலிவழிந்தநின்றமை, சிவபத்தசூடாமணியாகிய திருவாதவூரடிகளுக்குத் துயாசம்பவித்ததனைக்கண்டு அனுதாபசூனியரான சிறியோர்மகிழ, அனுதாபயுக்தரான பெரியோர் "மஹானுபாவருக்கு இங்ஙனம்சம்பவித்ததே, ஐயையோ!" என்றுமுகம்வாடிப் பொலிவழிந்திருந்தாற்போலும். செககர்வானமமறைதலும் இருட்குழாங்கள் பூமியெவ்விடத்தும்செறிந்துவியாபித்தமை, சைவசமயாசாரியராகிய மாணிக்கவாசகப் பெருமானுக்குத் தண்டஞ்சம்பவித்ததனைப் பிறாகண்டக்கால், எம்பெருமான் நாணமுற்று வருந்துவாரென்றுஎண்ணி, இராவாகியமங்கை இருளாகியகாததினல் மதுராபுரிவாசிகளது கண்களையெல்லாம

மறைந்தமைபோலும். இராவாதலும் கோபித்திருக ண்பொறிபபறகக நோக்கும் வன்கண்ணரானதண்ட த்தலைவாகளை தவமே யோர்வடிவெடுத்து வந்தாலன்ன திருவாதவூரடிகளைச்சிறைச்சாலையடைவித்து, அவரது திருக்கரங்களிலும திருப்பாதங்களிலும் நிகள ம்பூட்டி, உரைக்கருமை இடரணைத்துஞ் செய்தனர். தண்டத்தலைவர்செய்த கொடும்வேதனைகளை யெல்லாம் அனுபவித்துத, துன்பக்கடலைசிவபிரானது திருப்பாதமென்னும் தெப்பமே துணையாககொண்டுகடந்தனர். உஷறகாலமாதலும சேர்மகநதரககடவுளையும அகிலலோகமாதாவாகிய மீனாக்ஷிதேவியானாயும திருப்பூம்பள்ளியினின்றும் துயிலெழுப்பும் வண்ணம் அடியார்குழாஙகள் செறிந்துதோத்திரஞ்செய்யும் கோஷமும், மங்கலசங்கநாதமும், சதுர்வேதகானமும், திருவாதவூரடிகளது திருச்செவிவழியே வார்த்த அமிர்ததாரைபோலப் புகுதலும், அவர்போரானநதப் பெருங்கடலின்மூழ்கி, எம்பிரானது திருச்சேவடிக்கே சிந்தைவைத்தார். அதன்பின்னர், திருவாதவூரடிகளுக்கு அன்றிரவில் யாதுநிகழ்ந்ததோவென்றறிய அபேக்ஷித்தவன்போலவும்; ஞானாநந்த சோதியாகிய சிவபிரான், மெய்யன்பராகிய திருவாத

ஊரடிகளுக்காக, நாதமுரசங்க ளொலிப்பவும், குதிரைவீரர்செறியவும் வேதப்பரிமீதிவர்ந்து மதுராபுரிவீதியில்வரும் திருக்கோலத்தை, ஜன்மாந்தரங்களோறு மியற்றிய தவத்தின்பயனுற்றறிசித்து, ஆனந்தமடைய விரும்பியவன்போலவும், ஆதித்தியன்பூருவதிசையி லுதயமாயினன். அப்போது மாணிக்கவாசகப்பெருமான் காருண்ணியவிக்கிரகராகிய சோமசுந்தரக்கடவுளும் மீனாக்ஷிதேவியாரும் எழுந்தருளியிராநின்ற திருவாலயத்தின் செம்பொற்சிகரத்தை நோக்கி, திருக்கரங்களைச் சென்னியிற்சேர்த்து, நயனபங்கயங்களின்றும் பாஷ்பதாரை ஓயாதுசொரிய எம் பரமபரனைப் பாடுவாராயினர்.

கொச்சகக்கலிபபா.

எந்தாயனைத்துலகுமீன்றுயெத்தேவர்க்குந்
தந்தாய்செழுங்குவளைத்தாராய்பெருந்துறையில்
வந்தாய்மதுரைத்திருவாலவாயுறையும்
சிந்தாமணியேசிறியேற்கிரங்காயோ. (க)

மூவாமுதலாய்முதுமறையாயம்மறையுந்
தாவாதசோதித்தனிஞானபூரணமாய்த்
தேவாதிதேவாய்த்திருவாலவாயுறையும்
ஆவார்கொடியாய்அடியேற்கிரங்காயோ. (உ)

முன்னைமுதுபொருட்குமுன்னைமுதுபொருளாய்ப்
பின்னும்புதுமைக்கும்பின்னைகும்பேரொளியாய்த்
தென்னைமதுரைத்திருவாலவாயுறையும
என்னையகனேயெளியேற்கிரங்காயோ. (௫)

மண்ணாய்ப்புனலாய்க்கனலாய்வளியாகி
விண்ணாயிருசுடராயித்தனையும்வேருகிப்
பண்ணாயிசையாய்ப்பனுவலாயெங்கண்ணுங்
கண்ணனையென்னுறுகண்காணுவாறென்கொல்லோ.

பொங்குஞ்சினமடங்கல்போன்றுருத்துவெங்கூற்றம
அங்கும்புரியாவருந்துன்பத்தாழ்ந்துநான்
மங்கும்படியறிந்தும்வந்தஞ்சலென்கிலையால்
எங்குஞ்செவியுடையாய்கேளாயோவென்னுமாயே.

பூட்டியருட்பாசமிருபாதம்பொறித்துடலிற
கூட்டியடியாருளகப்படுத்தாட்கொண்டருமை
காட்டியவோவின்றென்னைக்கைவிட்டாய்வெய்யனை
ஆட்டியொறுக்குமிடத்தாரொன்றுகொள்வாரோ. (சு)

ஊராருனைச்சிரிப்பதோராயென்றுன்னடிமைக்
காராயடியேனயர்வேனஃதறிந்தும்
வாராயரசன்றமரிழைத்தவன்கண்ணேய்
பாராயுன்றன்மையிதுவோபரமேட்டீ. (எ)

எம்பெருமானே! சகலலோகங்களையும் சிருஷ்டி தந்தருளியபிரானே! தேவர்கட்கெல்லாம் பிதாவே! கிலோற்பல மாலாதரரே! (பாசபந்தப்பட்டுழன்ற நாயேனையும் ஆட்படுத்தருளும்வண்ணம்) திருப்பெருந்துறையென்னும் க்ஷேத்திரத்திலே ஞானதேசிகத்திருமேனிகொண்டெழுந்தருளிய பரமதயாநிதியே! அனைத்துயிரும் வழிபட்டு உய்யும்வண்ணம் திருவாலவாயினகண்ணே திருக்கோயில்கொண்ட பெருமானே! (அடியார் அபேக்ஷித்த வரங்களையெல்லாமளிக்கருளும்) சிந்தாமணியே! கடையேன்வருந்துதலைக் கண்டும், திருவருள்பாலியாதுவாளாவிருக்குங்காரணமென்னையோ? ஆதியந்தமற்றமுழுமுதற்கடவுளே! புராதனவேதங்களாயும், அவற்றிற்கு அதீதமாயும் இருக்கும சமாநாதிகரகித ஞானபூரணரூபரே! தேவாதிதேவரே! திருவாலவாயின்கண்ணே எழுந்தருளியிருக்கும் இடபகேதனரே! சோமசுந்தரக்கடவுளே! அடியேற்கிரங்கியருள்புரியாதவாறென்னே? முன்னைப்பழம்பொருட்கும்முன்னைப்பழம்பொருளே! புதியனவும் புதியரே! சோமசுந்தரபாண்டியராய வந்தருளி வையம்புரந்தமணியே! திருவாலவாயின் கண்ணே திருக்கோயில்கொண்டருளிய பிரானே! என்

பிராணரக்ஷகரே! எளியேன்படுந்துயரங்கண்டும் திருவருட்புரியாதவாறென்னையோ? பிருதிவிஅப்புதேயுவாயு ஆகாசம் எனப்படும் பஞ்சபூதங்களாயும், சந்திரசூரியராயும் இன்னும் நானாபேதமான பொருட்களாயும்; பண்ணும், பண்ணுக்கின்றியமையாததுவென்னப்படும் நாதமாயும், உரையாயும், சர்வபூதசாக்ஷியாயும் இருக்கின்றபெருமானே! அடியேனதுதுயரைக்காணாதிருக்கும் வாறென்னை? கொடியயமனும் வடவாமுகாக்கினிபோற் சினந்து, தன்னுலகத்திலே செய்யாத துன்பக்கடலில்வீழ்ந்து, நான்வருந்துகின்றமையையறிந்தும், அடியேன் கண்முன்னின்று அன்பனே! அஞ்சேல்’’ என்றுஅபயம்அளித்தருளிலீர்; எங்குஞ்செவியுடைய பெருமானே! அடியேன் உரைகளைத் தேவரீர் கேட்டருளீரோ? எளிதாயே காருண்ணியமெனும பாசம்பூட்டி, உபயபாதபுண்டரீக முடிவிற்பொறித்து, அடியார் சங்கத்துளொருவனாக்கி, மலப்பற்றனைத்தும்நீக்கி அடியேனை யாட்கொண்டருளி, அக்கருணையின் அருமையைஅடியேனுக குணர்த்துமவண்ணமா இன்று நாயேனைக்கைவிட்டகன்றீர்? சிவபிரானே! இத்தண்டத்தலைவர் என்னைச் சஞ்சலப்படுத்துங்கால் உம்மை யாவரும்

நிந்தியார்களா? பரமதயாநிதியாகிய நீர் அடியேனை க்கைவிடுங்கால் உளரின்கண்ணே யுள்ளோர் உம் மைநிந்திப்பார்களே யென்பதைஅறியீர்! அடியேன் மீதுகருணைகூரலீர். அடியேன் துக்கஞ் சகிக்கலாற் றாது தியங்கிமயங்கி வீழ்கின்றமையறிந்தும் எனக் கருளும் வண்ணம் வருகின்றிலீர். அரிமர்த்தனபா ண்டியனது ஏவலாளர் அடியேனுக்குச்செய்யும் கொ டுந்தண்டங்களையும் பார்க்கின்றிலீர்! அகிலலோக நியந்தாவாயிருக்கும் உமதுசெயல் இதுவா? பகர்ந்த ருளும்'' என்றின்னவாறு திருவாதவூரடிகள் சோம சுந்தரக்கடவுளது திருச்சரண புண்டரீகங்களைத்திரு வுளத்தே தியானித்துப் பிரலாபித்தலும், இளங்குழந் தைகள் அழுமொலி அவரதுதாயர்கள் செவிப்புலஞ் சென்றுலென்னச், சிவபெருமானதுதிருச்செவிவழி ப்புகுதலும், எம்பிரான் தாயினும்பரிந்து அவர்மேற் கருணைகூர்ந்து, அவருக்குற்றதான சிறையினைவிடு விக்கும்வண்ணம்திருவுளம்பற்றினர். சூரியோதயமா தலும் அரிமர்த்தனபாண்டியன் சயனமொருவி, நீரா ல்முகபாதாதியவற்றைப் பிரக்ஷாலனித்து, பிரசன் னசலிலவாவியில் மூழ்கிச், சிவபூசைமுடித்து, சர் வாலங்காரமேனியனாய், செம்பொன்ஒளியன்ற மங்

திரத்தின் பூர்வபாகத்திலே மணியணியாசனத்தின் மேல் உல்லாசமாய் வீற்றிருந்தனன். அவ்வேலையிலே தண்டத்தலைவர் மாணிக்கவாசகப் பெருமானது திருமுன்னிலையிற்சென்று, இடிமுழக்கம்போல் ஆரததுச் சூர்த்தநோக்குடன் பார்த்து "திருவாதபுரோசரோ! குதிரைகொள்ளும் பொருட்டுக் கொடுபோந்து, சிவனடியார்க்கீந்து வியயஞ்செய்த திரவியமெல்லாம் இக்கணத்தேதானே ஈயும்; அன்றேல், இவ்வெயிலிடைநில்லும்" என்றுகூறலும், திருவாதவூரடிகள் யாதேனும் ஆக்ஷேபஞ்செய்யாது, வெயிலிடைநின்றனர். பின்னர்ச்சிறிதுபொழுதில் ஆதபந்தெறுக்க இளைப்படைந்து மாணிக்கவாசகப் பெருமான், தமது மாயாவிருத்திவலியகற்றி ஆட்கொண்டருளிய கிருபாசாகரமாகிய ஞானதேசிகரது திருவடிக்கமலங்களைத் தியானித்து மனத்தே எண்ணுவாராயினர். "சர்வவியாபகமுடைய பெருமானே! சிவனே! ஆனந்தத்தாண்டவம் புரிந்தருளும் பிரானே! ஏழைகட்கன்னையே! கங்காதரனே! காளகண்டா! காலகாலா! கமலாபதிசாயகா! பக்தவற்சலா! திரிபுரசங்காரீ! அடியார்க்கெளிவரும் கருணையோநிதியே! சூலபாணீ! சந்திரசேகரா! புவனத்திரயகாரணா! பக்தார்

த்திபஞ்சனபரா! திருப்பெருந்துறையின் கண்ணே தேவரீர அடியேனுக்கு மொழிந்தவார்த்தை அசத்தியமாகுமா? பாண்டியனுக்குக் குதிரைகளீதல் உமது கடனன்று? மாமசமயமான தேகத்திற்கொள்ளுமஅபிமானத்தையும், அநித்தியமான பூமிவாழ்விற்கொண்ட விருப்பினையும, இகந்து, ஜனனமரணவேதனையொழிக்குமவண்ணம, தேவரீரது திருச்சரணத்திலே சரண்புகுந்தவென்னை, மீட்டும் பாண்டியனிடமனுப்பினீர்; இஃது உமக்குத்தகுமா? நதியினிடத்துள்தான சுத்தோதகம், சமுத்திரத்தினகணுள்ளதான உவர்நீரோடுகலந்தபின்னர், முன்போல இனசுவையினதாயிருக்குமா? தேவரீரது கருணைகடாக்ஷத்தால் மாயாபந்த மகலப்பெற்று, அதிபாவனமுற்று, பரிசுத்த பத்த சங்கமத்தியிலிருந்த அடியேன் மாயாபந்த வசந்தரான பாண்டியன்முதலியோர் குழாத்திடைக்கலந்தேன்; இனியெவ்வாறு முனபோலவே பாவனமடைவேன்? புண்ணியரூபிணியாகிய உமாதேவியாரை வாமபாகத்திற்கொண்ட பிரானே? தேவரீரிடத்தே நாயேனுக்கு அன்பு அணுப்பிரமாணமேனும் இல்லை என்பதனைத் திருவுளத்திற்கொண்டு என்னைவெறுப்பீரோல், இப்பொழுது உம்மையன்றி வேறியார்சகாய

மாவார்? பாஷண்டதருமமேற்கொண்டு படிற்றொழுக்கம்பூண்டு யார்க்கும் வியசனம் விளைத்ததிரிபுரவாசிகளைச் சங்கரித்தபிரானே! உமது திருப்பாதபங்கயத்திற்கே அன்பு பூண்டநாயேனைக்கொடியரான தண்டத்தலைவர்கள் தாங்கரும் வெப்பத்தினதான வெயிலினிடையிருத்தினரெனினில் அஃது உமது நின்மலகீர்த்திக்குத்தகுமா! அரிபிரமேந்திராதியர்க்குமேலான கடவுளே! உமக்கடியனாகிய நாயேனைக் கொடியர் வருத்தத், தேவரீர் வாளாவிருப்பின், யாரினி உமக்கு அடிமையாவர்? அகங்காரங்கள் நீங்கப்பெற்ற மஹான்கள், புகலும் தூயவார்த்தைகளேயன்றி, என்போலிய ஈனனதுவார்த்தை தேவரீரது திருச்செவிவழிப்புகுமா?" என்று இன்னணம் திருவாதவூரடிகள் கிலேசமுற்றுவாடலும், கருணாமிர்தசாகரமாகிய சிவபெருமான்; அவரது சிறையை நீக்குதற்கு வேண்டிய பிரயத்தனஞ் செய்தருளுவாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

திருப்பெருந்துறைச்சருக்கம்முற்றிற்று.

## குதிரையிட்டசருக்கம்.

திருக்கைலாச வாசராகிய பரமசிவன்பத்தசிகா மணியாகிய மாணிக்கவாசகப்பெருமானுக்குற்ற இடரினைநீக்கும்வண்ணம் திருவுளம்பற்றி நந்திகணாதிபதிகளைத் தமது திருச்சந்நிதிக்குவரும்படி விளித்தனர். அப்பொழுது அவர்கள்யாவரும் அச்சத்துடன் எம்பெருமானது சமீபஞ்சென்று சென்னிமேற்கரங்கள்கூப்பி வணங்கிநின்று "ஆகமம்வேதம் புராணமஸ்மிருதிமுதலிய நூல்களாற் பிரதிபாதிக்கப்படும் முழுமுதற்பதியே! சங்கரா! அடியேங்களைத் தேவரீர் ஈண்டுவரும் வண்ணம் விளித்தருளினமை யாது காரணம்பற்றி என்றுஅடியேங்கட்கு மொழிந்தருள்க" எனப்பிரார்த்தித்தனர். அப்போது சிவபிரான் அவர்கண்மேல் திருவருணோக்கஞ்செய்து "கணாதிபதிகளே! நமதுபத்தசிரோமணியாகிய மாணிக்கவாசகன்பொருட்டுக் குதிரைகொணர்வேமென முன்னமே யாம்திருப்பெருந்துறையில் மொழிந்தேம்; குதிரையின்நிமித்தமாய் அரிமர்த்தனபாண்டியன அவனை வெயிலிடை நிறுவுவித்து மிகவும் வருத்துவிக்கின்றான். எமது வாற்சல்லியகுழந்தையாகிய மாணி

க்கவாசகன் வேதனையினால் உருகியழ, அதனையாம்சகியேம். எமதுகுழந்தையின் சிறையைஇன்று விரைவிலே விடுவிக்கவேண்டும். இன்றே ஆவணிமூல நக்ஷத்திரம். ஆதலில் அரிமர்த்தனபாண்டியனுக்கு இன்றே குதிரையெல்லாம் செலுத்தல்வேண்டும்; ஆயினமையின் நீவிரெல்லீரும் விரைந்துசென்று வனத்திற்சஞ்சரிக்கும் நரிகள்யாவையும் ஒருங்கேதொகுத்து, அவற்றையெல்லாம் பரிகளாக்கி, நீவிர்அப்பரிகளைசெலுத்தும் சேவகர்களாகி முன்னாச்செல்லுங்கள்; யாமும் குதிரைவியாபாரர்திபதியாய்உங்கள்பின்வருவேம்'' எனப்பணித்தருளினர். இவ்வாறுசிவபெருமான் பணித்தருளலும் நந்திகேசுவரர் முதலியோர் அக்கணத்தேதானே அரணியத்திற் சஞ்சரிக்கும் நரிகள்யாவும் பரிகளாய் அமையும்வண்ணமியற்றி, தாங்களும் குதிரைச்சேவர்கள் வடிவம்பூண்டனர். இங்ஙனமாதலும் பக்தஜனவற்சலராகிய மஹாதேவர், அரிபிரமேந்திராதியர் வழிபடும் தமதுசதாசிவமூர்த்ததத்தை மறைத்துக்குதிரைவாணிப்பிரபுபோலவேஷம்பூண்டு சதுர்வேதங்களாலும் அமைந்த உத்தமவாசியின்மேல் இவர்ந்தருளிப் பாண்டிதேசத்து இராஜதானியாகிய மதுராபுரிநோக்கிச் சென்ற

ணர். சங்கம் பூழுவம் எக்காளம் சுரமண்டலம், பேரி
கை முதலாயவாத்தியங்களின் கோஷம அஷ்டதிகா
ந்தங்களையுஞ் செவிடுபடுத்திற்று. குதிரைகளின் குர
ங்களினின்றெழுந்த பூதூளி, வாசுகி, அனந்தன், தக்க
ன், சங்கபாலன, குளிகன், பதுமன், மகாபதுமன, கா
ர்க்கோடகன் ஆகிய அஷ்டமாநாகங்களின கண்களை
மறைத்தன. குதிரைகள்பாய்தலால் பூமியைத்தாங்கு
ஞ் சேஷன் அபிக்ஷணம் பணமகுடம்நெளித்தனன.
குதிரைகளின் கனைப்பிலெழுமொலியால் ஐராவதம்,
புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம, புஷ்பத
ந்தம், சார்வபூமம், சுப்பிரதீபம், ஆகிய அஷ்டகஜங்க
ளும் வெருவி மேனிவிதிர்த்தன. குதிரைக்கூட்டத்தி
ன ஒலியினாலும் குதிரைசசேவகரார்ப்பினாலும் கை
லை, இமயம, ஏமகூடம், கந்தமாதனம், நிடதம், நீலகிரி,
மந்தரம், விந்தம், ஆகிய அஷ்டகுல கிரிகளின் குகைக
ளிலே அனுநாதம்நிறைந்து யார்க்கும் பயமவிளைந்த
து. இவவாறுகுங்காலையில் மதுராபுரியின்துவாரத்தி
ற்கணித்தான ஸ்தானத்தில்நின்ற சிலர்குதிரைப்ப
டைவருதலைக்கண்டு, பவனமேவகமும் பின்னிட்டவி
ரைவுடன் முன்னோடி, பாண்டியமகாராஜன சமுகத்
திற்சென்று விநயமாய் வணங்கிநின்று தலைகளின

மேல் கைகள்கூப்பிவணங்கி "மஹாராஜனே சந்திர குலதிலகமே! தூளிஎங்கும்பரக்கவும் வாத்தியங்கள புகாந்தகாலத்துச் சமுத்திரம்போல மஹாகோஷம விளைக்கவும் குதிரைப்படை உமதுநகரின்மதிற்கணித்தாய் வருகின்றது. யாமிதுகண்டனம்." என்றுவிண்ணப்பஞ்செய்தனர்.

அவர்களுரைத்த வார்த்தைகேட்டலும, அரிமர்த்தனபாண்டியராஜன் நிர்த்தோஷரான திருவாதவூரடிகளை வருத்தினமைபற்றி, அளவில்லாத பச்சாத்தாபமுற்று, தனது அசம்பிரேக்ஷிய கிருத்தியத்தை நினைந்து நினைந்து, வருந்தி, பின்னர் ஒருவாறு மனந்தேறி, அவர்மேல் வாற்சல்லியமும் அபிமானமும கொண்டு, அவரைத்தன்முன்னிலையிலழைத்து, அவர்மனத்தை மகிழ்விக்கும்பொருட்டாய்ப் பீதாம்பரம இரத்தினாபரணம் ஆதியவற்றைஅளவில்லாதுஈந்து "சிரேஷ்டமந்திரியாரே! நீர் என்பொருட்டாயக்கொண்ட குதிரைகளைக்காணும் வண்ணம் வாரும்" என்று பிரீதி வாசகம்பகர்ந்து, அவரோடு இரத்தினச சிவிகையிலேறி மதுரைமாநகரத்தின் மதிற்புறத்துளகான வையாளிவீதிசென்று, அவ்விடத்து தீந்தேனறுளிக்கும் புஷ்பமாலிகைகளாலலங்கரிக்கப்பட்டு, எ

வ்விடத்தும் பனிநீர்வீசப்பெற்ற சைத்தியமானமுத்துப்பந்தரின் நீழலிலே கனகபீடத்தின்மேல் உல்லாசமாய் வீற்றிருந்தனன். இயலிசைநாடகம் எனனும் முத்தமிழிலும வல்லபுலவர்சூழவும், வேதபாரகர்களாகிய பிராமணோத்தமர்கள் மங்கலவாசகம்பகரவும, சுந்தரமங்கையர்கள் கைவளைகள்புலம்பக்கவரிகள் வீசவும், மந்தமாருதம்நறுமலர்களின் வாசந்தோய்ந்து வந்துலாவவும், ஆராவலிமுதலிய ஆபரணங்கள் மினனவும், பூரணசந்திரன்போல அரிமர்த்தனபாண்டியமஹாராஜன் வீற்றிருத்தலும், மாணிக்கவாசகசுவாமிகளது அகங்களிப்பவும், யாவரதும் விலோசனாரவிந்தங்கள் களிப்பவும, மறுவில்லாத சந்திரகுலம விளஙகவும், சிவசாதனங்களாகிய திருநீறும் உருத்திராக்ஷமாலையும் பஞ்சாக்ஷரமும் ஓங்கிவர்த்திக்கவும, சங்கு, எக்காளம், பேரிகை, துந்துபி,முதலியவாத்தியங்கள் கடல்போலொலிக்கவும், குதிரைப்படை பிரமப்பிரளயகாலத்து எங்கும் பரந்துவரும் சமுத்திரம்போல வருதலைதூரத்தேகண்டனன். குதிரைச்சேவகர்களிற் சிலர் இரத்தினமிழைத்தசிரவேஷ்டனத்தர்; ஹாராவலிபிரகாசிக்கும் மார்பினர், செம்பட்டாத்தாலியற்றிய கவசத்தினர்; உடைவாள் பிரகா

சிக்கும் இடையினர்;செருப்பணிந்தகாலினர்; சூர்த்த நோக்கினர்; இடிமுழக்கம்போன்ற தொனியினர்; இன்னனவானபல்லலங்காரங்களோடு எண்ணில்லாநூற்றுடையினும் குதிரைமேலிவர்ந்து மதர்ப்புடனே அசைந்துவர,கருணாமிருத சாகரமாகிய சோமசுந்தரக்கடவுள் குதிரைவாணிபர்வேஷத்தராய், தருமார்த்தகாமமோக்ஷங்களாகிய சதுஷ்பாதமுடையதும், ஞானகாண்டம், கருமகாண்டமாகிய இருசெவியினதும், ஆலோகனாதீதமான பரஞானம் அபரஞானம் ஆகிய கண்ணினதும், விதியாகிய முகத்தினதும, நிஷேதமாகிய வாலினதும், விவிததந்திரங்களாகியபுறச்சருமத்தினதும், மந்திரபேதங்களாகிய சதங்கைகள் சிலம்புகள் கண்டாபரணங்கள் ஆகியவை பொருந்தப்பெற்றதும், தாரகமாகிய கடிவாளம் பொருந்தப்பெற்றதும் புறச்சமயங்களாகிய உலகாயிதம், பௌத்தம், க்ஷமணம், மீமாம்சை, பாஞ்சராத்திரம், பட்டாசாரியம், என்பனவாதியான சைநியங்களெல்லாம் இரிந்தோட மஹாயுத்தமவிளைப்பதும், கோடிகோடி அண்டங்கள்யாவற்றையும்பறித்து ஓர் பிண்டமாக அடக்கிஉண்ணுந்திறத்ததும்,ஆகிய சதுர்வேதப்புரவியின்மேல்உபநிஷதங்களாகிய கல்லணை

சேர்ந்து, அதன்மேல்இவர்ந்து, ஆரணமாகிய உறை யினின்றெடுத்தஞானமாகியகட்கம் புறவிருளைநீப்ப, கோபந்தமும் உருத்திராக்ஷமாலாபரணமும் வச்சிர முதலியவற்றால் இயன்ற ஹாராவலியும புஜவலயங் களும மணிக்குண்டலங்களும்வசசிரக்கவசமும் நுத லிலணிந்த திரிபுண்டரமும வெண்பட்டும்பிரகாசிப் ப, திருவடிகளிலே வேதச்சிலம்புகள் புலமப, இரு பாலும கங்காநதியின்தாவல்யமான தரங்கங்கள்போ ல சாமரங்கள் இரட்ட, முத்தவெண்குடை நிழற்ற, தோற்கருவி, துளைக்கருவி, மிடறுக்கருவி, நரம்புக கருவி, கஞசக்கருவி முதலிய பலவாத்தியஙகளும ஆ கமவேதபுராணஙகள் உருவெடுத்துவந்து சிவபெரு மானே பரமபதியென அறைதல்போல ஒலிப்ப, ஆ ரியதேச இராஜாபோல அரிமாத்தனபாண்டியமஹா ராஜனது கண்களிப்ப இதயாம்புஜம் அலர எதிர் வந்தனா.

பிரமபிரளயகாலத்திலே மஹாசமுத்திரம ப ரந்தாற்போலக குதிரைப்படை எங்குஞ்செறிய, மேக படலத்தைக்கிழிதது ஆதித்தியன் சோபிததாறபோ ல சாவாபரணலஙகார தேகததராய் சேவகர்கள் வா ள வேல் வில்லு பாணம்முதலிய தரித்துவர, சோப

சுந்தரக்கடவுள் தமது திருக்கண்ணமூலாலே தங்கந் மனமதன அனந்தம் யுகங்களாய் துஷ்கரமான தவமியற்றிப் பெற்ருலன்ன சுந்தரமான திருமேனியுடன் தோன்றுதலைக் காண்டலும, அரிமர்த்தனபாண்டியன் மிகுந்த விஸ்மயமடைந்து, இவ்வலங்காரங்கள் யாவற்றையுங் காணுதற்கு தேவேந்திரனுக்குப்போல எனக்கு ஆயிரங்கண்கள் இலவே என்று கூறி, ஆனந்தம்பொங்கித் ததும்பும பூரணசந்திரனபோன்ற வதனத்தோடு திருவாதவூரடிகளைப்பார்த்து "மந்திரிசிரேஷ்டரே இக்குதிரையின்மேல் வருகின்ற மஹாபிரபு யாவா? இவரைக்காணலும எனமனசெல்லாம் ஆதித்திய கிரணம் வீழப்பெறற நவநீதமபோல உருகுகின்றதே; இவரிடத்துப்பேராசை விளைகின்றதே; இவர்யார் சொல்லும சொல்லும்" என்று பலகால் வேண்டினன். அப்பொழுது சிவபெருமான்கொண்டருளிய திருவுருவினைக்கண்டுகொண்டு திருப்தியுறுது பின்னரும் பார்த்துநிற்கும திருவாதவூரடிகள் மஹாராஜனை நோக்கி "சந்திரகுலாதிபதி! இவர் யாவரென்று யானறியேன்; இவருள் முக்கியர் யாரென்றும அறியேன்" என்றனர். பினபு மஹாராஜன் மந்திரிசிரோஷ்டராகிய திருவாதவூரடிகளைநோக்

கி "மந்திரியாரே! ஆரியதேசப்பிரபுகளாகிய இவர்கள் குதிரையேற்றஞ்சிறிது காட்டும வண்ணம் சொல்லுக" எனறனன். அதுகேட்டுத் திருவாதவூரடிகள் ஐயையோ! மஹாராஜன் இங்ஙனங்கூறினனே; அரிபிரமேந்திராதியர் வழிபடும் பரமபுருஷராகிய சோமசுந்தரக்கடவுளையா இவனுரைத்தவாறு செயயும்வண்ணம் யான் பணிப்பேன்; இஃது என்ன?" என்று சிறிதுவருந்தி, சிவபெருமானுக்குச் சமீபதேசென்று, மனத்தால் வணங்கிநின்று வெளியில் வணஙகார்போல நடித்து, அவனைநோக்கி "விஷ்ணு முற்காலத்தில் வராகவடிவெடுத்தும் பிரமா அன்னப்பறவை வடிவெடுத்தும் அடியுமமுடியும முறையே காணருமபெருமானே! இடபவாகனத்தின்மே லன்றி இன்று குதிரைவாகனத்தின்மேல் இவர்ந்து வரக்காண்பதற்கு யான்யாதுதவம்புரிந்தேன்? தேவரீர்நயனேந்திரியத்திற்குக் கோசரமான இவ்வடிவங்கொண்டுவந்த காரணத்தால் அடியேன்தரிசித்து உய்யப்பெறறனன். தேவரீர் அவாங்மனகோசரமான நிஷ்கலவடிவமாயிருப்பில் அதனையார் தரிசிக்கவல்லார? விஷ்ணு பிரமா இந்திரன் முதலியோர் தேவரீரது எவலைச் செய்யும்பொருட்டு சிரத்தின்மேற் குவித்த

கரத்தராய்அபேக்ஷித்துநிற்க அடியேனை ஆட்கொள்ளும்பொருட்டாய் இப்பொழுது, அச்சுவவியாபாரியாய் வடிவங்கொண்டு எழுந்தருளிவந்தீர்; இதனால் தேவரீர அடியார்க்கெளியவர் என்பது தெறறெனப் புலப்படுகின்றது.'' என்றுபலவான வாஸ்தவரூபமான வாசகங்கள் பகர்ந்து பாண்டியராஜனது விருப்பத்தினை அவர்க்குமொழிந்தனர்.

அப்பொழுது சோமசுந்தரக்கடவுள் அதறகுச சம்மதித்து, திருப்பாதங்களில் அணிந்த சதங்கையும் தாமேறிவந்த வேதப்பரியின் மணியும் புலைப, குதிரையின் கடிவாளத்தை இழுத்து அரசன் முன்னாச்சென்று "மஹாராஜனே! எமது குதிரையேற்றம் சிறிதுகாண் எனப்பகர்ந்து, தமதுகுதிரையை முன்னடத்தி மயூரகதி, மல்லகதி, வானரகதி, விடபகதி, வியாக்கிரகதி ஆகிய பஞ்சகதிகளும நவசாரியும் பதினெட்டுவிசித்திரமும் ஆகிய விகற்பங்களெல்லாந் தோன்ற நாகபந்தம் தீர்க்கவீதிமுதலிய வாசித்தொழில்களெல்லாம்காட்டி அஷ்டதிக்குகளும மயங்க இயற்றி விண்ணோரதும் மண்ணோரதும எண்டிசையோரதும் மனங்களையெல்லாம் அசைத்தனர். அவ்வாறே, அவருக்குப் பாங்கேநின்ற சேவ

காகள யாவரும் தாம்தாம் ஏறிவந்த குதிரைகளின் சாமர்த்தியங்களையெல்லாம் காட்டினர். அதுகண்டு பாண்டியமகாராஜன் அளவில்லாத பேரானந்தங்கொள்ள; அவரையெல்லாம்பார்த்து "உங்களில் அதிபதியார்? கூறுமின் கூறுமின்" என்று பன்முறைகேட்டனன். அப்பொழுது அவர்கள்அங் குதிரையீட்டிச சோமசுந்தரக்கடவுளைக்காட்டி, "இவரேநமதுநாயகர்" என்று குறிப்பினலுணர்த்தினா. அப்பொழுது பரஞ்சோதியாகிய சோமசுந்தரக்கடவுள் ஆரணப்பரியில் இவர்ந்து மனோவேகசக்தியுடன் யாவரதும மனதைக்கவரும்படிவிளங்கி அவன்முன போதலும், அவன்அவரது கருணைநாட்டத்தின் உற்பத்தனத்தால் மனமயங்கித் தன்னைமறந்து ஆனந்தத்துடனெழுந்து தன்னிருசெங்கைக் கமலங்களையும் சிரமிசைகூப்பி வணங்கினின்றனன். அவன்போலவே அவனுக்குப்பாங்கேநின்றோர்யாவரும் சிரமிசைக்கரதலங்கூப்பி வணங்கிநின்றனர். அதுபொழுது "ஓர் குதிரை வாணிபப்பிரபுவைக்கண்டு அரசனகிய யானெழுந்தேன். இஃது அநுசிதமே" என்று எண்ணியிருந்த இலச்சையுற்று, நின்றவன்போலநடித்துப பின்னசனத்திலே இருந்திலன். பின்னர் அச்சுவப

நியாகிவந்த சோமசுந்தரக்கடவுள் அரிமர்த்தனபாண்டிய மஹாராஜனைநோக்கி "சந்திரவம்சசிகாமணியே! பாண்டியமஹாராஜனே! நமது வார்த்தையைக்கேளும். உமதுமந்திரிகளுள்ளே சிரேஷ்டரான இவர் உமக்கு எக்காலத்தும் இதமேசெய்கின்றனர். உமது கோசகிருகத்திலிருந்து எவ்வளவு திரவியம் இவர் குதிரைகொள்ளும் பொருட்டுக் கொணர்ந்தனரோ அவ்வளவும், எமக்கும் எமது அனுசரர்க்குமே வழங்கினர். இஃதன்றித் திலாம்சப்பிரமாணமேனும் நிஷ்பிரயோஜனமாக வியயஞ்செய்திலர். இவர் சோமசுந்தரக்கடவுளிடத்தே மிகுந்த பக்தியுடையா ரென்பதனை யாங்கண்டு அற்பதிரவியத்திற்கு இப்பரிகளையெல்லாம் விக்கிரயஞ்செய்தேம். இத்தன்மையன வானகுதிரைகளை வாங்குதற்கு உமதுதிரவியம்போதுமென்று ஒருகாலும் எண்ணற்க; மந்திரிமுக்கியரான இவரை, ஏற்றகாலத்திலே குதிரைகொடுவராது யாமேபிடித்தேம். நீர்பிடித்திலீர். அவருக்குத்துக்கஞ்சம்பவித்தமையாலே எமக்கு அதிகந்துக்கஞ்ஜனிக்கின்றது. இக்குதிரைகள்யாவும் உத்தம தேசங்களிலே உற்பவித்தன; உத்தமலக்ஷணம்வாய்ந்தன" என்றுகூறினர்.

அதுகேட்டலும், பாரெல்லாமுண்ட விஷ்ணு ப்போல உடலம்பூரித்து, அரிமர்த்தனபாண்டியமஹாராஜன், அச்சுவபதியை வியந்துபுகழ்ந்து, சிரக்கம்பஞ்செய்து விலைமதிப்பில்லாத ஓர் வஸ்திரத்தைக்கொடுத்தனன். அவ்வஸ்திரத்தினைச் சோமசுந்தரக்கடவுள் தமது திருக்கரத்திலிருந்த செண்டின் மேலேற்று நகைசெய்தனர். அதுகண்ட பாண்டியமஹாராஜன் "இவன் பிரபுவேனும் வியாபாரியே; அங்ஙனமாகவே, யான்வழங்கிய வஸ்திரத்தினைப் பணிந்துவணங்கிச் சிரத்தையுடனேற்றிலன்; அதனைமுடிமீது சூடிலன் ; அதனைவழங்கிய என்னைப்போற்றிலன்; உதாசீனமாயிருக்கின்றான். இஃதுஎன்னை? " என்றுசிந்தித்து மஹாகோபமுற்றனன். வேதச்சிரங்களாகிய உபநிஷதங்களுக்கும் அதீதமானவரான சிவபிரான் நயனேந்திரியத்திற்குத் திருசியமானவடிவுடன் வந்தனரேனும், பாண்டியராஜன் அவர் சிவபிரானென்று அறிந்திலன். சகலபிராணிகளிடத்தும் வியாபிக்கும் அந்தர்யாமித்துவ முடையாராகிய சிவபிரான் ஞானமளித்தக்காலன்றிப் பிறிதொருவாற்றாலேனும் அவரைக்காணல் அசாத்தியமே. அரசன்வெகுளுதலைக்கண்டு திருவாதவூரடிகள், அரிமர்த்

தனனைப்பார்த்து "மன்னவனே! அஷ்டதிக்கிலுள்ள அரசர்வழங்கும் வஸ்திரங்களையெல்லாம் செண்டிலேஏற்பது அவரதுதேசாசாரமே" என்றுபிரீதிவசனம் மொழிந்து அவனது மனத்திலுண்டான கோபத்தை நீக்கினர்:

இவ்வாறாயினபின்பு, அரிமாத்தனபாண்டியமஹாராஜன் வாசிலக்ஷணம் வல்லாரையழைப்பித்து, அக்குதிரைகளின் இலக்கணங்கள் யாவையும அறிந்து அவைகள்யாவும் இலக்கணம்வாய்ந்தவெனமொழிய, பின் பாண்டியராஜனது ஏவலர்களிலொருவர் கரத்தில்வாங்க, குதிரைச்சேவகர்களிலொருவா, "இவை காம்போஜதேசத்திற்பிறந்தன, இவை பால்லீகதேசத்தன; இவை வநாயுஜதேசத்தன; இவைகாந்தாரதேசத்தன; இவை ஆரட்டதேசத்தன; இவைசிந்துதேசத்தன:இவையவனதேசத்தன; இவைகந்தரதேசததன; இவைபாரவதேயத்திற்பிறந்தன; இவைகாஸ்மீரதேசத்தன; இவைதுவீபாநதரத்தினின்று கொடுவரப்பட்டன; இவைகேகயதேசததன; இவைவசந்தேசத்தன; இவைசௌவீரதேசத்தன; இவையாளவதேசத்தன; இவைகுருக்ஷேத்திரததன; இவைகலிங்கதேசத்தன; இவைசௌராஷ்

டிரதேசத்தன ; இவைஹேமவததேசத்தன; இவை மகததேசத்தன ; இவைபாஞ்சாலதேசத்தன;" என்று பரிகளின் பிறப்பிடங்கூறிக்கொடுக்க, அவைகள் யாவும் மந்துரையிற்பந்திக்கப்பட்டன. பின்னாசோமசுந்தரக்கடவுள் திருவாதவூரடிகளும் அரிமர்த்தன பாண்டியனுங்காண, தாம்வந்தவழியே சேவகர்களோடுதிரும்பி, தமதுவடிவமாறி மறைந்தனர். உடனே அவருடன்வந்த கணங்களும் மறைந்தனர்.

"மந்திரிசிரேஷ்டரே! நுமமாலே யான் உத்தமமான யுத்தப் புரவிகளைப்பெற்றேன். உமது சாமர்த்தியம் மிகவும் நன்று! நன்று! துஷ்டர்வார்த்தையைக்கேட்டு முன்னர் நும்மை வருத்தினேன். யான் அஞ்ஞானங்காரணமாக இழைத்த பிழைகள்யாவையும் பொறுத்துக்கொளல்வேண்டுமென்று பற்பல பிரீதிவாசகங்கள்பகர்ந்து அவரதுமனசைமகிழ்வித்து, அவரைவீட்டிற்கனுப்பிப்பின்பு சதுரங்கசேனைசூழ்ந்துவர, அரிமர்த்தனபாண்டியமஹாராஜன்மத்தியானமாகுஞ்சமயத்திலே தன்மாளிகைசேர்ந்தான். நகரவாசிகளும் அப்பொழுதே தத்தம் வீடுசென்று குதிரைகளின் வன்மையையும் விசேஷத்தையும் அதிசயத்துடன் பேசியிருந்தார்கள். சோமசுந்தரக்கடவுளும

ந்தாம அடியார்பொருட்டுச்செய்த காருண்யமயமான திருவிளையாடலைக் கிருபாசத்தியாகிய மீனாக்ஷிதேவி யாருக்குப் பரிவுடன் பகர்ந்திருந்தார். சிவபக்தராகிய மாணிக்கவாசகசுவாமிகளும மஹாராஜன் வழங்கிய பலவரிசைகளுடனே, வாத்தியங்கள் கடல்போலொலிப்ப, அங்கரக்ஷகர்கள்சூழ்ந்துவர, அனேகமடவார்மங்கலமேந்திவர, எண்ணில்லாத பிராமணாகளானந்தத்துடன பாடிவர, எம்பிரானாகிய சோமசுந்தரக்கடவுளது திருக்கருணைத்திறத்தைநினைந்துநினைந்து, ஆனந்தவருவிசொரிந்து,தம்மனைபுகுந்தனர். அச்சமயத்திலே அவர் வரவினைக்கேள்வியுற்று வந்துவந்து வினவிய பந்துக்களாயார்க்கும் அவ்வவர்க்கேற்றவாறே விடைபகர்ந்து, "திருவாலவாயின் கண்ணேயெழுந்தருளியிருக்கும் கருணாமிர்தசாகரமாகிய சோமசுந்தரக்கடவுள, அடியேனுக்குத் திருப்பெருந்துறையிலே மொழிந்தருளிய பிரகாரம் பாண்டியனுக்குக்குதிரைவழங்கி, அடியேனது வியசனங்கள் யாவையும் ஒழித்தருளினர். என் உடல்பொருளாவியாகிய மூன்றும் அவருடையனவே யென்றால் எனக்கு விளையுந்துயரனைத்தும் அவரது அன்றோ ? இனி இப்பிரபஞ்சத்தினை அடியேன் வெல்லும்

வண்ணம் பரிந்திரங்குவர். அன்றியும அடியேன் நி
த்தியானந்தசுகமனுபவிக்கும் வண்ணமும் திருவுள
ம பற்றுவா. இதிறசிறிதேனுஞ் சந்தேகமில்லை." எ
ன்று இவ்வாறு தம்முள்ளே சிந்தித்து இகத்திலும
பரத்திலும் ஆசைசிறிது மின்றி; உண்மையறிவான
ந்தவடிவாகியும், ஞானத்திற்கும் சூக்ஷுமஞானமா
யும இருக்கின்றசோமசுந்தரக்கடவுளது குஞ்சிதங
டன பாதங்களை மனசிலே ஓயாது தியானித்து இரு
ந்தனர். அப்பொழுது ஆதித்தியன் சப்தவாசிகளபூ
ண்டதேருடனே மேற்றிசைக்கடலுள்முழ்கி, பதுமி
னியாகிய நாயகிவியோகமாற்றாது பிரலாபனஞ்செய்
ய அஸ்தமயனமாயினன். உடனே ஆகாசத்திலும்
அஷ்டதிக்குகளிலும் அந்தகாரபடலம் செறிந்தது.
சிறிதுபொழுதின் பின்னர் சந்திரோதயமாயிற்று. சந்
திரன் கிரணமாகிய கரங்களை ஆகாசமெங்கிடத்து
ம பரப்புதல், சிவபெருமானது குதிரைப்படையின்
வரவால் எழுந்து ஆகாசத்திற் செறிந்திருந்த தூளி
யைநீக்குவான் போலும். உடனே குமுதம்முதலியன
தடாகங்கள்தோறும்அலர்கின்றமை,பாண்டியமஹா
ராஜனது தண்டத்தினலே வருந்திய மாணிக்கவாச
கசுவாமிகளது இருதயகுமுதம் சோமசுந்தரக் கடவு

ளது திருமுகசந்திரனைக்கண்டு அலர்ந்ததுபோலும். ஆகாசமென்னும் தடாகத்திலே அலர்ந்தநீலோற்பலம், ஆம்பல், முதலியபோல் நக்ஷத்திரகணங்கள்சோபித்தன. அவற்றினடுவில்விளங்கும்பதுமம்போலும் சந்திரன். அப்பதுமத்தின்மேல்வீழும் வண்டுக்குழாங்களைப்போலும் சந்திரன்மத்தியிலேவிளங்கும் களங்கம். மேகங்கள் லவணத்துவமபொருந்தியசமுத்திர ஜலத்தைப்பருகி பூமியிலே பல்லிடத்தும் சொரிதலைகண்டு சந்திரனென்னும் விதரணசீலபுருஷன் திருப்பாற்சமுத்திரத்தைப்பருகி, அப்பாலைப்பூமியெவ்விடத்தும் சொரிந்தாற்போல, சந்திரிகையெவ்விடதது ம பிரகாசித்தது. மனோகரமான சந்திரகிரணம் எவ்விடததும் பரத்தலும் சகலபிராணிகளும ஆனந்தமடைந்தன; சோலைகளெல்லாந்தளிர்த்தன; சகோரங்கள் மஹானந்தமடைந்தன.

அவ்விராவிலே பாண்டியராஜனது மந்துரையிலிருந்த பரிகளெல்லாம் ஆலவாயின்கண்ணே எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளது திருவுளப்பிரகாரமே மீட்டும் நரிகளாயின. அந்நரிகள் தங்கள் கழுத்திலிருந்த சங்கிலிகளையும் வார்களையும் அறுத்துக்கொண்டு பல்லிடத்தும் ஓடும்; எதிர்த்தவர்களை

ச் சாடும்; பற்பலவீடுகளை நாடும்; மதில்களை ததா ண்டி ஓடும்; குதிரைமுதலிய மிருகங்களைக் கொல் லும் வண்ணம் குழாமாய்க்கூடும். நரிகள் இங்ஙனை ம்செறிந்தமையாலே சங்குச்சப்தமும்; பற்பலவாத் தியங்களின் ஒலியும்; மதுரைமாநகரில் மாதாகள் செய்யும் சங்கீதநடனஒலியும்; வித்துவான்கள் செய் கின்ற பிரசங்கங்களின் ஒலியும் அடங்கின. இந்நரிக ள் பரததலைக்கண்டு அவற்றை ஓட்டும்பொருட்டுத் த ண்டுமுதலிய ஆயுதங்களைத்தாங்கி எதிர்த்தவர்களைச் சிற்சிலகொல்லும், சிற்சிலவெல்லும, மன்றிலும் சி த்திரகூடத்திலும் மாடத்திலும் செய்குன்றிலும் தெ ற்றியிலும் ஆவணத்திலும் ஆலயத்திலும்ஏனையஇட ங்களிலும் செறிந்துசெறிந்து மதுராநகரவாசிகட்கு மிகுந்ததுயர்விளைத்தன. அப்போது சிலர்தங்களை இ ரக்ஷிக்கும் பொருட்டு சோமசுந்தரக்கடவுளையும் மீ னாக்ஷிதேவியையும் அழைத்தழுவார்கள். சிலர்இரா ஜன்செங்கோல் கோடினதோ என்றுபுலம்புவார்கள். சிலர் அச்சத்தினாலே கதவடைத்திருப்பார்கள்.

இவ்வாறுகுங்காலையில் மனுஷர்களொலியும் கு திரைகளினொலியும் பக்ஷிகளினொலியும்நரிகளினொலி யும் ஏனையவற்றினொலியும் பாண்டியமஹாராஜனது

செவிப்புலஞ்சேறலும் அவன் பிரளயகாலத்திலே உருத்திரன்கோபித்தாற்போல மஹாகோபமுற்றனன். அதுகண்டுஅவன்பரிஜனர்அஞ்சிஅகன்றனர். பிராமணர்கள் மஹாராஜன் யாதுபுரிவாரோஎன்றுசிந்தித்து மனம்வெருவினர். அவ்வேலையில் அரிமர்த்தனபாண்டியமஹாராஜன் அனற்பொறிசிந்துங் கண்ணினல் மந்திரிகளிற் சிலரைநோக்கி "மந்திரிகாள்! இவ்வகையான நவீனசப்தம் இன்றுமதுராபுரி வீதியெங்கும் எழுங்காரணம் என்னையோ அறியேன்; அஃது யாது? நீவிர் உரைமின்" எனக்கூறினன். அவ்வுரைகேட்டு அவர்கள் "இராஜசேகரா! நேற்று இங்கு வந்த குதிரைகளெல்லாம் இப்போது கொடியநரிகளாய உருமாறின. இதுயாதுமாயமோ யாமறியேம்" எனறனர். உடனே பாண்டியமஹாராஜனது கோபாக்கினி முன்னிலும் சதமடங்குவர்த்தித்தது. அசசமயததில் அவனதுசேனைவீரர்கள் பல்லிடத்தும செறிந்தநரிகள்யாவற்றையும் நாலுதிசைக்குமோட்டிப் பினபு இராஜசமீபஞ்சென்று "நரேந்திரா! உமது*மந்துரையில் முன்னேநின்றகுதிரைகளையும் நேறறுவநத மாயப்பரிகள்கொன்று நரிவடிவமெடுத்துப பறப

* மந்துரை-குதிரைச்சாலை.

ஸமிருகங்களுக்கும் மனுஷருக்கும் தீங்குவிளைந்தது ஒழிந்தன. இஃது என்னமாயமோ! சோமசுந்தரக்கடவுளது திருவுளமமாறியதோ? அல்லதேல் அவரது திருவிளையாடலோ?" என்று வியசனத்துடன் கூறினினறனா.

அப்போது மஹாராஜன் வன்கோபமுற்று, தனசருப பாங்கேநின்ற மந்திரிகளைப்பார்த்து "அமைச்சரே! திருவாதபுரேசனென்னும் இருண்மனமுடைய திருடன எனது திரவியங்களெல்லாவற்றையும அபகரித்து, திருப்பெருந்துறையிலிருந்த மாயவேஷாகளுடன் பயின்றுகற்ற மாயாதந்திரப்பிரயோகத்தினலே காட்டின்கண்ணே சஞ்சரிக்கும நரிகள் யாவற்றையும் பரிகளாக்கி என்னைவஞ்சித்தனன். இவனசெய் மாயங்கண்டீரா? இம்மாய மெனக்குசசெய்த திருவாதபுரேசனுக்கு என்செய்யலாம்?" என்று கூறினன். அவ்வார்த்தைகேட்டு மந்திரிகள்யாவரும அவனது துக்கத்தையும் கோபத்தையும் நோக்கியாதும்பேசாது சித்திரப்பிரதிமைபோல் அசைவறநின்றனா. அந்தவேலையிலே, சோமசுந்தரக்கடவுளதயக்காகப் பரிகொணர்ந்தனர் என்பதனை மனசிலேஉள்ளி உள்ளி, சோகங்களெல்லாம் நீங்கப்பெறறு, ஞா

னதேசிகரது திருச்சரணபுண்டரீகங்களைத்தியானித் துக்கொண்டிருந்த திருவாதவூரடிகள் அன்றிராவில சம்பவித்த தொன்றையும் அறியாராய் அரிமாத்தன பாண்டிய மஹாராஜன் சமீபஞ்சென்றனா.

அந்தப்பொழுதில் பாண்டியமஹாராஜன், திரிபு ரதகனகாலத்திலே மஹாதேவர் நகைத்தாற்போலக் கோபநகைசெய்து அவரைநோக்கி "பிரதானமந்திரி யாரே! நீர் என்பொருட்டு நல்லகுதிரைகள்கொணர்ந் தீர் இது மஹோபகாரம், இதுசெய்ய உம்மையன்றி வேறுயார்வல்லார்? உம்மைப்போல இன்னும் சிலமந் திரிகள் எனக்கிருப்பின் நானென்ன க்ஷேமமடையா திருப்பேன ? நீர் நேற்று இந்திரஜால மஹாஜாலவித் தையேகாட்டினீர். நேற்று நீர்கொணர்ந்தகுதிரைகள் யாவும் ஓடின. அன்றியும் என்பட்டினத்தில் வசிப் போர் மஹாபீடை எய்தினர்" என்றனன். அதுகே ட்டுத் திருவாதவூரடிகள் சோமசுந்தரக்கடவுளது தி ருமேனியைக்கண்ட காரணத்தினலே, சிறிதேனும் அச்சமின்றி, மலர்ந்தமுகத்துடனே அவனைப்பாரத் து "இராஜனே ! குதிரைகொடுவந்தமையா லெனக்கு யாதுதோஷம் ? யான் இந்திரஜால மஹாஜாலங்காட் டினேன் என்றுசொல்கின்றீரோ. நான் உமக்கு யா

தானும் ஓர்துரோகஞ் செய்திலேன் காரியகர்த்தா யானல்லன். அக்குதிரைகள்யாவும் என்னாலும், உமதுமந்திரிகளாலும், அச்சுவாத்தியக்ஷர்களாலும் நன்றாய்ப் பரிசோதிக்கப்பட்டனவே; அவைகளைக்கண்ட ஜனங்கள்யாவரும் அளவில்லாத சந்துஷ்டியடைந்தமை நீருணர்வீரோ, யானும்அக்குதிரைவாணிப பபிரபுவினாலே வஞ்சிக்கப்பட்டேன். அக்குதிரைகளுக்கிருந்த உத்தமலக்ஷணங்களை யெல்லாம் கேட்டு, மிகுந்தஆனந்தமடைந்து, நீரேவரிசையளித்தீர். இக்குதிரைகளையான் கொண்டிலேன்; சோமசுந்தரககடவுளே கொண்டனர்; நீர் சோமசுந்தரக் கடவுளிடத்தே மிகுந்தபக்தி யுடையீராதலால் அவர்இத்தன்மைத்தானதிருவிளையாடல்உமக்குக்காட்டிமறைந்தனர். இஃது நிச்சயமே. அவரதுலீலையினாலே நீர் மயங்கினீர்" என்றனர்.

அப்போது பாண்டியமஹாராஜன் சகிக்கருங் கோபமடைந்து, பின்னருமவரைநோக்கி "திருவாதபுரேசரே! நேற்று இங்கேகொணரப்பட்டகுதிரைகள் யாவும் நரியுருவமெடுத்து, எம்மந்துரையினின்ற,மந்தரமலைபோன்ற உன்னதமானகுதிரைகள்யாவையுங கடித்தன. ஆதலால் அவைகள், கட்டியிருந்த பந்

னங்களை யறுத்துக்கொண்டு நரிகளுடனே வனத்து க்கு ஓடின" என்றுசொல்லி, குரூரநோக்குடனே, தனது தண்டத்தலைவர்களைப்பார்த்து "தண்டத்தலைவர்களே! இம்மாயாவித்தகனைக் கொடுபோய், கட்டி வெயிலில்நிறுவி, மிகுந்தவருத்தஞ்செய்து, எனக்குக் குதிரைகொள்ளும்பொருட்டுக் கொடுபோந்த திரவியங்களையெல்லாம் வலிந்துவாங்குங்கள்" என்று இடி போல்முழங்கி ஆஞ்ஞாபித்தனன். ஏவலாளர்கள் அக்கணத்திலேதானே திருவாதவூரடிகளது திருப்புயங்களையுந் திருக்கரங்களையுங்கட்டி, இழுத்துக்கொடு போய், அக்கினியிலுமதியுஷ்ணமான வெயிலிடை நிறுவி, சூரியனைப்பார்க்கும்வண்ணம் அவரது திருமுகத்தைத்திருப்பி, திருநெற்றியிலே பாரமானகல் லேற்றிக் கொடுமைசெய்தனர்.

அப்பொழுது திருவாதவூரடிகள் அதனைச் சகிக்கலாற்றாதவராய்ப் பரமசிவனை ஆமந்திரணஞ்செய்து புலம்புவாராயினர்.

கொச்சகக்கலிப்பா.

நாதவோநாதமுடிவிறந்தநாடகஞ்செய்
பாதவோபாதகனுமென்னைப்பணிகொண்ட

வேதவோவேதமுடிவின்விளைந்ததனிப்
போதவோபோதநெறிகடந்தபூரணவோ.

ஐயவோவென்னுடையவன்பவோவன்பர்க்கு
மெய்யவோமெய்யில் வினையேன்றலைவைத்த

கையவோசெய்யகழற்காலவோகாலனைக்காய்
செய்யவோவேதப்பரியேறுஞ்சேவகவோ.

அத்தவோகல்லாக்கடையேனையாட்கொண்ட
பித்தவோபொய்யுலகைமெய்யாகப்பேதிக்குஞ்
சித்தவோசித்தந்தெளிவித்தெனைத்தந்த
முத்தவோமோனமயமானமூர்த்தியவோ.

ஆசிரியவிருத்தம்.

தொல்லையோரிருவர்தேடுஞ்சோதியேயாதுசெய்வேன், தில்லையோர்பரவநின்றதெய்வமேயாதுசெய்வேன், இல்லையோகருணைநின்பாலின்றெனையடிமைக்கொண்டாய், அல்லையோதமியேனின்னலறிகியோவறிந்திலாயோ.

பரித்திரணரியேயானபான்மைகண்டடியேன்றனனை,வருத்தினரிதனைமாற்றவல்லநீமாற்றாயாகில்,தரித்தனைவிடத்தையென்னுந் தன்மையும்புரங்கண்முன்னாள், எரித்ததுமிலவாமென்றென்றிரங்கினரொவர்க்குமிக்கார்.

சர்வலோகநியந்தாவே! நாதாந்தாதீதமான வெளியிலே ஆனந்தத்தாண்டவம்புரிந்தருளுகின்ற திருப்பாதாரவிந்தங்களுடையபெருமானே! பாவியாகிய அடியேனையும் ஓர்பொருளாக எண்ணி அடிமைகொண்டருளியபிரானே! வேதங்களைத் திருவாய்மலர்ந்தருளியகருணாநிதியே! வேதாந்தத்திற் பிரதிபாதிக்கப்படுமேகஞானசுவரூபியே! ஞானாதீதமானபூரணரே! என்பிதாவே! அடியேன்மீது நேயம்பூண்டுவந்தருளியபிரானே மெய்யடியார்க்கு மெய்யனே! அசத்தியம் நிறைந்தசிறியேனது சிரத்திலும் திருக்கரத்தை வைத்தருளிய பிரானே! அடியார்களை இரக்ஷித்தலில் யாவரும் நிகரில்லை என்னும் ஜயசீலத்தையாககும் விளக்கும்பொருட்டு அணிந்த வீரக்கழல்பொருந்திய திருச்சரணபுண்டரீகமுடையாரே! பக்தசிரோமணியாகிய மார்க்கண்டேயரது பிராணனைக்கவரும்பொருட்டு வந்தயமனை உதைத்தருளிய காருண்யரூபியே! சதுர்வேதவாசியின்மேல் இவர்ந்து வந்தருளியதேவனே! என்பிதாவே! மூடனாகிய சிறியேனை அடிமைக்கொண்டருளிய பெருமானே! மித்தியாரூபமாகிய பிரபஞ்சத்தைச் சத்தியரூபமாகக்காட்டும் சித்தரே! என்மனசின்கண்ணே நெடுங்காலம் குடி

புக்கிருந்த சந்தேகங்களனைத்தையும்நீக்கி ஞானம் உண்டாக்கி இரக்ஷித்தருளிய அநாதிமல முத்தசித்துருவாகிய பெருமானே! ஞானானந்தமயமூர்த்தியே! முன்னைப்பழம் பொருட்களாகிய பிரம விஷ்ணு இருவரும் முறையே அன்னமாயும் பன்றியாயும் முடியும் அடியுந்தேடியும் காண்பரியபெருமானே! சிதம்பரத்தின்கண்ணே தில்லைமூவாயிரவர்வணங்கும் வண்ணமெழுந்தருளிய பிரபுவே! அடியேன்யாது புரிவேன்யாது புரிவேன்? கிருபாசாகரமாயிருக்கின்ற தேவரீரிடத்து இப்பொழுது அநுக்கிரகமில்லையோ? அடியேனை ஆட்கொண்டிலீரோ! சர்வஞ்ஞராயிருக்கிறதேவரீர் அடியேனது வியசனங்களையெல்லாம அறியீரா? தேவரீர் நேற்றுக்கொணர்ந்த குதிரைகளனைத்தும் நரிகளாயினமைகண்டு, பாண்டியராஜனது தண்டத்தலைவர்கள் யான்தேவரீருக்குத் திருப்பெருந்துறையில் அர்ப்பணஞ்செய்த திரவியத்தையெல்லாம் வாங்கும்பொட்டு என்னைவருத்துகின்றனர்; அடியேனது இத்துயரைத்தேவரீர் நீக்கியருளாதிருப்பீராயின், முற்காலத்திலே திருப்பாற்கடலில் உண்டாகி விஷ்ணுமுதலிய தேவர்கள்யாவரையும் அஞ்சுவித்த ஆலகாலவிஷத்தைத் உண்டருளியதும், பா

ஷண்டதருமமேற்கொண்டு யார்க்கும் இன்னல்விளை
த்த திரிபுரவாசிகளைப்புரத்துடன் எரித்தருளியது
ம் ஆகிய இக்காருண்யகிருத்தியங்கள்யாவும் பொய்
யாகுமே " என்று பலவாறு பிரலாபித்தனர்.

மாணிக்கவாசகசுவாமிகளது பிரலாபசுரம்எங்
கும் செவியுடையாராகிய சோமசுந்தரக்கடவுளது தி
ருச்செவிப்புலஞ்சென்றடைதலும், இளங்கன்றழும்
ஒலிகேட்ட ஈன்றணிமைப்பசுப்போலஇரங்கி,கருணா
மிருதசாகரமாகிய எம்பெருமான், அவ்வடியாரது பி
ரபாவத்தையார்க்கும் தெரிக்கும்பொருட்டும், ஆரண
ங்களாலும் வர்ணித்து முடியாத தமது திருச்சடிலத்
தின்மீது மண்தரிக்கும்பொருட்டும் தம்மீது மெய்ய
ன்புகொண்ட பிட்டுவாணிச்சியம்மையைத் தமதுஉ
லகத்திற்சேர்க்கும்பொருட்டும், வேகவதிநதியைநோ
க்கி " வேகவதியே ! நீசீக்கரம் மஹாபிரவாகத்துட
ன் மதுராபுரியெங்கும் பரந்து நமது குழந்தையாகி
ய மாணிக்கவாசகனது வியசனத்தை ஒழி " என்று
ஆஞ்ஞாபித்தனர். சோமசுந்தரக்கடவுளது திருவா
ஞ்ஞையைச்சிரமீது சிரத்தையோடுகொண்டு வே
கவதிநதி மஹாதொனிவிளைத்து, திரையாகிய கரங்க
ளால் இருகரையிலுமுள்ள மர்லதி, கொன்றை, கா

யா, முல்லை, குருந்து, பலா, ஆசினி, மா, அசோகு, தெஙகு, கூவிளை, குரா, மரா, முதலான விருக்ஷங்களைப்பிடுங்கி,பல்லிடத்தும்வீசி, மதுராபுரியினுள்ளே புகுந்தது. நதிப்பிரவாகஞ்செல்லுகையில், அதிலே கரியயானைக் குழாங்களெல்லாம அகப்பட்டுச்சென்றமை முகிற்குழாங்கள் படலம்படலமாய்ச் சென்று றபோலும். சங்கங்கள்நாதஞ்செய்ய, திரைக்கரஙகள் மேலோங்கி எழ,வைகை நதிசெல்லுகின்றமை, சிவபக்தராகிய மாணிக்கவாசகசுவாமிகளை வருததும் தீயனை அழைத்து அவனைத்தண்டிக்கும் வண்ணம் கையோச்சிச் செல்லல்போலும். மேலாகப்போகின்ற சங்குகளை ஆகாசத்திலுள்ள நக்ஷத்திரக் குழாததுடன் சேரும் வண்ணம் எறிந்தும்; வேகமான சலமபொருந்தியும் தீயமிருகங்களை அழித்தும, பசுமுதலியவற்றை அளித்தும் செல்லுகின்றவேகவதி, திரிசஙகுச்சக்கரவர்த்தியை நக்ஷத்திரபதவிக்குச்செலுத்தியும, மிகுந்தகோபமுற்றும, துஷ்ட நிக்கிரகம்பண்ணியும், சிஷ்டபரிபாலனஞ்செயதும் திரிந்தகௌசிகமுனியை நிகர்க்கும். பற்பலதாமரைமலர்கள் பல்லிடத்தும் பரந்துவிளஙகவரும்வேகவதிஇந்திரனைநிகர்க்கும். அரவிந்தம், அசோகம், சூதம், நவமல்லிகை

நீலோற்பலம் ஆகியவற்றின் மலர்களையும் கரும்புகளையும் திரைக்கரங்களால் வாரிக்கொண்டு செல்லும் வேகவதி மன்மதனை நிகர்க்கும். இவ்வாறாகவேசென்ற வேகவதிமதுராபுரி மதிற்புறம்சென்று, ஆண்டுளவாயவீடுகளையும் சிறிய ஆவாசங்களையும் இடிதது வாரிக்கொண்டு நகரினுள்ளேபுகுந்து, ஆவணவீதியினும தெற்றியினும் சதுக்கங்களினும் ஏனைய இடங்களினும் அதிவேகத்துடன் பரந்தது.

அதனைக்கண்டலும் வெருவிநகரவாசிகள்ஓடினார்; சிலர் ஒதுக்கிடம்நாடினர்; சிலர்தங்கள்தங்களபுத்திரர்களைத்தேடினர்; சிலர்தங்கள் புத்திரர்களைக்காணாது அவர்நதியிலே வீடினர்என்று ஒருங்கேகூடினார்; சிலாதமதுபாரிகளைக் கைகளிற்பற்றிஉயர்ந்தஇடத்திற்கோடுவார்கள்; சிலர் ஒதுக்கிடங்காணாது தடுமாறுவார்கள்; சிலர்தமது பொன்னையும் ஆபரணங்களையும் ஏனையபொருட்களையும் பேணுவார்கள்; சிலர் சிலபொருட்களைக் கைக்கொளமறந்து துக்கிப்பார்கள்; சிலர்மாடங்களிலும் மாளிகைகளிலும்கோபுரங்களிலும் ஏறுவார்கள்; சிலர் இந்நகரம் ஜலத்திலே அமிழ்ந்திப்போகுமேஎன்று புலம்புவார்கள்; சிலாஇவ்விதமான அதிசயம்யாம்எந்நாளுங்கண்டிலோ

ம், நேற்றும்பரிகளெல்லாம் நரிகளாயின ;இது அச ம்பவம், என்னதீங்கு சம்பவிக்குமோ என்று அஞ்சு வார்; சிலர்சமுத்திரராஜனாகிய வருணன் இப்பொ ழுதும் கோபிததுவந்தனனோ என்பார்; சிலர் எமது அரிமர்த்தனபாண்டிய மஹாராஜனது செங்கோல் கோடினதோ! சோமசுந்தரக்கடவுளது திருவிளை யாடலோ ! யாதோ அறியோம் என்பார்.

அப்பொழுது பாண்டியமஹாராஜனும் மிகுந்த வியசனமடைந்து நதியின்சமீபஞ்சென்று சுவாணமு ம் புஷ்பமும் முத்தும் பட்டுவஸ்திரமும், ஆபரண மும்,பிறசம்பாவனைவஸ்துகளும்நதியிலிட்டு இருகை களையும் சிரசின்மேற்கூப்பி "ஜகத்தாருக்குத் தாயே யார்க்கும் பிராணனே ! வேகவதி அன்னையே ! நின் கோபந்தணிந்து எங்கள்யாவரையும் இரக்ஷித்தருள்" என்றுபிரார்த்தித்தனன். அப்போதும் வேகவதிசிறி துங்குறையாது தரங்கசமூகங்களை ஆகாசமளவிற்கு வீசிப்பரந்தது. அதுகண்டு அரிமர்த்தனபாண்டியம ஹாராஜன் மஹாவியசனமுற்று-மந்திரிகளைப்பார்த் து"மந்திரிகாள் ! ஆதிகர்த்தாவாகிய சோமசுந்தரகக டவுளது பூசையில் யாதாலுமோர் குறைஉண்டாய தோ ? பெரியோர்களது மனநகுன்றும்வண்ணம் யா

தானுந் தீங்கிழைத்தேனே? என்செங்கோல் கோடியதோ ? சொல்லுமின். யாதுகாரணமாக வேகவதி நதிஇன்று என்பிரார்த்தனையுங் கடந்துபரந்தது?" என்று வினவினன். அப்பொழுது மந்திரிகள்யாவரும் அரிமர்த்தனபாண்டிமஹாராஜனை நோக்கி " மண்டலாதிபதி ! பரமசிவனது பக்தராகிய திருவாதபுரோசரது மனசுமிகவும் வருந்தியது; அவரை உமது தண்டத்தலைவர்கள் கொடியவெய்யிலில் நிறுவி மிகுந்ததுயரஞ்செய்தனர். ஆயினமையால் வேகவதி நதி இப்பொழுது அபூர்வமானபிரவாகம் பொருந்திற்று. அவரை வருத்தஞ்செய்யாது, மிகுந்தபிரீதிசெய்து சந்தோஷிப்பித்தால் இந்நதி இந்நகரைவிட்டு நீங்கும். இதுவே எம்மனத்தில்எழுந்தகருத்து"என்றனர்.

மஹாராஜன் அவர்வார்த்தைகேட்டலும் அபரிமிதமான சந்தோஷமுற்று " மதிமந்திரிகாள் ! யான் எண்ணியவாறே நீவிரும் இப்பொழுதுமொழிந்தீர்கள். இஃது மிகவும் நன்று"என்றுசொல்லி அவர்களைச் சம்பாவித்து மாணிக்கவாசகசுவாமிகளைத் தனது முன்னிலையிலழைப்பித்து, பிரீதியினுடனே பற்பல இனியவாசகம் பகர்ந்து "மந்திரிசிரோஷ்டரே ! நீர்திருப்பெருந்துறையிலே சிவபெருமானது அடியாருக்

குத தானம் வழங்கிய திரவியமெல்லாம் என்னுடையனவே. ஆதலின் அத்திரவியத்தால் உண்டாகும் புண்ணியமும் என்னையேசாரும்; இதனை எண்ணாதுயான் அஞ்ஞானகாரணமாக உம்மைத்தண்டிப் பிததேன், அஃது மடமை என்பது இப்பொழுதே எனக்கு நன்குதோன்றுகின்றது. யான்செய்வித்த இத்தண்டனைகளைப் பொறுத்தருளும்" எனப் பிரார்த்தித்தனன்.

பாண்டியமஹாராஜன் ஈண்டுகூறியவாறே பிரீதிவசனங்கள் மொழிந்தபொழுதும், முன்னே அக்கினிபோலக் கோபித்தபொழுதும், முறையே விருப்பும வெறுப்பும் பொருந்தப் பெருதவராகிய திருவாதவூரடிகள் வேகவதி நகரினுள்ளே புகாவண்ணம் சோமசுந்தரக்கடவுளைத் தியானித்து, அக்கணமே சுவர்ணபதுமினி என்னும் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து வெண்டுகிலுடுத்து விபூதி அணிந்து உருத்திராக்ஷமணிமாலைபூண்டு நித்திய கிருத்தியங்கள் முடித்து அத்தடாகத்தின் சமீபத்தில் வீற்றிருக்கும சர்வசித்தியளித்தருளும் பிரபுவாகிய விநாயகக்கடவுளை நமஸ்கரித்து, மாயூரவாகனராகிய சுப்பிரமண்ணியக்கடவுளை வந்தித்துப் பணிந்து, பின்னர்

மீனாக்ஷிதேவி எழுந்தருளியிருக்கும திருக்கோயி லமுன்சென்று பக்தியுடனே வணங்கி தோத்திரி தது "அகிலலோக ஜனனியே! அடியேனை இரக்ஷித தருள்க" எனப்பிரார்த்தித்து,பின்னர் மூன்றுபிரத க்ஷணஞ்செய்து அஞ்சலிக்கரத்தினராய்க் கும்பிட் டு, இடபத்தின்சமீபத்தே மூன்றுதரம் பக்தியுடனே நமஸ்காரஞ்செய்து, துவாரபாலகர்களையும் நந்திகே சுவரரையும் நமஸ்கரித்து, அந்தராவரணஞ் சென்று சந்திரசேகரரையும் நடேசரையும் நமஸ்கரித்து, து வாதசாந்தஸ்தலத்தில் இயற்றப்படும் நின்மலநடன த்தைக்கண்டு ஆனந்தங்கொண்டு "நான்புண்ணிய வானை! நான்புண்ணியவானை" என்று தி்து இஷ்டத் தினைமொழிந்து,நடேசரைப் பிரார்த்தித்து, மஹாம ண்டபத்தையடைந்து அந்தர்க் கிரகஞ்சென்று து வாரபாலகர்களைநமஸ்கரித்து, அங்கும் விநாயகக்கட வுளை வணங்கி, சோமசுந்தரக்கடவுளது அமலமான ஆதிலிங்கத்தைக்கண்டு பக்தியுடனே வணங்கி ஆன ந்தபாஷ்பஞ்சொரியும் கண்ணினராய் ஆனந்தசாக ரத்திலமிழ்ந்தி, புளகாஞ்சித சர்வாங்கராய் சர்வாபீ ஷ்டபிரதராகிய எம்பிரானைத் தியானித்து அவரது திருச்சந்நிதியில் நின்றனர்.

அரிமர்த்தனபாண்டியமஹாராஜன் தனது மந்திரிகளையழைத்து "மந்திரிகாள்! நீவிர்யாவரும்விரைவிலேசென்று வேகவதிநதியின்கரையை அடைப்பித்துவாருங்கள்" என்று ஆஞ்ஞாபித்தனன். அக்கணத்தேதானே மந்திரிகள்யாவரும் விரைந்துசென்று அந்நகரத்திலுள்ள பிரஜைகளுடைய தொகையெல்லாங்குறித்து, நதிக்கரையை அத்தொகைப்படியே பாகஞ்செய்து எல்லைவைத்து நகரமெவ்விடத்தும் பறையடித்து எல்லோரும் தத்தமக்குவகுத்த எல்லையை அடைக்கும்படி ஆஞ்ஞாபித்தனர். ஆஞ்ஞாபித்தலும் நகரவாசிகள் கூடைமண்வெட்டி ஆதியவற்றைகொண்டு வருவாரும் மரங்கள்சுமந்துவருவாரும் பசுந்தழைகளும் வைக்கோற்கட்டுகளும்கொண்டுவருவாருமாய் நதிக்கரையிற்கூடி, சிலர் வைக்கோற்கட்டுகளை நிறுத்துவார்கள்; மரங்களைநிறைப்பார்கள்; மஹாசப்தஞ்செய்வார்கள்; பறையடிப்பார்கள்; மண்வெட்டுவார்கள்; அதனைக்கொட்டுவார்கள்; நதிக்கரை அடைக்கப்படில் சந்தோஷமடைவார்கள்; கரையுடைத்து நீர்பெருகக்கண்டு நெஞ்சங்கலங்குவார்கள்; "வேகவதித்தாயே! இவ்வளவு கோபமேனுனக்கு, சாந்தமாகு சாந்தமாகு" என்பார்.

இவ்வாறே நகரவாசிகள் யாவரும் கரையடைக்குஞ்சமயததிலே, அந்நகரின் தென்கீழ்த்திசையில் வசிப்பவளும், அதிவார்த்திகமுடையாளும், முல்லை மலர்போல் வெளுத்தகேசமுடையாளும், தேகாநித்தியத்தையுணர்ந்து சிவபிரானையே எக்காலத்துஞ் சேவிப்பவளும், தினந்தோறும் முதலவித்தபிட்டினை திருவாலவாயின்கண்ணே எழுந்தருளிய எம்பெருமானுக்கு மானசார்ப்பணஞ்செய்து பின்னர் விக்கிரயஞ்செய்பவளும் ஆகிய வந்தியென்னும பெயரியவோர் பிராமணஸ்திரி, இராஜனது க்ாரியாதிபதிகள்செய்டம துயரஞ்சகியாது, சோமசுந்தரக்கடவுளது திருசந்நிதிசென்று, மிகுந்தபக்தியுடனேவணங்கி. "நாகபந்தனமுடையாரே! அரிபிரமேந்திராதியரறிவருமமலபரானந்தசோதியே! தீனரக்ஷகரே! அடியேன் யாதுபுரிவேன்? பாண்டியராஜனது ஏவலாளர்கள் எனக்கு வரையறுத்த பாகம் அடைப்பிக்கும் வண்ணம் கூலியாள் அனுப்புமாறு என்னை மிகவும்வருத்துகின்றார்கள். எனக்கோ நீரேயன்றி வேறோர்சகாயமில்லை. இவ்விருத்தாப்பிய காலத்திலே அடியேனுக்கு இச்சஞ்சலம்வருவது உமது அருட்டிறத்திற்குத்தக்கதா? ; தேவரீர் இப்போது அருள்புரியாதி

ருபயில் அடியேன் பிராணபரித்தியாகஞ் செய்வேன. வேறென்செய்யவல்லேன்?" என்றுபுலம்பிக்கண்களினின்று சோகபாஷ்பம் முத்துச்சரங்கள்போல ஓயாதுசொரிய அழுதுநின்று பின்வீடுசேர்ந்தனள். அப்போது அனுக்கிரகசிந்துவாகிய சோமசுந்தரக்கடவுள் வந்தியினது வியசனத்தை யொழிக்கும்பொருட்டும், பக்தசிரோமணியாகிய மாணிக்கவாசகப்பெருமானையே கொண்ட வாற்சல்யத்தை யாவர்க்கும் விளக்கும்பொருட்டும் திருவுளங்கொண்டு, நாதாந்தமுங்கடந்த தமது சதாசிவமூர்த்தத்தை மறைத்து மானுடவேடங்கொண்டு, அழுக்கு வஸ்திரமொன்று அரையிற்றரித்து, கூடைசிரசிற்கவிழ்த்து, தோளின்மேல் மண்வெட்டியேந்தி, மிகுந்த பசியுடையார்போலவும், கூலிகொள்ளப்படுதற்குப் பெருங்காதல் கொண்டார்போலவும், நடித்து, வந்திவசிக்கும் வீட்டிற்குமுன்னிருக்கும் வீதிசென்று "கூலிகொடுத்து என்னை ஏவல்கொள்வாருண்டோ" என்று சத்தமிட்டுநின்றனர். நித்தியானந்தராகிய சோமசுந்தரக்கடவுள் இவ்வாறுசத்தமிட, அதனைக்கேட்டு, வந்தி, மஹாசந்தோஷமடைந்து வெளியேசென்று, அக்கூலியாளையழைத்து, "அப்பா! என்க்கு வந்தாயறுத்த

பாகத்தை யடைத்துத்தருவாயா?" என்றுகேட்க, எம்பெருமான் "அதனையான் அடைத்ததற்கு என்னகூலிதருவாய்? அம்மா" என்றுவினவினர். அப்பொழுதுவந்தி "பிட்டிடுவேன்" என்றுசொல்ல, எம்பெருமான் பசியினாலே மிகவருந்தியவர்போல் நடந்து "அம்மாஎனக்கோபசி அதிகமாயிருக்கின்றது ஆதலால் உன்பிட்டில் உதிர்ந்தனவற்றை யெல்லாம் நானுண்ண இடுவாயாக; முதல்உண்டு என்பசியாறி, பின்னரேகரை யடைக்கச்செல்வேன்" என்றனர். அதுகேட்டு வந்தியம்மை மிகுந்த ஆனந்தமடைந்து "அப்பாஉன் விருப்பப்படியே யான்செய்கின்றேன" என்று உதிர்ந்தபிட்டை எம்பிரானுக்குக் கொடுக்க, அவர் திருவரையிற்கட்டிய கிழிந்தவஸ்திரத்திலேற்று அதனைஉண்டருளி "அம்மா இப்பிட்டு திருவாலவாயின்கண்ணே எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளுக்கே தகுந்தது" என்றுசொல்லிச் சிரமசைத்து, நகைத்து; ஆனந்தக்கூத்தாடி உண்டருளினர்.

பின்பு சிறிதுபொழுதில் எம்பெருமான எழுந்து வேலைசெய்பவர்போல, சசம்பிரமமாய் வேகவதிநதிக்கரைசென்று, பிரமவிஷ்ணுக்கள் வழிவழியடிமையாயிருக்கின்ற தம்மையும் வந்தியினடிமை எனக

கூறி,கரையடைப்பவராய் மண்ணைவெட்டுவார்; அதனைததமது திருச்சிரத்தின்மேல்வைப்பார்; "அம்மா! இதுமிகவும்பாரம்பாரம்"என்றுசொல்லுவார்;சிறிது மண்ணைக்கொட்டுவார், பின்பு அதனைக்கொடுபோய்க்கரையிலேசொரிவார்;சும்மாட்டைத்தட்டுவார்; வேலையினால் மிகவும்வருந்தியவர்போல நடைதளர்வார்; பிட்டினைஎடுத்து வாயிலிட்டு உண்பார்; ஆனந்தகரமான சங்கீதம்பாடுவார்; தம்மிடத்திருக்கும் பிட்டை, கூடநிற்குங் கூலியாட்களுக்கு நீட்டுவார்; அவர்கள் அதனைவாங்கவர, நகைசெய்து தமதுவாயிலிட்டு, சிரித்து நடிப்பார்; தொழில்செய்வார் யாரும்பராக்கடைய மரங்களை நதியிற்றள்ளி அவற்றிலேறி விளையாடுவார்; உன்மத்தர்போல ஓடுவார். இங்ஙனம் எம்பெருமான் சிறிதுபொழுது திருவிளையாடல்செய்து, வேலையினால் அறவருந்தி இளைத்தவர்போலத் திருமேனியில் வெயர்வரும்பப் பெருமூச்செறிந்து வாயொலியாற்காற்றழைத்து மிகும்பசியினர்போலத் தளர்ந்து, தமதடியாளாகிய வந்தியம்மையினது பிட்டின்மேற்கொண்ட பெரும்நசையினராய் மீண்டும் அவள்பாற்சென்றார். அதுகண்டுஅவள் "அப்பா! கரையெல்லா மடைத்தாயிற்றோ?" என்றுவினவின

ள். அதுகேட்டு எம்பெருமான் "அம்மாசிறிதுகுறைய, களையெல்லா மடைத்தாயிற்று; இப்பொழுதுப்பசிக்கனல் என்னைவருத்துகின்றது ஆதலில் அதனைச் சீக்கும்பொருட்டுப் பிட்டிடுவாய்" என்றனா. வந்தியும தனக்கு வரையறுத்த களையெல்லாம் சிறிதுபொழுதில் அடைக்கப்படுமென்று எண்ணி ஆனந்தத்துடன் பிட்டை எம்பெருமானது திருக்கரத்திற்கொடுத்தனள்.

அதனை எம்பெருமான் ஆவலுடன்வாங்கி மிக நகைசெய்து, கூத்தாடி, பாடி, நதிக்கரைக்கோடி, முன்போலவே திருவிளையாடல்செய்து, ஓரிடத்திற்போய், சும்மாட்டைத் தலையணையாகவைத்துத் துயின்றனர். அச்சமயத்திலே அங்குவந்த இராஜகாரியதரிசி எம்பெருமான் நித்திரைசெய்வதனைக்கண்டு "யாவன் இங்கேதுயில்கின்றவன்?" என்றுவினவ, அவ்விடத்தேநின்றசனங்கள் "இவன் வந்தியினது கூலியாள்" என்றார்கள். அக்கணத்தேஅவன் அவரையெழுப்பிக்கடிந்து "நீயார்"? உன்தேசம்யாது? உனக்குத்தந்தைதாயர்உள்ளரா? நீ இராஜகுமாரன்போலத் தோன்றுகின்றனை; உன்னையடிக்கக் கையெழுகின்றிலது; உ

னமாபுயாது? சொல்" என்றுவினவினன். சோமசு
ந்தரக்கடவுள் புன்னகைசெய்து "நான் மதுராபுரியி
லுடள்ளேன சாவபாரந்தரிப்பவன்; எனக்கு பிதாவு
மாதாவும பநதுக்களுமில்லை; உத்தரதேசததிலே
ஒரு தனபதி என்சகாவாயிருக்கின்றனன். யான்சாது
ககளை இரக்ஷிப்பவன், பரதேசி, சுரக்ஷகன்; என்னா
ல நினக்கு செய்யவேண்டியதென்ன; உனக்கேனும
உன இராஜனுக்கேனும் யானஞ்சேன். இங்கேவந்திய
ம்னமயினபொருட்டு மண்சுமக்கவந்தேன்" என்றுஎ
டபெருமான் கூறலும், இராஜகாரிய தரிசியாகிய மந்
திரி அவனைநோககி "நீ மிகவும் இறுமாப்புடையாய்,
குணமில்லாயேனும் குணமுடையார்போலத தோ
ன றுகின்றாய்; இராஜனுக்கஞ்சேனென்று சுவாதீன
முடையாரபோற் பேசுகின்றாய்; உன்னை அடிக்கவே
ணடும், யானிப்பொழுது தருமத்தின்பொருட் டிரங
கி அடியாது விடுகின்றேன். சீக்கிரத்திலேசென்று
உ நிகருவகுதத கரையை அடை. யான்கூறியவாறு
செயயாயேயாயின் நீ அடிக்கப்படுவை. அரிமர்த்த
னபாண்டிய மஹாராஜன் கோபமடைந்து உன்னைத்
தண்டிப்பான்; பராமுகமாயிரேல்" என்றுசொல்லி
ச்சென்றனன.

பின்னரும் எம்பெருமான் முன்போலவே திருவிளையாடல்செய்து துயின்றனர். அப்பொழுது இராஜனது ஆஞ்ஞாகாரிகள் நதிக்கரையடைபட்டமை காணும்பொருட்டு அங்குவந்து, பிரஜைகளுக்கு வருந்தபங்கெல்லாம் அடைபட்டிருந்ததையும் வந்திக்கு வகுத்தபாகம் அடைபடாதிருந்ததையுங் கண்டு அதிகோபமுற்று அவ்விடத்து நின்றாரிற் சிலரைநோக்கி "இதுயார்க்குரியது ?" என்றுவினவினர். அவர்கள் "இஃது வந்தியென்றும் பெரிய பிட்டுவாணிச்சிக்குரியது, அவளால் விடுக்கப்பட்ட கூலியாளபித்தர்போல நதிதீரத்தேதிரிந்து விளையாட்டயர்ந்தனனேயன்றிக்கரையடைத்திலன்" என்றனர். அது கேட்டலும் ஆஞ்ஞாகாரிகள் வாயுபோல் விரைந்து எம்பிரான் துயிலுமிடஞ்சென்று, அவரைவளைந்துபற்றியிழுத்து "அடா! துன்மதிநிறைந்த கூலியாளா! நீ பிட்டுவாணிச்சியின் பிட்டினையுண்டு நடிக்கின்றுயேயன்றி அவட்குரிய கரையினை அடைக்கின்றிலை. இராஜன் இதனைக்கேள்விப்படின் உன்னையும் மற்றியாவரையுந் தண்டிப்பனே. துர்ப்புத்தியுடையானே சீக்கிரம் வந்திக்குவகுத்த நீர்க்கரையைஅடை" எனறுரைத்தனர். அப்பொழுது சோமசுந்தரக்கடவுள்

அவர்கள் யாவரையும் திரணமாகமதித்து, புன்ன கைசெய்து சொல்வாராயினர். "ஆஞ்ஞாகாரிகளே! வீணேபிதற்றன்மின். யான் சுவாதீனமுடையேன்; ஆதலில் எவர்க்கேனும் அஞ்சேன்; பூமிக்கெல்லாம் யானேஇராஜன்; இராஜன் அரிமர்த்தனபாண்டியனெ ன்று எண்ணன்மின்; நீவிர்போய் அரிமர்த்தனனுக்கு என்பிரபாவங்களை யெல்லாஞ் சொல்லுங்கள்" என றுஎம்பெருமான் கூறியருளலும், அதுகேட்ட ஆஞ் ஞாகாரிகள் அரசன் சம்முகஞ்சென்று அவனுக்கு அதனைமொழிந்தனர்.

அவ்வார்த்தை கேட்டலும் அரிமர்த்தனபாண் டியமஹாராஜன் ஆலாகலவிஷம்போலச் சீறியுருத் து, கிருதாகிருத்திய பரியாலோசனையின்றி, அக்க ணத்திலே தனது ஆஸ்தானமண்டபத்தி னின்றும் வெளியேசென்று, ஏவலாளர்களும் அங்கரக்ஷகர்க ளும பாங்கேசூழ்ந்துவர, பொற்பிரம்பு தாங்கிய கர த்தோடு, வேகவதி நதிதீரஞ்சென்றனன். அங்கேஉ தாசீனத்தோடு எம்பிரான் துயில்கின்றமையைப்பா ரத்தலும் மஹாராஜனது கோபாக்கினி முன்னினும் நூறுயடங்கு வர்த்தித்தது. அவனடிக்கும் பொருட் டுஉத்தேசித் திருந்ததைக்கண்ட கூலியாட்கள் எம

பிரான் சமீபஞ்சென்று "அடா! கூலியாளே ! இராஜன் ஈண்டுவருகின்றான், நின்உதாசீனத்தைக் காண்பனேல் உன்னைத் தனது கரத்திருக்கும் பொற்பிரம்பினால் அடிப்பான். இதில்யாதேனுஞ் சந்தேகமில்லை" என்றனர். அவர்கள் அச்சததுடனுரைத்த வார்த்தையைக்கேட்டும எம்பெருமான் சிறிதும் அஞ்சாதுநகைசெய்து, மண்ணைச்சிரசிலேதாங்கி, மண்வெட்டியைத தோளின்மேலிட்டு, மெல்லநடந்து, மண்ணைக் கரையிற்கொட்டாது, நதிப்பிரவாகத்தைப்பார்த்துக்கொண்டு நின்றனர். அதுகண்டு விரைந்து பாண்டியமஹாராஜன் "இவனை அடித்தாலேயன்றி க்கரையடைபடாது" என்றெண்ணித்தனது கோமளகரத்திலிருந்த சுவர்ணவேத்திரத்தால்எம்பெருமானது முதுகிலே அடித்தனன்.

அச்சமயத்தில் சோமசுந்தரக்கடவுள் தமது திருச்சிரத்திலிருந்த மண்ணைக்கொட்டி "அரசனே! ஏன் என்னை அடிக்கின்றாய்?" என்றுரைத்து மறைந்தனர். அகிலபிராணிகளிடத்தும் ஏனைய பிரபஞ்சப்பொருட்களிடத்தும் வியாபித்திராநின்ற சோமசுந்தரக்கடவுளது திருமேனியிற் பட்டஅடி பாண்டியனது முதுகிற்பட்டது; அவன் பாரியரதுமுது

கினிற்பட்டது; மந்திரிகளது முதுகிற்பட்டது; அ
ரசனது இளங்குமாரரதுமுதுகிற்பட்டது; வீரர்கள
துமுதுகிற்பட்டது; யானை பரிமுதலியவற்றின் முது
கிற்பட்டது; சந்திரன், சூரியன், இராகு, கேது, நக்ஷ
த்திரங்கள், பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம
ஆதியவற்றிலும் பட்டது; தேவர், அசுரர், சித்த
ர், வித்தியாதரர், தைத்தியர், கருடர், காந்தருவர்,
கின்னரர், கிம்புருஷர், நிருதர், யக்ஷர், பூதர், பைசா
சர், அந்தரர், முனிவரர், உரகர், வியோமசரர், போ
கபூமிவாசிகள் முதலாயோர் முதுகிலும் பட்டது;
பக்ஷி விலங்கு மரம் கல்லுமுதலியவற்றிலும் ஏனைய
வற்றிலும்பட்டது. அண்டசராசரங்கள் யாவற்றிலு
ம், சோமசுந்தரக்கடவுளது முதுகிலேபட்ட அடிப
டுதலும், க்ஷீரசாகரத்திலே அனந்தன்மேல் யோகநி
த்திரைசெய்து கொண்டிருந்த விஷ்ணு துண்ணென
விழித்தனர்; பதுமாசனத்தில் வீற்றிருந்து சிருஷ்டி
செய்து கொண்டிருந்த பிரமா "இதுயாது?" என்று
வியந்தனன். தேவேந்திரன் அஞ்சினன; இவ்வாறா
குங்காலையிலே அரசனது ஏவலாளர்கள் வந்தி யிட
ஞ்சென்று அவளைப்பற்றி இழுத்து வருத்தஞ்செய்த
னர். அவள் அது சகிக்கலாற்றாது அழுத பிரலாப

சரங்கேட்ட சோமசுந்தரக்கடவுள், கிருபாசத்தியா கிய உமாதேவியாரோடு இடபவாகனமீதிவர்ந்தரு ளி, கணங்கள்சூழவந்து, நந்திகணாதிபதிகளைக்கொடு வந்தியைத்தேவவிமானமீதேற்றுவித்தனர். அப்பொ ழுது வார்த்திகம் நீங்கப்பெற்று, வந்தியம்மை கோம ளஸ்திரியாகித் தேவவிமானமீதிவர்ந்து, திவ்வியரூப முடைய தோழியரோடு கைலாசஞ்சென்றனள். அ வவற்புதத்தைக்கண்ட ஜனங்கள்யாவரும், ஆனந்த மு மதிசயமுமடைந்து அவளது புண்ணியத்தையு ம, மஹாகதியையும் வியந்து கூறிநின்றனர்.

பாண்டியமஹாராஜன்து தேகத்திலே அடிப ட்டதனையும், அவனது மந்திரிகள் மேலும் ஏனை யோர்மேலும் அடிபட்டதனையும் அவனறிந்து அ திசயமடைந்து "இஃதென்ன அற்புதம் !! என்ன அ ற்புதம் !! " என்று பகர்ந்து நின்றவளவிலே சோமசு ந்தரக்கடவுள் யாவருங் காண ஆகாசவாணியாற் கூ றுவாராயினர். "பாண்டியராஜனே ! நின்னிடத்து நின்று திருவாதபுரேசன் கொடுபோந்த திரவியங்க ளெல்லாம் புண்ணியமார்க்கமாய்ச் சம்பாதிக்கப்ப ட்டமையினாலே அவை எமக்கும் எம்மடியார்க்குமு விநியோகிக்கப்பட்டன; அப்பொருட்களாலே நீ அ

ணந்தம் புண்ணிய மடைந்தாய். திருவாதபுரேசனை நீ தண்டித்தமையாலே, யாம் வனசஞ்சாரஞ்செய்யும் நரிகளைப்பரிகளாக்கி நினக்களித்தேம். பின்னரும் நீ அவனைத் தண்டிப்பித்தமையால் யாமே, அதனை நீக்கும்பொருட்டு, வேகவதிநதியை ஈண்டனுப்பினேம். பின்னர் தாய்போல எம்மடியார்மேற் பரிவுகூரும் வந்தியம்மையை யிரக்ஷிக்கும் பொருட்டாய் மண் சுமந்தேம்யாம். இத்தனையெல்லாம் செய்தமை இவ்வன்பன் பொருட்டேயாம். இவனது பிரபாவத்தினை நீ சிறிதும்உணர்ந்திலை. இவனாலே நீ இம்மை மறுமையிரண்டிலும் புண்ணியப் பிராப்தியெய்தினை. இவனது இச்சைப் பிரகாரமே நீநடந்து இராச்சியபரிபாலனம் செய்வையேல் தீர்க்காயுசும் சகலசம்பத்தும் அடைகுவாய்" என்று எம்பெருமான் கூறியவார்த்தைகேட்டலும் அரிமர்த்தனபாண்டியமஹாராஜன் அச்சமும் உவகையுமடைந்து அதிசயவெள்ளத்தாழ்ந்து, மாணிக்கவாசகப்பெருமான் இருந்தருளும் இடந்தேடிச் சென்றனன்.

சகலலோக நியந்தாவாகிய சோமசுந்தரக்கடவுளது திருமேனியிற்பட்ட அடி தமது திருமேனியிலும் படுதலும், "அரிபிரமேந்திராதியர் சேவிக்கு

ம் திருப்பாதார விந்தங்களுடைய சோமசுந்தரக்கட வுள் சிறியேன் பொருட்டாய்க் கூலியாளாய் எழுந் தருளினரோ" என்று வியசனப்பட்டுச் சோக பாஷ்பஞ்சிந்தும் கண்களோடு வீற்றிருந்த மாணிக் கவாசகசுவாமிகளது திருச்சம்முகத்திலே பாண்டி யமஹாராஜன் வீழ்ந்து நமஸ்காரஞ்செய்து இரு கைக் கமலங்களையுஞ் சிரமீதுகூடி விநயத்துடனி ன்று "சுவாமீ! திருவாதவூரடிகளே! சுவர்க்கலோக த்தினின்று, பூமியின் கண்ணே ஆ[illegible]த்தியகுலத்திற் பிறந்தருளி, புழுத்தநாயினுங் கடை[illegible]ஞகிய எனக் கு மந்திரியாயிருந்து, வேதச்சிரங்களா[illegible]கிய உபநிஷத ங்களுக்கும் அதீதமான திருவடியுடையாராகிய சிவ பெருமான வேதவாசியினிவர்ந்து வரவியற்றி, அடி யேனுக்குத திருவுருவினைக்காட்டி, எனது மலபாச த்தினை யகற்றும் வண்ணம் தேவரீர் திருவுளம்பற்றி னீர். பிரமவிஷ்ணுக்கள் தொழுதற்கும் அரியாராகி ய சிவபிரான் அடியேனது ஜனனதுக்க மொழியும் வண்ணம் தமது திருமேனியைக்காட்டி யருளினரெ ன்பதைச் சிறிதும் ஓராது, *அதிஜடனுகிய நான், அ வரது மாயமாகிய ஜாலத்திலகப்பட்டுச் சுவாதந்திரி

* அதிஜடன்-முழுமூடன்.

யமிழந்து, அழுக்காடையை எம்பிரானுக்கு ஈந்தேனே. இஃதென்ன அபசாரம்! ! குதிரையின்மேல் வந்தருளியவரோ தேவாதிதேவராகிய சிவபிரானென்றுணராது, கொடிய நரகப்படுகுழியில் வீழ்த்தும அற்பமான திரவியத்திலே ஆசக்தியுற்றுத் தேவரீருக்கு உரைக்கடங்காத்துயரங்கள் யாவையும் செய்விததேன். அடியேன் அஞ்ஞானங்காரணமாக இழைதத அபராதங்களையெல்லாம் (சுவாமீ!) பொறுத்தருள் புரிக; பரமசிவன் வேதவாசியினிவர்ந்து வந்து, பின்பு கூலியாள் வடிவமெடுத்து மண்சுமந்ததே பாண்டியதேசத்திற்கு மிகுந்தகீர்த்தி. இஃதுபோதும். தேவரீர் எனது இராச்சியங்களை யெல்லாம் ஏற்றுககொண்டிருப்பதே அடியேனுக்குத் தேவரீரிப்பொழுது அருளவேண்டியவரம்" என்று பிரார்த்தித்தனன்.

அதுபொழுது வியசனங்களை விளைக்கும் இராச்சியாதி போகங்களிலே நிராசை யுற்றவராகிய திருவாதவூரடிகள் அரசனைநோக்கி "மஹாராஜனே! நான் திருப்பெருந்துறை செல்லும் வண்ணம் செயவதே எனக்கு நீர் இராச்சியந் தருவதிலும் மிகைபுடைத்து." என்றனர். அதுகேட்டு மஹாராஜன யாதானும் ஆக்ஷேபஞ்செய்ய அஞ்சி "சுவாமீ! தேவரீர

திருவுளப்பிரகாரமே செய்தருளுக" என்றுசொல்லி அவனாமும் முறைவணங்கி, விடைபெற்றுத் தன சேனையுடனே மாளிகைசென்றனன். அவ்வமையத்திலே மாணிக்கவாசகசுவாமிகள் இராஜபரிஜனாககுரிய வேஷத்தைஇகந்து, சிவனடியார்க்குரிய வேஷத்தைஉகந்து, திருவாலவாயினகண்ணே எழுந்தருளியிருக்கும் பேரானந்தக்கடலாகிய சோமசுந்தரக்கடவுளைச சேவித்து, திருப்பெருந்துறையிலே குருசாரவிந்தங்களைத் தரிசிக்கவேண்டுமென்னும் காதல் மீதூர வாயுவேகம்போலச்சென்று, கண்ணிறகெட்டாத கானகங்களையும் பதிகளையும் கடந்து, திருப்பெருந்துறையிற சென்று, குருந்தவிருக்ஷத்தடியில் எழுந்தருளியிருக்கும் ஞானதேசிக சுவாமிகளது திருச்சரணவாரிசங்களமுன் வீழ்ந்து,

"தீண்டுதறகரியமாபிற்சேயிழைதனக்கினும்
ஈண்டொருமாற்றினும்எய்தியதமும்போற்றி
வேண்டியவடிவமாகிவெம்பரிமேற்கொண்டெனை
ஆண்டருள்செய்யவந்தவண்ணலேபோற்றிபோற்றி.

அண்டருக்கரியாய்போற்றியடியவர்க்கெளியாய
போற்றி, வண்டமிழ்ப்பாண்டிநாடுவாழமண்சுமந்தா

ய்போற்றி, கண்டனக்கினியமேனிகாட்டியென்சென்னிமீது,முண்டகத்திருத்தாள்வைத்தமுத்தனேபோற்றிபோற்றி."

என்று துதிக்கும் மாணிக்கவாசகப் பெருமானது திருச்சென்னியின்மீது குருசுவாமிகள் தமது அருமைத்திருக்கரத்தை வைத்தருளி, "அப்பனே! எழு" என்றலும், அவர் எழுந்துநிற்ப, அவரது நெற்றியிலே விபூதிதரித்து ஞானவிலோசனத்தினாலே பார்த்தருளியபின்னர், அடியார், பக்தசங்கமத்தியிலே வீற்றிருந்தனர்.

இங்ஙனமாகுங் காலையிலே ஆதிமத்தியாந்தரகிதராகிய ஞானாசாரியர் தமக்குநாற்புடையினும் வீற்றிருந்த அடியார்கள் யாரையும் பார்த்தருளி "அன்பரே! யாமெண்ணிவந்த கருமங்கள்யாவும் சம்பூரணமாயின; நம்வடிவினைக் காணும்வண்ணம் கைலாசவாசிகள் பேரவாவுற்றனர், ஆதலின் அவர்க்கு மனப்பூர்த்திசெய்யுமாறு யாம்அங்கே விரைவிற் செல்லல்வேண்டும். நீவிராயாவரும்ஈண்டு இனிதுவாழ்ந்திருங்கள் யாம்முன்னர்ச் செல்வேம்" என்றுரைத்தனர். அவ்வார்த்தைகேட்டலும் அமுதூட்டிய நாராசத்தைக் காதினிற்செறித்தா லென்னவும இடியேறு

ண்ட அரவம் வருந்திருலென்னவும் அடியார்கள்யா வரும் மயங்கிவீழ்ந்தனர்; சடாமுடிகள் தரையிற்ப டப்புரண்டனர்; பலவாறு தோத்திரித்தனர்; எம் பிரானே! எங்கள்பிராணனே! சிந்தையே! சிந்தை தெவிட்டாத தெள்ளமுதே! தந்தையே! அடியேங்க ண்மேற் கருணைகடாக்ஷஞ்செய்து மாயாவிருத்திவலி யகற்றியருளிய பெருமானே! அடியேங்களைக் கை விடுகின்றீரா! அடியேம் தேவரீரையோர் கணப்பொ ழுதேனும் பிரிந்திருக்கவல்லேமா? பிராணன்பிரிந்து ழி, அதனாற்றலாலே சஞ்சரித்ததேகம், தானே சஞ்ச ரிக்குமா? பரமதாயநிதி! யாம் யாதுபுரிவேம்? யாது கதி?" என்றின்னவாறு பிரலாபித்து, ஞானசாரிய ரது பொன்னங்கழலிணையைப்பூண்டு வணங்கிவீழ்ந் து துக்கித்தனர்.

அடியார் புலம்புகின்றமையைக்கண்ட ஞான சாரியர், கன்றழக்கண்ட பசுப்போலிரங்கி அவர்களை ப்பார்த்துத் திருக்கரமமைத்து "அன்பர்களே! வ ருந்தன்மின் வருந்தன்மின் வருந்தன்மின்; யாம்செல் லுங்கால் நீவிர் இக்குருந்தவிருக்ஷநீழலில் ஓர் திவ் வியபீடமமைத்து,அதன்மீதுநமது பாதயுகளம்போ ன்ற ஓர்பிரதிமையியற்றிவைத்து, அதனை நாமென

வெண்ணி; அபிஷேகபூசனாதிகளை ஆகமவிதிப்படி யியற்றி, சிந்தித்து வந்தித்து, வியசனங்களெல்லாம் ஒழிந்து இன்பத்துடன் சிலகாலம் இங்கேவாழ்ந்திருங்கள். ஓர்தினத்தில், ஈண்டுளதாய தடாகத்திலே ஓர் அக்கினிச்சுவாலை தோன்றும்; அப்பொழுதுநீவிர்எல்லீரும் இத்தடாகத்தில் வீழுவீரேல் நம்மிடத்துவருவீர்கள்; அதுகாறும் நீவிர ஸ்திரசித்தத்துடனே யாதானுங்கவலையின்றி வதியுங்கள்" என்றுசொல்லி, அவர்கள்யாரும் கூடிப் பின்னேபோக மெல்ல மெல்லநடந்து, சிறிதுதூரஞ்சென்றபின்னர், அவர்கள்யாரையும்நோக்கி "அன்பர்களே இனிநில்லுங்கள்" என்று உரைத்தருளினர். அன்னதோர்காலையில் அடியார்கள்யாவரும் செங்கைகூப்பிவணங்கி, மனங் கம்பித்து, வாய்விட்டழுது, ஐம்புலனுஞ்சோர்ந்து, நெஞ்சந்தடுமாறி, தாய்நீங்கப்பெறும்சிறுவர்கள்போல, விம்மிவிம்மியிரங்கி, வேதனையடைந்து ஆசாரிய சுவாமிகளைச் சோகபாஷ்பஞ்சொரியுங் கண்களால் நோக்கி "எம்பரமபிதாவே! அடியேங்கள் இனியெப்போது தேவரீரைக்காண்பேம்? எப்போது தேவரீரது திருமுகாரவிந்தத்தைத் தரிசித்து எந்துயரொழிவேம்? எப்போது தேவரீரது திருவாயினின்று

பிறக்கும் அதிபாவனமான ஆகமார்த்தங்களைச் சிரவ ணஞ்செய்வேம்? எப்போது தேவரீரது திருச்சரணா ரவிந்தங்களை எமது சென்னிகளிற்சூடி வினைகள்யா வும் நீங்குவேம்?" எனப்பலவாறு பிரலாபித்து அ வரது திருச்சரணவாரிசங்களில் வீழ்ந்தழுதுபுரண் டனர்.

அப்போது அவர்கள்யாரையும் பின்னருந்தேற் றி ஞானசாரியர் செல்லலும் மாணிக்கவாசகசுவா மிகள் மீட்டுஞ்சிறிதுதூரம் ஞானசாரியர்பின்னே சென்றனர். அடியார்அழுது பின்றொடர்வதைக் காண்டலும்; இளங்கன்றினைக்கண்ட பசுப்போலிர ங்கி ஞானசாரியர் ஓர் கொன்றைமரநீழலில் வீற்றி ருந்தனர். அவ்வேலையில் திருவாதவூரடிகள் ஞான சாரிய சுவாமிகளது திருப்பாதயுகளத்தைத் தமது கண்ணீரால் அபிஷேகித்து, யாதும்பேசவொண் ணாது துக்கசாரத்திலமிழ்ந்திச் சித்திரப்பிரதிமை போல அசைவறநின்றனர். அப்பொழுது ஞானதே சிகப்பெருமான் திருவாதவூரடிகளைப்பரிந்து அருட் கண்களாற்பார்த்து "அப்பனே! மாணிக்கவாசகா! நீகலங்கிநின்று கவலுறுங்காரணமென்னை? யாமெ க்காலத்தும் நின்னைச்சம்ரக்ஷணை செய்யும்பொருட்

டே யிருக்கின்றேம்; நின்னகத்தே குடிபுகுந்தசோக ஙகளையெல்லாம் நீக்கு; நம்முருவினை யெண்ணியெ ண்ணி ஆனந்தமனுபவி. யாம்சர்வவியாபக முடை யேமாயினும், திவ்வியக்ஷேத்திரமாகிய இத்திருப்பெ ருந்துறையின்கண் உளதாய இக்குருந்தவிருக்ஷத்தி னகீழலிலே, மெய்யடியார்க்குற்ற வினைகளனைத்தை யும நீக்கியாளும் நிமித்தமாய் அதிசந்துஷ்டி யுடன வசிப்பேம். சுழுமுனைவழியிலே சப்திக்கின்ற நாதத் திற்குப் பிரதிநாத சின்னமான சங்கவாத்தியமேயன் றி வேறெவ்வகைப்படும் வாதத்தியவர்க்கங்களும்இதத லத்தின்கண்ணே ஒலிக்கத்தகா.யாதுகாரணத்தினுற் சஙகமன்றி ஏனையநாதக்கருவிகள் ஈண்டு ஆகாவெ னவினுவுவையேல்சினது ஆசங்கை ஒழிப்பேம்கேள் இந்தஸ்தானம் நிச்சப்தபூதமானது; அன்றியும் நமது கிருபாசக்தியாகிய உமாதேவியார்காண யாம்பஞ்ச கிருத்தியகாரண நடனம்புரிகின்றேம். இவைகளேச ஙகநாத அங்கீகாரத்திற்குக் காரணம்.இவற்றையெல் லாம்நீ நன்குணர்ந்து, துக்கபரித்தியாகஞ் செய்து நமது பக்தசங்கத்திற்சேர்ந்து, குருந்தவிருக்ஷ நீழலி ல் ஓராசனத்தில் நமது யாதயுகளபிரதிமைசெய்து அதனைப்பூசைசெய்துகொண்டு பேரானந்தமடைந்

துஙண்டுவதி. யாம்முன்கூறியவாறே தடாகத்தில்அ க்கினிச்சுவாலை தோன்றுங்கால் நம்அடியார்களோடு நீயும்வீழாது இவ்விடம்நின்று உத்தரகோசமங்கை யென்னும் பெயரியநமஸ்து ஸ்தலத்திற்சென்று அவ் விடத்து, அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிரா ப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனப்ப டும் அஷ்டமாசித்திகளையும், பலவகையான சிவபூதி களையும் அடைந்து, நமதுஇலிங்கஸ்தாபனம்பொருந திய க்ஷேத்திரங்கடோறுஞ் சென்றுசென்று நம்மை சசேவி; அங்கங்கெல்லாம் நமது இக்குருவடிவமே காட்டுவேம். பின்னர்த் திருக்கழுக்குன்றஞ் சென்று அவ்விடத்தில் சிலகாலம்வதி. பின்பு சிதம்பரக்ஷேத் திரத்திற்குப் போய்அங்கே புறச்சமயங்களை அனுச ரிக்கும் யாவரும் சத்தியமார்க்கமாகிய சைவத்தின்ம கிமையை உணர்ந்து, நம்மையே அநாதிமலமுத்தசித் தருவாகிய முழுமுதற் கடவுளென்று கண்டுணர்ந் து பாசபந்தம்வீட்டிக் கைவல்யசுகம் அனுபவிக்கும் வண்ணம், பௌத்தர்களை மஹாவாதத்திலே ஜயங் கொண்டு, பின்னரோ நம் உத்தமபதமான சாயுச்சிய பதமடைகுவை" எனத்திருவாய்மலர்ந்தருளினர்.

குதிரையிட்டசருக்க முற்றிற்று.

சிவமயம்.

## திருவம்பலச் சருக்கம்.

இவ்வண்ணமே ஞானாசாரியசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளலும், அவரது திருச்சரணபுண்டரீகங்களின் முன்னர் மாணிக்கவாசகச்சுவாமிகள் வீழ்ந்து வணங்கி எழுந்துநின்று, விநயத்துடன் அவரைப்பார்த்து "சுவாமீ! என்பரம பிதாவே! அடியேன் ஞானோபதேசம்பெற்ற க்ஷேத்திரமாகிய திருப்பெருந்துறையின் கண்ணே முத்தியடையாது, சிதம்பரக்ஷேத்திரத்தின்கண்ணே முத்தியடையும் வண்ணம் தேவரீர் ஆஞ்ஞாபித்தருளியகாரணமென்னையோ? இது அடியேன் உணரும்பொருட்டுப் பெருங்காதல்கொண்டேன், ஆதலால் எம்பெருமானே அடியேனுக்கு அக்காரணத்தை மொழிந்தருளுக" எனப்பிரார்த்தித்தனர். அதுகேட்டு ஞானாசாரியசுவாமிகள், சரற்கால சந்திரன்போன்ற மனோகரமான மந்தஹாசம் பிரகாசிக்கும் திருமுகத்திலே மகிழ்வுகாட்டி, அன்பனைநோக்கி "வாராய் எம்மகனே"! குளவியினாலெடுக்கப்படும் புழு தானெடுக்கப்பட்ட இடத்திலன்றி, வைக்கப்பட்ட இடத்தி லன்றுவேட்டுவன் கு

ளவியின் வடிவினை எய்துகின்றது. அப்பனே! இத்தலத்திலே உனக்குயாம் உபதேசஞ்செய்தோம், ஆதலின் இங்கிருந்து நீ முத்திஎய்தல் ஆகாது. சிதம்பரத்திலேதானே நினக்குமுத்தியுண்டாகும். அந்தக்ஷேத்திரமே சிவானுபூதி வர்த்தனத்திற்கு மிகவும் வாய்ந்தது. சரீரத்தின்கண்ணுளவாகிய மூலாதாரம், சுவாதிஷ்டானம, மணிபூரகம், அநாகதம, விசுத்தி, ஆஞ்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்களுள் முன்னையதின் எழுந்த சுழுமுனைநாடியில் தேஜோமயமாய், அத்தேஜில் பஞ்சாக்ஷராகாரம் ஏகாக்ஷராகாரமாய, பிரணவநாதம் உண்டாகி, அந்நாதம் அடங்கிய இடமேநமக்கு நடனசாலையாகிய சிதம்பரம். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், எனப்படும் பஞ்சபூதங்களும் இடை பிங்கலை சுழுமுனை ஆகிய மூன்றுநாடிகளும் சோமசூரியாக்கினியாகிய மண்டலத்திரயமும அண்டத்தும் பிண்டத்தும் பிரமாணபேதமேயன்றி பிறிதின்றி ஒப்பத்தங்குகின்ற காரணத்தால் அண்டாகாரமும் பிண்டாகாரமாகும். பிரம விஷ்ணு உருத்திர மஹேசுர சதாசிவர்களாகிய பஞ்சகர்த்தாக்கள் அதிஷ்டிக்கும் அவஸ்தாபேதங்களும் இவ்வீரிடத்தும் ஒப்பக்காணலாம். ஆதலினாலே மூலசூக்ஷுமத்தைப்

பரியாலோசனைசெய்யுங்கால் அண்டாகாரமும் பிண்டாகாரமும் சிவலிங்காகாரமா யிருக்கும் நாதாந்த வெளியின்மேல் தேஜோமயமான சபை ஒன்று உளது; அச்சபையின் மத்தியில் விசித்திரமானதும், நவரத்தினங்கள் இழைத்துச் சுவர்ணத்தா லியன்றதும், பிரபாமண்டல மண்டிதமுமான பத்திராசனத்தில், அபயங்கொடுக்கும் தக்ஷிணபாதத்தினின்று; சர்வலோகத்திற்கும் அனுக்கிரககரமான வாமபாதத்தை சிறிது குஞ்சிதமாகவும் உன்னதமாகவும்செய்து, அபயகரத்திலே சூலாயுதந்தாங்கி வரதகரத்தை நாகபாசத்தாலலங்கரித்து, மற்றைய எட்டுக்கரங்களில் தமரம், சரம், கட்கம், பரசு, அக்கினி, கார்முகம், கேடம், தண்டம் ஆகிய இவற்றைத்தரித்து, சிவந்த சடாகலாபங்களும் பஸ்மமும், புஷ்பமாலிகையும், பன்னகோத்தராசங்கமும், பொலிய, திரிநேத்திரங்களும் திருநுதலிலணிந்த திரிபுண்டரங்களும் விளங்க, நமது கிருபாசக்தியாகிய உமாதேவி பக்கத்திலே ஒதுங்கிநிற்ப, அவள்மேற்கொண்ட பார்வையும் புன்முறுவலும் தோன்ற, நமது சடையில் விளங்கும் கங்காநதியின் தொனியும், புஷ்பமாலிகைகளில் வீழ்கின்ற பிரமரங்களினொலியும், மங்கலவாத்தியங்களி

ன் தொனியும் மந்திரவேதங்களின் ஒலியும் தாண்ட வச்சிலம்பின் ஒலியும் எங்கும்பரக்க, முனீந்திரர்களு ம் ஏனையமஹான்களும், பரமானந்தசாகரத்திற் படி ந்து உருகிப் பரவசப்பட, உடலங்கம்பிக்க யாம் நட னம செய்வேம். அந்நடனமே, சிருஷ்டி ஸ்திதி சங் காரம் திரோபவம் அனுக்கிரகம் ஆகிய பஞ்சகிருத்தி யங்களுக்கும் காரணம். மாயாவிருத்தி வலியகற் றி ஆன்மாக்கட்கு மோக்ஷசுகமளிக்கும் வடிவமே இக்குருவடிவம்; ஜகத்தின்கண்ணே வசிப்போர்வ ந்து வணங்குங்கால் வழுவாது அனுக்கிரகஞ்செய்யு ம் தலமும் அச்சிதம்பரமே. பிரமா விஷ்ணு முதலியதேவர்களும் பதஞ்சலி வியாக்கிரபாதரும், யாம்திரிபுரவிஜயஞ்செய்தகாலத்து அழிவடையா திருந்த நமது பக்தர்கள் மூவரும், தில்லைமூவாயிரவ ரும், ஏனையமஹான்களும் தொழப்பெறுவது அச் சிதம்பரம். மகனேமாணிக்கவாசகா இவைகள் யாவ ற்றையும் நீ யுணர்ந்துகொள் " என்று ஆதரத்தோ டுமொழிந்து அவரது நெற்றியிலே விபூதிதமது தி ருக்கரத்தாற்றரித்து, "குழந்தாய் கவலையாது மின்றி இவ்விடத்துயில்" என்றுசொல்லி ஞானாசாரியர்போ தலும், மாணிக்கவாசகசுவாமிகள் மனம் பதைத்து

முகமெல்லாங்கண்ணீர் முத்தெனத்துளிப்பவாய்வி ட்டழுது அவர்பின்னே, தாய்பின்னோடும் மகவுபோ ல் தாவியோடினர். அதுகண்டு ஞானாசாரியசுவாமி கள் திருவாதவூரடிகளை உபயதிருக்கர சரோருகங்க ளாலும் ஆலிங்கனஞ்செய்து அவரைமோந்து "அப் பாகுழந்தாய்! அஞ்சேல்" என்று பின்னுந்தேற்றி, அவர் முன்னே நடந்தனர். நடந்து மாணிக்கவாசக சுவாமிகள் காணவே விரைவில் ஞானாசாரியர் மறை ந்தனர். அதுகண்டுவிரைந்து திருவாதவூரடிகள் மிக வும் வருந்திக்கதறி அழுது கைகூப்பிக்கும் பிட்டுபிரி வாற்றாதவராய் அடியார் குழாத்திற் சேர்ந்து சிறிது விசனம்நீங்கி அவ்வடியார்களும் தாமுமாய் ஆசாரிய சுவாமிகள் கட்டளையிட்டருளிய பிரகாரமே குருந் தவிருக்ஷத்தின்கீழே தேவதாயோக்கியமான ஆசன மொன்றமைத்து, அதின்மேல்குருசுவாமிகளது பா தப்பிரதிமை யியற்றிவைத்து அதனைக்கிரமமாய்ப் பூ சித்திருந்தனர். பின் சிலகாலஞ்சென்றுழி மாணிகக வாசகசுவாமிகள், பரமசிவன் அன்பிலரோனும் தம மைப்பாடினோர்க்குப் பரிந்தருளுவரெனமஹான்கள் கூறும் வாய்மையைக்கடைப்பிடித்து, சிவானுக்கிரக ம் எய்தும் பொருட்டாய்,

நமச்சிவாயவாழ்கநாதன்றாள்வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சினீங்காதான்றாள்வாழ்க

*　　*　　*　　*　　*　　*

சொல்லியபாட்டின்பொருளுணர்ந்துசொல்லுவார்
செல்வாசிவபுரத்தினுள்ளார்சிவனடிக்கீழ்ப்
பல்லோருமேத்தப்பணிந்து.

என்பது முதலான ஸ்தோத்திரங்களைப் பாடி அடியார்களோடு வதியுங்காலத்தில், முன்னே ஞானாசாரியசுவாமிகள் உரைத்தருளிய வண்ணமே தடாகத்தில் அக்கினிச் சுவாலை எழ, அதனைக்கண்டு மாணிக்கவாசகசுவாமிகளை யொழித்தொழிந்த அடியார்யாரும் அதனுள்ளே வீழ்ந்தனர். வீழ்ந்தபொழுதில் சிவபெருமான் உமாதேவிசகிதராய் இடபவாகன மேலிவர்ந்து அத்தடாகசமீபத்தேசிற்ப, அவ்வடியார்யாவரும் கணநாதர் வடிவமெய்தி, பரம சிவனது திருமுன்னிலையில் நின்றனர். அவர்களெல்லாரையும் பரமசிவன்பார்த்து "அன்பரோ! எம்மை மாத்திரைப்பொழுதேனும் அகலா திருக்கும் நும்மை இங்கிருக்கச்செய்து யாம்தனியே கைலாசஞ்சென்றமையும், நீவிர் எல்லீரும் இவ்வாவியி லெழு மக்கினியிற் புகுமாறு செய்தமையும் யாதுகாரணம்பற்

றி எனவினவுவீரேல், உரைப்பேங்கேண்மின். எமது வாற்சல்ய குழந்தையாகிய மாணிக்கவாசகனே, பௌத்தரைவாதிலே வென்று சற்சமயமாகிய சைவத்தினை ஸ்தாபிக்கும்பொருட்டு பூமியில் இருக்கும் வண்ணம் செய்தேம்; அவன் எம்பிரிவாற்ருது மிகவருந்துவானென்பதனை முன்னரே உணர்ந்து உங்களைச் சிலகாலம் அவனுடன் இருக்குமாறு செய்தேம். மலபந்தம் நீங்கப்பெற்றவர்களும் பூமியிலே மானுஷிய தேகம்பெற்றுச் சிலகாலத்தேனும் வசிப்பரேல் அவரை மலவாசனே பற்றுமென்பதனுல் இவ்வாவியிலே ஞானக்கினிச் சுவாலையைத்தோற்றுவித்து முன்னுமக்கிருந்த மாயாதேகங்களைத் தகிப்பித்து இத்தேகத்தைத்தந்தேம் ” என்றுரைத்தருளி அவர்களோடும் மறைந்தருளினர். இவ்விருத்தாந்தங்கள் யாவும், ஓர் கொன்றைமரநீழலிலே வீற்றிருந்து சிவயோகஞ்செய்து கொண்டிருந்த திருவாதவூரடிகளுக்கு நன்கு தோன்றின. தோன்றலும் அடியார் விரைவில் எழுந்தனர், சிரசிலே திருக்கரங்களைக் கூப்பினர்; கண்களினின்றும் ஆனந்தபாஷ்பஞ்சொரிய அத்தடாகசமீபஞ்சென்று அங்கேவீழ்ந்து எம்பெருமான் இடபவாகன மீதிவர்ந்தருளி வந்தருளிய தலமோ! என்று

அழுது "என்பிதாவே! அடியார்கள்உமது திருப்பத மடைய நாயேனை ஈண்டு இருக்குமாறு செய்தீர். அடியேன் பாவி!பாவி! என்று புலம்பினர். பின்னர்அவ் விடம்நின்று அகன்று குருந்தவிருக்ஷத்தடியிற்போய்,அங்கேயுள்ளதான குருபாதபிரதிமையை இருகைகளாலும்பற்றி வீழ்ந்து அழுது புலம்பி,

திருச்சதகம்.

மெய்தானரும்பிவிதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம் [ங
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னு
கைதானெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே.

*　　*　　*　　*　　*　　*

பாடவேண்டுநான்போற்றிநின்னையே
பாடிநைந்துநைந்துருகிநெக்குநெக்
காடவேண்டுநான்போற்றியம்பலத்
தாடுநின்கழற்போதுநாயினேன்
கூடவேண்டுநான்போற்றியிப்புழுக்
கூடுநீக்கெனைப்போற்றிபொய்யெலாம்
வீடவேண்டுநான்போற்றிவீடுதந்
தருளுபோற்றிநின்மெய்யர்மெய்யனே

திருச்சிற்றம்பலம்.

எனப்பாடி, இரங்கி, பின்னர் ஞானாசாரியசுவாமிகள் கட்டளையிட்டருளியமையை நினைந்து அந்த

ஸ்தலத்திலே எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானை வணங்கி, விடைபெற்று அவ்விடம்நின்றும் உத்தரகோச மங்கையென்னும் ஸ்தலத்தையடைந்து ஆண்டுளதாய ஆலயத்திலே சிவலிங்கப்பெருமானைத்தரிசிக்கையில் அவ்விடத்தே தம்மையாண்டருளியஞானதேசிகத் திருமேனியைக் காணுமையால்வெய்துயிர்த்துவருந்தி "எம்பெருமானே! நாயேனைக் கைவிடுகின்றீரோ" என்றுபுலம்பி

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையினதோ
லுடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே [ோ
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள

*  *  *  *  *  *  *

ஏசினுமியானுன்னையேத்தினுமென்பிழைக்கேகுழைந்து
வேசறுவேனைவிடுதிகண்டாய்செம்பவளவெற்பிற்
றேசுடையாயென்னையாளுடையாய்சிற்றுயிர்க்கிரங்கிக
காய்சினவாலமுண்டாயமுதுண்ணக்கடையவனே.

திருச்சிற்றம்பலம்.

என, நீத்தல் விண்ணப்பமென்னும் பாடலைப்பாட, சிவபிரான் கருணைகூர்ந்து தமதுஞானதேசிகத திருவுருவைக்காட்டி யருளினர். தரிசனம் பெற்றபி

ன்பு அத்தலத்தினின்றும்நீங்கி அநேகசிவக்ஷேத்திரங்களைத் தரிசித்து, சோழதேசஞ்சென்று, அங்கே திருவிடைமருதூரிலே சிவலிங்கப்பெருமானைச் சேவித்து, பின்னர், திருவாரூர்சென்று தியாகராஜரைச சேவித்து,

பூங்கமலத்தயனொடுமாலறியாதநெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறுவெண்ணீறாடீ
ஓங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லாதெவையாதும்புகழேனே.

சடையானேதழலாடீதயங்குமூவிலைச்சூலப்
படையானேபரஞ்சோதீபசுபதீமழவெள்ளை
விடையானேவிரிபொழில்சூழ்பெருந்துறையாயடியேனு
னுடையானேயுனையல்லாதுறுதுணைமற்றறியேனே.

உற்றாரையான்வேண்டேனூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே.

திருச்சிற்றம்பலம்.

என, திருப்புலம்பலென்னும் பாடல் ஓதிவணங்கி வன்மீகநாதரது விடைபெற்று, ஆண்டுநின்று சென்றுசீகாழியென்னும் சிவக்ஷேத்திரத்தை யடைந்து சி

வலிங்கப் பெருமானைக்கண்டு தரிசித்து அவரதுதிரு ச்சரண புண்டரீகங்களைப்பற்றி.

உம்பர்கட்கரசே யொழிவறநிறைந்த
யோகமேயூத்தையேன் றனக்கு
வம்பெனப்பழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வறவாழ்வித்தமருந்தே
செம்பொருட்டுணிவேசீருடைக்கழலே
செல்வமேசிவபெருமானே
எம்பொருட்டுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

* * * * * * *

புன்புலால்யாக்கைபுரைபுரைகனியப
பொன்னெடுங்கோயிலாப்புகுந்தென்
என்பெலாமுருக்கியெளியையாயாண்ட
வீசனேமாசிலாமணியே
துன்பமேபிறப்பேயிறப்பொடுமயக்காந்
தொடக்கெலாமறுத்தநற்சோதி
இன்பமேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

திருச்சிற்றம்பலம்.

என, பிடித்த பத்தென்னும் பதிகத்தைப்பாடி ஜ ன்மவாசனையகற்றும் பிரபாவமுடையதான அத்தல

த்திலே கருவாசனையகற்றும் காதலோடு சிலகாலம வதிந்து அத்தலத்தைநீங்கி, திருக்கழுக்குன்ற மென்னும் சிவக்ஷேத்திரஞ்செல்ல அபேக்ஷித்து, சிதம்பர வெல்லையைநாடிச்சென்று அதற்குஉத்தரதிசைசென்று, மணிமுத்தநதிசூழும் விருத்தாசலத்தைவணங்கி திருவெண்ணெய்நல்லூர்க்குப்போய் அத்தலத்தைவணங்கி, ஆண்டுநின்று, திருவண்ணுமலைக்குச்சென்றனர். தூரத்தேதானே * விசுவசிருண்மணிபூரகமான அருணுசலத்தைக்கண்டு தரிசனம்பண்ணி, பின்னர் அப்பதிபுகுந்து, திருவாலயத்துட்பிரவேசித்து அனலாசலநாதனைச் சேவித்து ஆனந்தசாகரத்தமிழ்ந்தி தம்மை மறந்து ஓலமிட்டு "அரிபிரமேந்திராதியா ஓலமிட்டலறிய காலத்தில் திருப்பாற்கடலிலுதித்த ஆலாகலத்தை உண்டருளிய பெருமானே! கங்காதரரே! பவரோகமருந்தே! முற்காலத்தில் அக்கினிபர்வதமாய் நின்றருளியபெருமானே! அகிலலோகஜனனியாகிய உண்ணுமுலையாள் பங்கனே! அண்ணுமலையானே!" என்று ஸ்தோத்திரித்து, தம்மையாண்டருளிய ஞானதேசிகத்திருமேனியைக் கண்டுகண்டுமதிருப்தியெய்தாது அகண்டாகார சிவபோகமென்னு

* விசுவ சிருக - விராட்புருஷன்.

ம்பேரின்பவெள்ளத்தைப் பருகிப்பருகி அவ்விடத தேவதிந்தனர். அங்ஙனமாகுங்காலையில் மார்கழிமா சத்தில் ஆருத்திராநக்ஷத்திரத்திற்கு முற்பட்ட பத துத்தினத்திலும் பிராமிய முகூர்த்தத்திலே மாதாக ள சயனமொருவிஅணலாசலநாதனைச் சேவிக்கும் வ ணணம் மனைகடோறுஞ்சென்று ஒருவரையொருவர் அழைத்துப் பூங்கமலவாவிகளிலே ஸ்நானஞ்செய்வ தனைக்கண்டு அவர்கள் கூறியதாக,

ஆதிபுமந்தமுமில்லாவரும்பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேயும்வாடடடங்கண
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்களவாழ்த்தியவாழ்த்தொலிபோய
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ங
னேதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய்.

* * * * * * *

போற்றியருளுகநின்னுதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெலலாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்குமீறாமிணையடிகள்
போற்றிமானான்முகனுங்காணாதபுண்டரிகம்

போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.

என்று திருவெம்பாவையென்னும் பாடல்பாடி, அம்மங்கையரோ கூறியதாக,

செங்கணெடுமாலுஞ்சென்றிடந்துங்காணரிய
பொங்குமலர்ப்பாதம்பூதலத்தேபோந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொண்டு
தெங்குதிரள்சோலைத்தென்னன்பெருந்துறையா
னங்கணனந்தணனாயறைகூவிவீடருளும
அங்கருணைவார்கழலேபாடுதுங்காணம்மானாய்.

* * * * *

பெற்றிபிறர்க்கரியபெம்மான்பெருந்துறையான்
கொற்றக்குதிரையின்மேல்வந்தருளித்தன்னடியார
குற்றங்கணீக்கிக்குணங்கொண்டுகோதாட்டிச
சுற்றியசுற்றத்தொடர்வறுப்பான்றொல்புகழே
பற்றியபாசத்தைபபற்றறநாம்பற்றுவான்
பற்றியபேரானந்தம்பாடுதுங்காணம்மானாய்.

திருச்சிற்றம்பலம்.

என்று, திருவம்மானைபாடி, சிலகாலத்து அங்கேயிருந்து, பின்னர் ஆண்டுநின்றும் காஞ்சிமாபுரத்துச்சென்று, அங்கேஏகாம்பரநாதரையும், காமாக்ஷி

தேவியையும், குமரகோட்டத்தடிகளாகிய சுப்பிரம ணியசுவாமிகளையும் வணங்கி, திருக்கழுக்குன்றஞ் சென்று, அங்கேஞானதேசிகத் திருமேனியைக்கண்டு, எல்லையில்லாப் பேரானந்தங்கொண்டு,

பிணக்கிலாதபெருந்துறைப்பெரு மானுன்னாமங்கள பேசுவாரக, கிணக்கிலாததோரின்பமேவருந்துன்பமேதுடை ந்தெம்பிரா, னுணக்கிலாததோர்வித்துமேல்விளையாமலெள வினையொத்தபின், கணக்கிலாத்திருக்கோலநீவந்து காட்டி னாய்கழுக்குன்றிலே.

* * * * * * *

இயக்கிமாரறுபத்துநால்வரையெண்குணஞ்செய்தவீசனே மயக்கமாயதோர்மும்மலப்பழவல்வினைக்குளழுந்தவுந [னை துயக்கறுத்தெனையாண்டுகொண்டுநின்றாய்மலர்க்கழறநதெ சயக்கலைவத்தடியார்முனேவந்துகாட்டினாய்கழுக்குன்றிலே.

திருச்சிற்றம்பலம்.

எனும் பாடல்பாடி சிலநாள் அங்கேயிருந்து பின்பு, ஆண்டுநின்றெழுந்து, சிதம்பரத் தெல்லையை நாடிச்சென்று, அத்தலத்தையடைந்து, இருபக்கமு ம நிரைநிரையாய நிற்கும் கொன்றைமரங்களையும ஏனைய சிவபூசைக்கு உசிதமான புஷ்பங்களலருமம ரங்களையும், சம்சாரவாசனைநீங்கப்பெற்ற மஹான்க

ள் வீற்றிருந்து வேதபாராயணமும் நிமலாகமபடனமும் செய்கின்ற ஒலி ஓயாது கேட்கின்ற மண்டபங்களையும், மன்றுகளையும், ஆபணவீதிகளையும், கிரகபந்திகளையும், சௌதமாலைகளையும், கண்டுகண்டு மகிழ்கொண்டு, திருவாலயத்தினுள்ளே புகுந்து, திருச்சபைசென்று, பஞ்சகிருத்தியங்கள் நடாத்தும்பொருட்டு ஆனந்தத்தாண்டவம் புரியாநின்ற நடேசனைத்தரிசித்தலும், அங்கேபரமசிவன் ஞானதேசிகத் திருவுருவைக்காட்டலும், நேத்திரங்களினின்றும் ஆனந்தபாஷ்பஞ் சொரிய, தேகங்கம்பிக்க மெய்ம்மறந்து, அன்பாராமை மீதூரஎம்பெருமானை நோக்கி

இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாரணமா
யந்தரமேதிரிந்துபோயருநரகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே.

*  *  *  *  *  *  *

பூதங்களைந்தாகிப்புலனாகிப்பொருளாகிப்
பேதங்களனைத்துமாய்ப்பேதமிலாப்பெருமையனைக்
கேதங்கள்கெடுத்தாண்டகிளரொளியைமரகதத்தை
வேதங்கடொழுதேத்தும்விளங்குதில்லைகண்டேனே.

திருச்சிற்றம்பலம்.

என்னும் பாடலைப்பாடி, மூலஸ்தானத்திலிருக்கும் சிவலிங்கஜோதியும், சிதாகாசத்திலிருக்கும் நடனகாரணஜோதியும், ஏகாகாரமாயிருக்கும், மகானுபூதியில் இருந்து தம்மைமறந்து, நிஷ்கிரியராய் அசையாது சித்திரத்தெழுதிய புருஷாகார மென்ன நின்றனர். அப்பொழுது மாணிக்கவாசகப் பெருமான்நின்ற நிலையைக்கண்டோர் யாரும் அதிசயமடைந்து "இஃதென்னே! இஃதென்னே! இவரதுகைகால்கள் நிஷ்கம்பமாயிருக்கின்றன, கண்கள் இமைக்கின்றில; இஃது என்னஅபாயமே!!" என்றுதம்முள்ளே பேசி அடியாரைநோக்கி "அன்பரே! சபையைவிட்டுத தூரததே அகலும்" என்றனர்.

பரிசாரகர்கள் இவ்வாறுரைத்தபோதும், நடேசரது தாண்டவஞான புராதனஇயற்கையைநாடி, ஆலோகஞநிதமான துரியாதீதபரவெளியில் அமிழ்ந்தித்தம்மைமறந்து,ஸ்தம்பம்போல்நின்றவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் அதைக்கேளாது நின்று, பின்னர் சாமுட்டிக்குள்ளே பிராணன்புகுந்தாலென்ன, திருக்கரசரோருகங்களைச்சென்னி மேற்கூட்டி "சிவசிவபோற்றிபோற்றி" என்று ஸ்தோத்திரித்து, கனகசபையை மூன்றுதரம் பிரதக்ஷிணஞ் செய்து,

மூலஸ்தானேசுவரரைவணங்கி, சிவகாமியம்மையின திருச்சரணார விந்தங்களைச் சேவித்து, ஆண்டுநின்றகன்று, அத்தலத்திற்கு மேற்றிசையி லிருக்கும் புலீச்சரமடைந்து, அங்கேசிவபெருமானை வணங்கி, பின்புசிதம்பரவீதியிலே செல்லுகையில் குலாபபத்து, கோயிற்றிருப்பதிகம் கோயின்மூத்த திருப்பதிகம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல், திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருவுந்தியார் திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, திருக்கோத்தும்பி, குயிற்பத்து, திருத்தசாங்கம், அச்சப்பத்து, ஆகிய இப்பாடல்களைப்பாடி, பின்னர் அந்நகரின் புறத்தே ஓர்பன்னசாலையமைத்து, அங்கேயோகபீடத்தில் வீற்றிருந்து சிவபெருமானது திருவடிக் கமலங்களைத் தியானித்துக்கொண் டிருந்தனர். இங்ஙனமாகுங்காலையில் மாணிக்கவாசகப் பெருமானது திருவாசகத்தமிழைத் தில்லையிலுள்ளார் அதிசயத்துடன் புகழ்ந்திருந்தனர்.

திருச்சிற்றம்பலம்.

திருவம்பலச் சருக்கம் முற்றிற்று.

சிவமயம்.

# பௌத்தரைவாதில்வென்ற சருக்கம்.

திருவாதவூரடிகள் சிதம்பரத்தில் வில்வவனத்திலே சஞ்சரித்து, ஜீர்ணபத்திரம் உண்டு சிவயோகத்திலிருக்குங்காலத்தில், சிவபக்தனாகிய தாபசனொருவன் நானாதேசவளங்களையும் அறியும் அபேக்ஷையினனாய், சோழமண்டலத்திலே சஞ்சாரஞ்செய்து, இலங்காதுவீபம்சென்று அவ்விடத்துள்ளவான கிராமங்களிலே சஞ்சரிக்குங்காலையில், தான்போன இடங்கடோறும் "தில்லைத்திருச் சிற்றம் வாழ்க" எனக்கூறு வாராயினான். சிவபிரானது திருக்ஷேத்திரத்தினை வாழ்த்துவதைக்கேட்டு மனம்புழுங்கிய அறிவிலிகளாகிய பௌத்தர்களிற் சிலர்தமது இராஜனுக்கு சைவதாபசரது விருத்தாந்தத்தை மொழிந்தனர். அஞ்ஞானங்குடிபுகுந்த சிந்தையனான பௌத்தராஜன் அத்தாபசனைத்தனது சம்முகத்திற்குக் கொடுவரும் வண்ணம் தன்னேவலாளர்களைப் பணிக்க, அவர்கள் சைவதாபசரிடஞ்சென்று "சுவாமீ? உம்மை எமது அரசன் அழைத்துவரும் வண்ணம் கட்டளையிட்டனன்; ஆதலில் நீர் யாதானுமோர் ஆக்ஷே

பமின்றி வரல்வேண்டும் " என்றுவேண்டினர். அப போது தாபசர்"தேசசஞ்சாரியாய் பிக்ஷாடனத்தினு லே சீவனஞ்செய்யும் என்னுடனே நமது அரசனு க்கு யாதுகாரியமுளது? " என்றனர். அதுகேட்டு ஏ வலாளர்கள் " சுவாமீ நீர் பிக்ஷாடனத்தினுல் சீவன ஞ்செய்பவரோனும், யாவரையும் நீங்கிலிருந்து பரிபா லனஞ்செய்யும் அரசனது ஏவற்படியே நடப்பது அழகு " என்றுசொல்லி வேண்டலும், அத்தாபசர் அவர்களுடனேபோய் இராஜசம்முகஞ் சென்றனர். அங்கும் சைவர் தில்லைத்திருச்சிற்றம்பலம் வாழ்க எ ன்றுசொல்லி வீற்றிருத்தலும் பௌத்தராஜன் சைவ ரது விபூதிருத்திராக்ஷமாலையையும் கையில்விளங்கு ம் பிரம்பையும், ஜடாகலாபங்களையும், கண்டு சிறிது மனந்துளங்கி "தாபசரோ! இப்பொழுது நீர் தில்லைத்தி ருச்சிற்றம்பலம்வாழ்க என்று உரைத்தகாரணம்யா தென்று வினவலும், தாபசர் " இலங்காதிபதியே கேள்! சோழமண்டலத்திலே சிதம்பரமென்று ம கிமை தங்கிய க்ஷேத்திரமொன்றுண்டு. அஃது மு ன்னே தில்லைவனம்; அஃதேதபுவனங்களுக் கெல்லா ம் புராதனமானஸ்தலம்; விராட்புருஷனது இருதய புண்டரீகமாகிய அத்தலத்தில் சுவர்ணசபையொன்

றுண்டு; அதிலே தேவாதி தேவராகிய பரமசிவன் கருணாசக்தியாகிய உமாதேவியார் கண்டுமகிழப் பஞ்சகிருத்திய காரணமான நடனம்புரிவர். அங்கேநெடுங்காலம் குஷ்டரோகத்தினால் வருந்திய இரணியவன்மன்மூழ்கிய மாத்திரத்தில் அவனது வியாதிகள் யாவற்றையும் நீக்கியதான சிவகங்கை எனனும் ஓர் தீர்த்தமுண்டு. அதிலேமூழ்கிப் பரமசிவனது ஆனந்தநடனத்தைத் தரிசனஞ்செய்வோர்ஜனனமரணவேதனையற்றுமோக்ஷசுகமடைவர். சகலான்மாக்களதும் பாசபந்தத்தினையொழித்து மோக்ஷசுகங்கொடுத்தற்குத்தாமே வல்லவென்னும் ஜயசீலத்தைக்காட்டும் வண்ணம் பரமசிவன், தமது வாமபாகத்தில் வீற்றிருக்கும் அண்டசராசரங்களனைத்தையு மீன்ற ஆனந்தவல்லியாகிய உமாதேவியார் பார்த்து மகிழநடனம் புரிந்தனர். சிவபிரானது திருச்சரணார விந்தங்களைத் தியானியாத தீயரும் மனம் வாக்குக் காயமென்னுந்திரிகரணங்களாலும் பாவமேபுரிகின்ற கொடியாரும், ஒருதரம் திருச்சிற்றம்பலம் என்றோதில், அஃது பஞ்சாக்ஷரத்தை இருபத்தோராயிரத்து அறுநூறு தரம் உச்சரிப்பதற்குச்சமம்; ஆதலாலேதான் இலங்காதிபதீ ! யான் இல்லைத்திருச்சிற்றம்பலம்வாழ்க எ

ன்று எப்போதும் சொல்கின்றேன்" என்றனர். அவ்வுரைகேட்டலும், அரசனுக்குப்பாங்கே வீற்றிருந்த பௌத்தகுருசினந்து "சைவனே! பிடகாகம மூன்றாலும் பிரதிபாதிக்கப்படும் கடவுளேயன்றி வேறுங்கடவுளர் உளரோ? யான் இத்தினத்தேதானே நின்னாற்புகழ்ந்துரைக்கப்படும் சிதம்பரத்திற்குச்சென்று நின் கடவுளது வீரதுவசத்தையும் வீரக்கழலையும் அறுத்து, உலகோர்யார்க்கும் புத்தனே கடவுளென்னுஞ் சத்தியத்தை விளக்கி, அக்கனகசபையே எம்பெருமானாகிய புத்தனது பள்ளியாகச் செய்வேன். இக்காரியம்மூன்று தினத்தினுள்ளேமுடிப்பேனென்று பிரதிஞ்ஞைபண்ணி, ஓர் சிவிகை மீதிவர்ந்து தனதுசீஷவர்க்கங்கள் நாற்புடையினுஞ் சூழச்சென்று சிதம்பரத்தெல்லையை யடைந்தான். அப்போது இலங்காதிபதியும், தன்னுடைய புத்திரியினது மூகத்துவம்நீங்க, கனகசபைக்குப்போக அபேக்ஷித்து சைனியங்கள்சூழ்ந்துவரச்சிதம்பரத்திற்குப்போனான். அரசன் போதற்கு முன்னமேசென்ற பௌத்தகுருசிவிகையினின்றிறங்கி, புலீச்சரநாதரது திருக்கோயிலின் கண்ணிருக்கும் கனகமயமான மண்டபத்தில் வீற்றிருந்தனன், அதன் பின்னர் இலங்காதி

பதியும் அங்குசென்று, தன்குரவனாகிய பௌத்தனை வணங்கி அம்மண்டபத்திலேதானே ஒருசார் வீற்றிருந்தனன். அதுகண்ட திருவாலயப்பரிசாரகர்கள் மனம்நொந்து "இஃதென்ன அநுசிதம் !! இஃதென்ன அநுசிதம் !! எம்பிரானது திருக்கோயிலினுள்ளே புறச்சமயிகளாகிய பௌத்தர்கள் புகுந்தனரோ !!" என்று சொல்லிமனம்நொந்து, கோபித்து அவர்களை நிந்தித்து "பௌத்தனே ! நீ இவ்விடம நின்றும் விரைவிலே ஓடு" என்றனர். அப்போது பௌத்தகுரு பரிசாரகர்களைநோக்கி "சைவர்களே! யான் சோழமஹாராஜனது முன்னிலையிலே உமது சமயமாகிய சைவம் அசத்திய மார்க்கமென்றும், பௌத்தமே சத்தியமார்க்கமென்றும் ஸ்தாபித்தன்றி இவ்விடம் நின்றும் ஏகேன்" என்றான். இவ்வார்த்தை கேட்டலும்பரிசாரகர்கள்யாவரும் ஓடி, தில்லைமூவாயிரவர்க்கும்ஏனைய மஹான்களுக்கும்இவ்விருத்தாந்தத்தை விளம்பினர். அழலூட்டியவேல்போன்ற அவ்வார்த்தை அவர்கள் செவிப்புகுதலும், யாவரும் அக்கணத்தே தானே திருவாலயஞ்சென்று மண்டபத்திலேகூடி. "பௌத்தனே ! சிறிதும் அச்சமின்றி நீ ஈண்டுவந்தனை. நீமூடன். இங்குநீவந்திருக்குங் காரணம்யாது?"

எனவினவினர். அவர்வார்த்தைகேட்டு பௌத்தகுருன்சவர்களைநோக்கி "ஆகமவேத புராணங்களாலேலறுங் கடவுளாகிய சிவபெருமானே பரமபதியென நீவிர்ஸ்தாபிப்பீர்களேல், உங்கள்ஸ்தாபனத்தை ஆக்ஷேபித்து எங்கடவுளே பரமபதியென ஸ்தாபனம்பண்ணுவேன். வாதஞ்செய்யவல்லீரேல் வம்மின்" எனக்கூறினன். அப்போது தில்லைமூவாயிரவர்கள் முனிந்து "பௌத்தனே நாய்குரைத்தாலும்சின்று அதன்கோபத்தினை நீக்குவது பெரியோர்கடன். இழிமையுடைய நின்னுடனும் வாதுசெய்வது எங்கடனே. அரசனும் சகலகலா பண்டிதர்களும சேர்ந்திருக்கும் சபையிலே தருக்கஞ் செய்தக்கால் வாதங்களின் குணதோஷங்கள் யார்க்கும் உறுதிப்படும். அஃதன்றி, தனியேநின்னுடன் வாதஞ்செய்யத் தகாது." என்றுசொல்லி, அவர்கள்யாவரும் வேறோரிடத்திற்கூடி "யாம் இவனைமுனிந்து ஓட்டுவேமேல், ஊரார்யாரும் தில்லைமூவாயிரவர் பௌத்தனது வினக்கட்கு உத்தரம்புகல் அறியாது அவனைவீணே முனிந்தனர். என்று உலகம் நம்மைப்பழிக்கும் ஆதலில் மஹாசபையில் தருக்கஞ்செய்வதே அழகு" என்று தம்முள் ஆலோசித்து மற்றைநாள் ச

வைக்குவரும்வண்ணம் பிராமணர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஏனைய மஹான்களுக்கும் பத்திரிகையனுப்பியாவரும் தத்தம் மனைபுக்கனர். அத்தினத்தில் சூரியாஸ்தமயனமாய் இருளெங்கும் பரத்தலும் சைவர்கள்யாவரும் கின்னமனசுடையாராய் அன்னம் அயின்றுதுயின்றனர். அவர்கள் துயிலுகையில் யாவரதும் சுவப்பனத்திலே நடேசப்பெருமான் திருக்கரத்திலே பிரம்புதாங்கி திருநுதலில் விபூதிதரித்து கழுத்திலே உருத்திராக்ஷமணிவடந்தரித்து திருமுகத்திலே திருப்புன்முறுவல் காட்டிமனோகரமான திருவடிவங்கொண்டு “ அன்பர்களே ! அஞ்சாதிருங்கள் நமது சிதம்பரத்தெல்லையிலே மாணிக்கவாசகனெனப்பெயரிய பக்தன் இருக்கின்றான். அவனை பௌத்தரைவாதிலே வெல்லும் வண்ணம் வேண்டுவீரேல், அவன் யாதானுமாக்ஷேபமின்றி அவர்களை வாதில்வென்று நமது சைவத்தையே யாவரும் மகிழ ஸ்தாபனஞ் செய்வான் ” என்று உரைத்து மறைந்தருளினர். சிதம்பரேசர் மறைந்து போதலும் அவர்கள் யாவரும் பேரானந்தக் கடலுள் திளைத்து, எமபிரானது பெருங்கருணைத் திறத்தை வியந்தோதி பின்பு துயின்றனர். பின்னர் சூரியோதயமாதலும், யா

வரும் சயனமொருவிஅன்றிராவில் பொன்னம்பலநா தர்தத்தம் சுவப்பனத்திலே தோன்றி உரைத்தருளி யதை ஒருவருக்கொருவர் உணர்த்து எம்பரமபிதா வை வியந்துகூறி, அன்பாராமைமேற் கொண்டு, சி வபக்த சிரோமணியாகிய மாணிக்கவாசகப்பெருமா ன் வீற்றிருந்து சிவயோகம் செய்யும பன்னசாலை ய டைந்து, அங்கே எம்பெருமான் பதுமாசனம் விட் டெழுதலும், அவர்களெல்லாரும் விநயத்துடனின் று பொன்னம்பலநா தர்தங்களுக்குச் சுவப்பனத்திலே உரைத்தருளியதைச் சிவானுபவச்செல்வருக்கு மொ ழிந்தனர். அப்போது தில்லைமூவாயிரவரது வார்த் தையிலே சிரத்தைகொள்ளாதவராய், திருவாதபுரே சர் வில்வவனத்திலே பல்லிடத்தும் உலாவிக்கொ ண்டு நின்றனர். அவர்கள் மீட்டும் மீட்டும் அவரை வேண்டி அவர்பின் செல்லவும் அவர் பௌத்தரை வாதிலே வெல்லுமாறு சென்றிலர். அப்போது தி ல்லைமூவாயிரவர் துக்கங்கொண்டு நடராஜர் திருச்ச ந்நிதிசென்று “ சபாபதீ ! தேவரீர் மொழிந்தருளிய அடியவர் நாம்பலவாறுபிரார்த்தித்தபோதிலும் மிரு கங்களோடு ஓடுகின்றனரேயன்றி எம் வேண்டுகோ ட்குச்சம்மதிக்கின்றிலர். பௌத்தரைவாதிலே வெல்

லுதற்கு உபாயம் யாதுமொழிந்தருள்க" எனப்பிரா ர்த்தித்தலும் ஆகாசத்தினின்று "தில்லைமூவாயிரவ ரே! நம்வார்த்தையைக் கேண்மின்திருவாதபுரோசனை அழைத்தற்கு ஓர் உபாயம் சொல்வேம், யாம் திருப் பெருந்துறையிலே திருவாத புரோசனுக்கு ஞானோப தேசஞ்செய்து திவ்விய திருஷ்டியினாலே பார்த்த பொழுதே அவனுக்கு மாணிக்கரத்தினம் போன்ற வாக்கு உற்பத்தியானது. ஆதலில் நீவிர் அவனை மா ணிக்கவாசகனென்னும் நாமத்தாலழைப்பீர்களேயா யின் அவன் நமதுவேண்டு கோட்பிரகாரமே பௌ த்தரைவாதிலே வெல்வான்." என்று சிவபெருமான து திருவாக்குப் பிறந்தது. அதனைக்கேட்டலும். தி ல்லைமூவாயிரவர்கள் ஆனந்தக்கடலில் மூழ்கித்தம மைமறந்து, நடேசரது அருட்டிறத்தை வியந்தோ தி, அக்கணத்திலேதானே வில்வவனஞ்சென்று, அ வரது தீக்ஷாநாமமாகிய மாணிக்கவாசகர் என்னும் நாமத்தைச்சொல்லி அழைத்தனர். "மாணிக்கவாச கசுவாமீ! வந்தருளும் வந்தருளும்; பௌத்தர்க ளை நிக்கிரகஞ்செய்து சைவசித்தாந்தத்தை ஸ்தாப னஞ்செய்தருளும்" என்று தில்லைமூவாயிரவர்கள் அழைத்த சுவனங்கேட்டலும் மாணிக்கவாசகப்பெ

ருமான், "இந்நாமம் குருந்தவிருக்ஷத்தடியிலே ஞானோபதேசஞ்செய்த காலத்து ஞானதேசிகராகிய கிருபாசமுத்திரம் அடியேனுக் கீந்தருளியது. அஃது இப்போது எம்பரனது அருளினாலே இவர்கட்குத் தெரிவிக்கப்பட்டது. இதிலே சந்தேகமின்று" என்று சிந்தித்து, தம்மைப்புண்ணியவந்தனோனமதித்து, தில்லைமூவாயிரவர்களுக்குச் சமீபத்திலே வந்தனர். அவர்கள் யாவரும் கைத்தலங்களைச் சென்னிமேற் கூப்பி நமஸ்கரித்து, மாணிக்கவாசகப் பெருமானைப் பூசித்து, ஓர் தீக்ஷிதருடைய தோளின்மேலே எம்பிரானை ஏற்றி, சிவநாமங்களைப்பாடியும், எம்பெருமானுக்கு நாற்புடையிலும் ஆடியும்,பல்வகைத்தாளங்கொட்டியும்,ஹரஹரமுழக்கஞ்செய்தும், சாமவேதகானம்பாடியும், பௌத்தகுருவிருந்த ஸ்தானத்திற்குச் சமீபத்திலே ஓர் மாமணிப்பீடமீது வீற்றிருப்பித்து,சைவாகமசித்தகர்களாகிய சண்டர்களப்பௌத்தனைப் பார்ப்பது எம்பெருமானாகிய மாணிக்கவாசகசுவாமிகளுக்குத் தகாதெனச்சிந்தித்து, ஓர் திரைச்சீலைகட்டினர். இங்ஙனமாகுங் காலையில் தில்லைமூவாயிரவர் விடுத்த திருப்பத்திரத்தைக்கண்ட சோழமஹாராஜனும், பௌராணிகர்களும், தார்க்கிகர்க

ளும், வையாகரணர்களும், ஆகமிகளும், வேதவித்தகர்களும், ஏனைய மஹான்களும் வந்து மணிமண்டபத்தில் வீற்றிருந்தனர். சோழ மண்டலாதிபதியைக்கண்ட ஈழமண்டலாதிபதி எழுந்து உபசாரஞ்செய்து தானனுப்பிய திறையின் சேஷத்தைக் கொடுத்து முகமன்பகர்ந்து நிற்றலும், சோழராஜன் அவன் விநயததை வியந்து அவனைத்தன்பாங்கில் வீற்றிருப்பித்து மகிழ்வித்தனன். பின்னர் சோழமகாராஜனெழுந்து மாணிக்கவாசகசுவாமிகளது திருச்சரணாரவிந்தங்களின்கீழ் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து, சென்னிமேற்கைகூப்பி வணங்கிநின்று "சுவாமீ ஞானச்செல்வரே! வேதநிந்தகர்களாகிய பௌத்தரைவாதிலே வெல்வது தேவரீரதுகடன். சைவாகம நிந்தகர்களாகிய அவர்களைச்சங்கரிப்பது அடியேன்கடனாகும்" என்றனன். இவ்வார்த்தைகேட்ட பௌத்தர்கள்யாவரும் மனம்நடுங்கிஇருக்க, மாணிக்கவாசகப்பெருமான் பௌத்தகுரவனை "நீ ஈண்டு வந்த காரணம் யாது?" எனவினவினா.

"சைவரோகேளும் எங்கட்வுளாகிய புத்தனேயன்றி ஏனையசமயக் கடவுளர் பதியல்லர் என்பதைஸ்தாபிதது, இவ்விடத்தே பௌத்தர்களை வசிப்பிக்

கும் வண்ணமே யான் ஈண்டுவந்தேன்; இஃதன்றி என்வரவிற்கு வேறுகாரணமில்லை" என்ற பௌத்தன்கூறலும், மாணிக்கவாசகசுவாமிகள் இருப்புன்னகைசெய்து, பௌத்தனதுஅஞ்ஞானத்திற்கிரங்கி அவனைநோக்கி, "பௌத்தகுரவனே! நீவணங்குங் கடவுளது இலக்கணங்களும், அக்கடவுளைச் சேர்வதற்குச் சௌபானபந்திக் கிரமமாயிருக்கும்நெறியும கூறுவாய்" எனப்பணித்தனர். எம்பெருமான இவ்வாறுபுகலலும் பௌத்தன் கோபமுற்று "சைவரே! பிறவிகுருடனுக்குச் சூரியப்பிரகாசங்காட்டல்முடியுமோ? எங்கடவுளாகிய புத்தனது மகிமையாவறையுங்கூற ஆயிரம்நாவும்போதா; எங்கடவுள் யோக்கியதையுடைய அடியார்க்குப் பிடகாக மந்திரயந்தைப்போதித்து, ஆன்மாக்களிடத்துக்கொண்ட காருண்ணியங் காரணமாகப் பல்பகையோனிதோறும் ஜன்மித்து, அவற்றிற்கு இதமேசெய்து, ஜீவஹிம்ஸை, சோரத்துவம், அசத்தியம், மதுபானமாகிய பாவங்களை யொழிந்து, * குஞ்சராசனவிருக்ஷநீழலிலேவீற்றிருப்பர். கருப்பசம்பந்தத்தாலுண்டாகும உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் ஆகிய

* குஞ்சராசனவிருக்ஷம்என்பது-அரசமரம்.

பஞ்சகந்த சகிதமாய நாஞபேத ஞானமுண்டாகி நீங்குவதே ஜன்மவியசனம்; பஞ்சகந்தசகிதமான ஆன்மா அழிந்துபோவதே க்ஷணபங்கம் என்னும் முத்தி" என்றுகூறினன். அதுகேட்டு மாணிக்கவாசகப்பெருமான் பௌத்தன்து அஞ்ஞானத்துக்கிரங்கி, சோழமஹாராஜனது முகத்தைநோக்கி, "பரமாணுப்பிரமாணமேனும் விவேகமற்றவனுகிய பௌத்தனுக்கு யாம் யாதுபகர்வேம்" என்றுரைத்துப் பின்னா பௌத்தனைநோக்கி "பௌத்தனே! நின்கடவுளாகிய புத்தன் குஞ்சராசனவிருக்ஷகீழலில் வீற்றிருந்து தார்மிகபோதனுமயமான பிடகாகமத்தைப் போதிப்பன் என்றுரைத்தனையே; ஞானம் உண்டாகிமீட்டும் ஓர் மாத்திரைப்பொழுதினுள்ளே மறைந்துபோம் என்றனையே; அங்ஙனமாயின், பதமும் அர்த்தமும் ஆய்ந்து சொல்வதற்குமுன்னே உணர்வுகெடில் அக்கடவுள் தருமசாஸ்திரம் பகர்வதெவ்வாறு? இஃது அசம்பவமே. ஆதலில் தருமசாஸ்திரமே நினக்கில்லை. நின்கடவுள் ஆன்மாக்களிடத்துக் கொண்ட காருண்ணியங் காரணமாக நாநுபேதயோனிகடோறும் பிறப்பன் என்றனையே; ஜன்மம் பிரஞ்ஞாபாவம் விளைப்பது வாஸ்தவமன்று; அற்றேல்,

ஒருவரது அஞ்ஞானத்தை அகற்றமுயல்பவர்க்கும் அஞ்ஞானபந்தனம் நிகழ்வுறுமேல், அவர் அஞ்ஞானமகற்றுவ தெவ்வாறு? நின்கடவுள் ஜீவஹிம்ஸை செய்யான் என்றுரைத்தனையே; நின்கடவுள்பிறந்த பல்வகையோனிகளுள் நாய் நரி புலி சிங்கமாதியவும் அடங்கி யிருக்கின்றனவே; அங்ஙனமாகவே நாய்முதலியவற்றின் வடிவெடுத்துப் பசியினலுள்ளன்றகாலத்துப் புல்லாதின்ருன்? பஞ்சகந்தசகிதமாகி க்ஷணத்திலே உருவம் பங்கமாகும் என்றுரைத்தனையே, அன்றியும் நின்கடவுள் ஆன்மாக்கட்குக் கருணைசெய்யும் பொருட்டாய்ப் பற்பலயோனிதோறும் பிறந்தனன் என்றனையே; அவ்வாறாயின் பரஸ்பரவிரோதமா யிருக்கின்றவேநின் தாஷ்டாந்தங்கள். காரணமான ஆன்மாவோடுகூடும் காரியமான உருவமில்லாதவிடத்து, நின்கடவுளுக்கு உருவம் உண்டெனக் கூறுவதெங்ஙனம்? நின்கடவுள் க்ஷணபங்கமெய்துங்கால் பிடகாகமம் போதனைசெய்வதெங்ஙனம்? நின்கடவுளராகிய இருபத்தோர் பௌத்தர்களும் தாயரது உதரத்தையே பீறிப்பிறந்தனர்என நின்னூலிற்கூறப்பட்டிருக்கின்றதே. அங்ஙனமேல், தாயைக்கொன்று நரகப்படுகுழியில்வீழ்பவரோ தேவலக்ஷணமு

டையார்? சதுர்ப்பூதங்களின் சம்மிச்சிரமேயன்றி, உருவினுக்கு ஆன்மாவில்லையென நின்முகமத்திற்கூறபபட் டிருக்கின்றதே; அங்ஙனமாகவே, துயிலுங் காலத்திலே முகத்திலேறிப்போம் எறும்பைப் பூத பேதம் அறியாதவாறென்னை?; ஆகாசமென்றோர் பூதமுமில்லை, அக்குவியாபிக்கும் சப்தமுமில்லையென நின்னூலிற் கூறப்பட்டிருக்கின்றதே; ஆகாசம் உலகவழக்கமேயன்றி வாஸ்தவமான பதார்த்தமன்று எனறுரைப்பையேல்; பிருதிவி அப்பு தேயு வாயு எனப்படும் நான்குபூதங்களும் மிச்சிரமித்தற்கு ஸ்தானம அத்தியாவசியகமே; அங்ஙனமாகவே, அந்தஸ்தானமே ஆகாசமாகும், இதனால் நின்மதம் ஆபாசமுடையதென்பது திண்ணம். திக்கென்றுசொல்வது உலகவழக்கமன்றிப் பிறிதன்று என்று நின்நூலிற் கூறப்பட்டிருக்கின்றதே; அவ்வாறாயின், நீவடதிசையிலே குஞ்சராசனவிருக்ஷம் உளதென்று வணக்கஞ்செய்வதென்னை? நின்வார்த்தையும் செய்கையும் ஒன்றையொன்று விரோதிக்கின்றனவே. இப்போலிநியாயங்கள் மூடர்கள் பித்தர்கள் ஆகியவர் சமூகத்திலே கூறப்படில்அன்றி, வித்துவான்கள் சபையிற் கூறப்படில் எவர் அங்கீகரிப்பார்? உயிா

களைக்கொன் றருந்துவது பாவமெனப்பகர்ந்தும்புன் புலாலுணவு கொள்கின்றனையே; இஃதென்னை! நீ புலாலுண்மையெனக் கருதிஉயிர்களை வதைப்போர் பாவம் உன்னையன்றுசாரும்? பஞ்சகந்தமுமழிவதே க்ஷணபங்கமென்னு முத்தியென்று நின்னூலிற் கூறப்பட்டிருக்கின்றதே, பஞ்சகந்தமுமழிய முத்திபெற்றோர்யார்? "பஞ்சகந்தமுமழிய அவற்றிலுண்டாகும் ஞானமே" என உத்தரமுரைப்பையேல், பஞ்சகந்த மழியவில்லையென்றும் க்ஷணபங்க மோக்ஷமில்லையென்றுங் கேட்டல்வேண்டும்" என்றிவ்வாறு பௌத்தமத போதனைகளிலுள்ள ஆபாசங்களைப்பிரதரிசனத்தனர்; அப்போது ஆக்ஷேபங்களுக்கு யாதானும்சமாதானம்பகர வன்மையின்றிக் கோபமுற்றுச் சைவசமயாசாரிய சுவாமிகளைப் பார்த்து "எங் கடவுள் யாவர்? எம்முத்தியாது?" எனவினவினீரோ நுங்கடவுள் யாவர்? நும்முத்தியாவதுயாது!" என்றுவினவலும் பரசமயதிமிரபானுவாகிய மாணிக்க வாசகப்பெருமான் கூறுவாராயினர். "பௌத்தனே! கேள். எம்பிரான் வடவிருக்ஷநீழலில் வீற்றிருந்து பரிபக்குவ அடியார்க்கு நிம்லாகம போதனைசெய்பவர்; திருமேனியிற் பொலியும் திருவெண்ணீறர்; ஆ

னந்தத்தாண்டவர்; உமாதேவிசகிதர் ; கருணைமிருத சாகரர், எம்பிரான்மகிமையை வேதங்களின் சிரசுக ளாகிய உபநிஷதங்களும் கூறவல்லவா?'' என்று சி வஞானச் செல்வராகிய மாணிக்கவாசகப் பெருமா ன்கூறலும், பௌத்தன் மாற்சரியமுற்று, எம்பிரா னைத்தடுத்து "சைவரே ! நுங்கடவுளாகிய சிவன்மு ன்னே கல்லாலினிழலில் ஜபமணிவிளங்கும் கரத்த ராய் வீற்றிருந்தனர் என்றுரைத்தீரே; ஜபமணிவிள ங்கும் கரத்தராய் யோகாசனத்தில்வீற்றிருந்தகாரண த்தினாலே பரமவஸ்துவான கடவுள் நுங்கடவுளல்ல வொன்றும், அவரின்மேலான பரமபதியொருவர்உள ரொன்றும் அநுமானித்தற்குஇடமுண்டே, உலகோர் யாரும்வணங்கச் சிவன்நடனம்புரிகின்றுரென்றீரே. நடனம்புரிபவர் தமக்குமேலானவர் பார்த்துமகிழும் பொருட்டேயன்றிச் சுவேச்சையாய்நடித்தலுண்டா? அங்ஙனமாகவே சிவபிரானின் மேலான கடவுளுண் டென்பது திண்ணம். சைவரே ! நுமதுகடவுள் திரு மேனியெங்கும் வெண்ணீறணிந்திருக்கின்றனர் என் றீரே. திருமேனியிலே சிவபிரான் வெண்ணீறணிந் தமை அவரதுதிருமேனியினும் வெண்ணீறு அதிபா வனமுடைத்தென் னுங்கருத்தினாலன்றோ? சிவபிரான்

அர்த்தநாரீசுவரன் என்றுரைத்தீரே. ஸ்திரிபும்ஸ மி ச்சிரமான வடிவம் அசம்பவமே. ஓர்பாகத்தில்உமா தேவியிருப்பில் சிவபிரான் துறவறத்திருத்தல் எவ் வாறு?" என்று பற்பல ஆக்ஷேபங்கள் செய்து சற்ச மயமாகிய சைவத்தின்மேற் ஞேஷமேற்றினன். அக் காலையில் சைவசித்தாந்தசாகரமாகிய மாணிக்கவாச கப்பெருமான் புன்முறுவல்செய்து பௌத்தனது அஞ்ஞானத்துக்காக இரங்கி, "பௌத்தனே நீ இப் பொழுது பரமபதியாகியசிவபிரான்மேற் ஞேஷமாக க் கூறியவற்றிற்குச் சமாதானஞ் சொல்லுங்கால்வே தாகமங்களின் வாக்கியங்களைக் கூறல்வேண்டும். அ வற்றைச் சண்டாளனாகியநின்முன்னேகூறல் மஹா பாதகமேயாகும்; ஸ்தூலார்த்தங்களி னுற்றலாலேநி ன்ஆக்ஷேபங்களுக்குச் சமாதானஞ் சொல்வேங்கே ள். சிவபிரான் ஜபமணிதிருக்கரத்திற்றங்கி வடவி ருக்ஷநிழலில் எழுந்தருளியிருந்தமை தம்மினும் மே லான பரமபதிஒருவர் உளரென எண்ணி யன்று.உ லகோர்யாவரும் தவமார்க்கப்பிரவேசம் புரியுமாறு ம், எம்பிரானது சிஷரான சனகர்முதலிய மஹான் கள்யோகநெறியும்வண்ணமுமேயென்றறி. சிவபிரா ன் ஆனந்தநடனம்புரிவது தம்மின்மேலானோர் கண்

டுமகிழும் வண்ணமென்று ஆக்ஷேபித்தனேயே ; அத
ற்கன்று, சிருஷ்டிமுதலிய பஞ்சகிருத்தியங்களும
நடைபெறும் பொருட்டே. பஞ்சகிருத்தியங்களும் ந
டைபெறவே ஆன்மாக்கள் பாசபந்த வேதனையகன்
று கைவல்யசுகமடைவது திண்ணம். ஆதலில் ஆன
ந்தநடனம் எம்பெருமானது பெருங்கருணைத் திறத
தை விளக்குகின்றதே.எம்பிரானாகிய பரமசிவன்வெ
ண்ணீறணிந்தது யாதுகாரணம்பற்றி என வினவு
வையேல் உத்தரமளிப்பேங்கேள். ஆன்மாக்களது
வேதனைகளை அகற்றும் வெண்ணீற்றை எம்பெருமா
ன் திருமேனியிற்றரித்தமை பிள்ளைகளது நோய்கற
றும்பொருட்டுத் தாயர்ஔஷதம்உண்டதுபோலாகு
ம் ; பௌத்தனே ! சிவபெருமானேயன்றி வெண்ணீ
றணியத்தக்கவர் வேறுயார், விபூதியினது மகிமை
வேதங்களாலும் கூறிமுடியாது. அண்டசராசரங்க
ளனைத்து மீன்றருளிய ஆனந்தவல்லியாகிய உமா
தேவியாரை எம்பெருமான் வாமபாகத்திற் கொண்
டமை ஆன்மாக்கள் யாவற்றிற்கும் போகமளிக்கும்
பொருட்டே ; அவற்றிற்கு யோகமளிக்கும் பொரு
ட்டாக யோகவடிவுடன் இருந்தார். பரமசிவனது
குணங்கள், இத்தகைமையேயெனக் கூறுவது அரிது,

அவர் ஆதிகர்த்தா, சிவயோகி, ஜோதி, பேரானந்தசாகரம், நிராமயர், நிரஞ்சனர்; எம்பெருமான் மணியரங்கத்தில் நின்றருளிய லீலையேயன்றி வேறேதுபதம்? ஏதுநிலை? ஏதுகூறற்பாற்று?" என்றுஆக்ஷேபங்களுக்குச் சமாதான நியாயங்கூறி, பின்னர் னசைவாகம நிந்தகர்களாகிய பௌத்தரது நாவிலேநின்று அவர்கள்பேச இயற்றும் சரஸ்வதியைக்கோபித்து "கலைமாதே! சிவபெருமானை நிந்திக்கின்றதீயபௌத்தரது நாவினையகன்றுபோ" எனஆஞ்ஞாபித்தலும் சரஸ்வதி அஞ்சி அகன்றனள். அப்பொழுது பௌத்தகுரவனும் அவன்சீஷர்களும் *மூகராயினர். அதுகண்ட இலங்காதிபதி மனம்நடுங்கிஎழுந்து மாணிக்கவாசகசுவாமிகளது திருப்பாதாரவிந்தங்களின்முன்வீழ்ந்து நமஸ்கரித்து "எம்பெருமானே தேவரீர்கருணைவெள்ளம் பொழிந்திடும் திருக்கண்ணால்நோக்கி என்ஊமைப்புதல்விக்கு வாக்குவரும்வண்ணம் திருவுளம்பற்றியருள்வீரேல் அடியேனதேவரீருக்குத் தொண்டனாவேன்,,எனவேண்டினான். அப்பொழுது சிவஞானச்செல்வரான திருவாதவூரடிகள் அவளைஅழைப்பித்து கருணைகடாக்ஷவீ

* மூகரென்பது-ஊமைகள்.

க்ஷணஞ்செய்து அவளைத்தமது திருமுன்னிலையில் இருத்தி "மங்கையே! பௌத்தர்கள்செய்த ஆக்ஷேபங்களுக்கெல்லாம் நன்குசமாதானஞ் சொல்லு" என்று ஆஞ்ஞாபித்தலும் அவள்யாவரும் அதிசயிக்கும் வண்ணம் உத்தரமளித்தனள். அவளுரைத்தஉத்தரங்களின் அருத்தத்தைச் சங்கிரகித்து மங்கையர் செய்யும் திருச்சாழலாக. -

பூசுவதும்வெணணீறுபூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயானமறைபோலுங்காணேடி
பூசுவதும்பேசுவதுமபூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்கருமியல்பானான்சாழலோ

*  *  *  *  *  *  *

அருந்தவருக்காலின்கீழறமுதலாநான்கினையு
மிருந்தவருக்கருளுமதுவெனக்கறியவியம்பேடீ
யருந்தவருக்கறமுதனன்கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருகுலகியற்கைதெரியாகாண்சாழலோ,

திருச்சிற்றம்பலம்.

என்னும் பாடலைப்பாடினர். அப்போது இலங்காதிபதி விபூதிருத்திராக்ஷமாலையாகிய சிவசின்னங்களைத்தரித்து, பஞ்சாக்ஷரத்தை உச்சரித்து ஆனந்த மடைந்து சிவபக்தனுகி, சோழமஹாராஜனும சித

ம்பரவாசிகளும் * திருச்சிற்றம்பலமும் வாழ்களெனப் பலதரங்கூறி மாணிக்கவாசகப் பெருமானைப் பிரதக்ஷிணமாய்வந்து வீழ்ந்து நமஸ்காரம் பண்ணினன். அதனைக்கண்ட பௌத்தர்கள் எல்லோரும் தமது மூகத்துவம் நீங்கும்வண்ணம் பரமததிமிர பாஸ்கரராகிய மாணிக்கவாசகப் பெருமானை வணங்கினார்கள். அப்போது சோழமஹாராஜனும் தில்லையிலுள்ளாரும் அவர்கள்மூகத்துவம் நீக்கும்வண்ணம் எம்பிரானைவேண்டினர். சிவபக்தர் திருநேத்திரங்களாற் பரிந்துபார்த் தருளியபொழுதே பௌத்தர்களது மூகத்துவம் நீங்கியது. நீங்கலும் அவர்கள் ஆனந்தமடைந்து எமபெருமானைநோக்கி "சுவாமீ! சைவசித்தாந்தசாகரமே! அடியேம் ஜன்மாந்தரஙகடோறுமியற்றிய பாதகத்தினல் முக்திசாதனமாகிய விபூதிருத்திராக்ஷத்தைப் பூண்டு ஜன்மசாபல்யகரமான பஞ்சாக்ஷரத்தை உச்சரிக்கப்பெற்றிலேம். அடியேங்கட்கு விபூதிருத்திராக்ஷமாலை காஷாயவஸ்திரம் தந்தருளி இந்தத்துவராடையை தகித்தருள்க" எனவேண்டினர். அவர்வார்த்தைகேட்ட மாணிக்கவாசகப்

* சித் - ஞானம். அம்பலம் - ஆகாசம் அம்பரம் என்னும் வடமொழி அம்பலமென்ருயிற்று.

பெருமான் சரற்கால பூரணசந்திரன்போன்ற திருமுகத்திலே மந்தகாசப்பிரகாசங்காட்டி, அவர்கள்பூர்வத்திலே புண்ணியஞ்செய்தவர்களென வெண்ணி, சிவசாதனங்களாகிய விபூதிருத்திராக்ஷ மாலிகை அவர்கட்கீந்து, காஷாயவஸ்திரந் தரிப்பித்து, அவர்களது சீவரவஸ்திரங்களை அக்கினியிற் றகிப்பித்தனர். அவ்வமையத்திலே சோழமண்டலாதிபதியும் தில்லையிலுள்ளாரும், ஈழமண்டலாதிபதியும் பௌத்தர்களும் சுவர்ணசபைக்குச் சென்று நடராஜாமுன்னே வீழ்ந்து நமஸ்கரித்து மாணிக்கவாசகப் பெருமானை ஸ்தோத்திரித்து அவரது விடைபெற்று தத்தம் ஸ்தானஞ் சென்றனர். இவர்கள்போதலும் மாணிக்கவாசக சுவாமிகள் திருப்புலீச்சரம்போய் அங்கேமுனபோல வீற்றிருந்து பேரானந்த சாகரத்துள்மூழ்கி, மானும்புலியும் ஒருங்குவந்து தேகமுரிஞ்சிப்போகவும், பசுக்கூட்டங்கள் கன்றென்னும் பிராந்தியால் மோந்துநக்கவும், பறவைகள் ஆனந்தக்கண்ணீரைப் பருகவும் சிவயோகம் பயின்றிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

பௌத்தரைவாதில்வென்ற சருக்கம
முற்றிற்று.

உ

சிவமயம்.

# திருவடிபெற்றசருக்கம்.

சிவயோகம் பயின்று அகண்டாகார சிவபோக மென்னும் பேரின்பவெள்ளம் பருகிப்பருகி இருந்தவராகிய மாணிக்கவாசகசுவாமிகள் திருப்படையாட்சி, திருப்படையெழுச்சி, அச்சோப்பத்து, தேவலோக யாத்திரைப்பத்து, ஆகிய பாடல்களைப்பாடி, மனோவியசனஞ் சிறிதுமின்றி, சிதம்பரமே எவற்றினும் மேலான சிவபதமெனக்கண்டு இருக்குங்காலத்தில், நடராஜர் பக்தசிகாமணியாகிய மாணிக்கவாசகப்பெருமானமேற் கொண்ட பேரன்புமீதூர, ஓர் பிராமணவடிவங்கொண்டு, திரிசூத்திரம்விளங்கவும திருநுதலிலணிந்த திரிபுண்டரம் திகழவும் மெல்ல மெல்ல அசைந்து திருவாதவூரடிகளுக்குமுன் சென்று நின்றருளினர். அந்தணரைக்கண்டலும்மாணிக்கவாசகப்பெருமான் பரிவுகூர்ந்து சுவாமீ! இவ்விடத்தே வீற்றிருமென ஆசனம்வழங்கினர். அந்தணர் வீற்றிருத்தலும் திருவாதவூரடிகள் அவரெத்தேசத்தவரென வினவினர். பிராமணர் பாண்டிதேசத்தவரென கூறக்கேட்ட மாணிக்கவாசக சுவாமிகள் அதிசந்தோஷமுற்று "சுவாமீ! பிராமணோத்தம

ரே! திருப்பாதபுண்டரீகங்கள் வருந்த ஈண்டுவந்தகாரணமென்னே? எனவினவ, எம்பிரான் "சுவாமீ! உம்மைக் காணும்பொருட்டே வந்தேன்; நீர் அரிபிரமேந்திராதியர் அறிவரும் சிவபெருமானைக் குதிரையின்மீதேறிவர இயற்றிய பெருங்கீர்த்தியினாலே பாண்டிமண்டலமுழுதும் மேன்மையடைந்தது. நீர் திருப்பெருந்துறையிலே ஞானதேசிகரது திருவடிகளைச்சேவித்து வியசனங்களயாவும் நீங்கி, திருக்கழுக்குன்றஞ்சென்று, பின்னா சிதம்பரக்ஷேத்திரம்வந்து பௌததனா வாதிலேஜயித்து, சைவசித்தாந்த ஸ்தாபனம் செய்தீர் என்னும் விருத்தாந்தத்தைக் கேள்வியுற்று சைவர்கள் சகலரும் ஆனந்தக்கடலுட் டினைத்தனா. பொன்னம்பலவாணனை வியந்து பாடிய திராவிடபிரபந்தங்களை ஓதும்படி எண்ணி, அவற்றை உமது அற்புத திருவாயினாற்கேட்டு எழுதலவேண்டுமென்னும் பேராசைதூண்ட ஈண்டுவந்தேன்" என்றனர். அவ்வார்த்தைகேட்ட மாணிக்கவாசகசுவாமிகளதாம்பாடிய சதுவேதார்த்தகமான அற்புததிராவிடபிரப்ந்தமான திருவாசகமுழுதையும் மனமுவந்து சொல்ல, நடேசர்தமது அருமைத்திருக்கரங்களால் ஓரேட்டில் வரைந்தருளினர். பின்பும் தமதுவாற்சல்

ம குழந்தையாகிய மாணிக்கவாசகசுவாமிகளது அற்புதமனோகர மாணிக்கரத்தின வாசகாமிர்தத்தைத் தமது செவிகளில் நிறைக்கவேண்டுமென்னும் வாஞ்சையினாலே, பக்தசிரோமணியைநோக்கி "சுவாமீ! பொன்னம்பலநாதனைக் கவிநாயகனாகக் கொண்டு ஓர் கோவைப்பிரபந்தம் பாடல்வேண்டும்" என வேண்டினர். அப்பொழுது மாணிக்கவாசகப்பெருமான்.

திருவளர் தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக், குருவளர்
பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ, மரு
வளர்மாலையொர்வல்லியினொல்கியனநடைவாய்ந், துரு . .
காமனறன்வென்றிகொடிபோன்றொளிர்கின்றதே

போதோவிசும்போபுனலோபணிகளதுபதியோ
யாதோவறிகுவதேதுமரிதியமன்விடுத்த
தூதோவனங்கனறுணையோவிணையிலிதொல்லைத்தில்லை
மாதோமடமயிலோவெனநின்றவர்வாழ்பதியே

திருச்சிற்றம்பலம்.

என்னும் செய்யுட்களை முதலாகக் கொண்டு ஞானானுபவத்தை வர்ணித்து நானூறுதுறைப்பொருளமைந்ததான கோவைப்பிரபந்தத்தைச் சொல்ல, அழகிய சிற்றம்பலமுடையார் தமது அருமைத்திருக்கரத்தா

ல் எழுதி, புஸ்தகத்தைக்கட்டி அவர்முன்னேவைத்
து அந்தர்த்தானமாயினர். அதுகண்டு விரைந்துஎழு
ந்து திருவாதவூரடிகள் அந்தணவடிவங்கொண்டு வ
ந்தருளிய கருணையங்கடல் தில்லைச்சிற்றம்பலமுடை
யானென நிச்சயித்து எங்குமோடினர், ஆனந்தகூ
த்தனைநாடினர், எம்பிரான்மீதுபற்பலதுதிபாடினர்,
ஆனந்தக்கண்ணீர் பொழிந்தனர், "அடியேனதுபா
டலைத் திருக்கரத்தாலெழுதியவர் பொன்னம்பலவா
ணரோ !!! எம்பெருமானே அடியேனை ஈண்டுகைவி
டுத்து எங்குபோயினீர்" என்று பூமியின்மேல் விழு
ந்தனர். சாமகானப்பிரியராகிய நடனசபாபதி அடி
யேனது பாடல்களை அருமைத்திருக்கரத்தால் எழு
தியருளினமையால் அடியேன் கிருதார்த்தன் கிரு
தார்த்தன எனப்புகன்றனர். "எம்பெருமானே! சி
றியேன்முன நில்லாது விரைவிலே அந்தர்த்தானமா
யினகாரணமயாதோ?" என்றிரங்கி தரைமீது விழு
ந்தனர். பேரானந்தப்பெருங்கடலுள் ஆழ்ந்தனர். இ
ங்ஙனமாதலும அற்புதத்திராவிடப் பிரபந்தத்தில் ம
கிழடையும நடராஜர் சிதாகாசம்புக்கு, அரிபிரமன
ஆதியோரைநோக்கி இஃது நம்பக்தனை மாணிக்க
வாசகனலியற்றப்பட்ட அற்புதமான தமிழ்ப்பிரப

மமென்றுசொல்லி, அதைச் சதுர்வேதங்களையும் சிவாகமங்களையும் திருவாய்மலர்ந்தருளிய அருமைத்திருவாயினால் வாசித்துக்காட்டி, திருக்கோவையாரின் முடிவிடத்தில் திருச்சிற்றம்பலமுடையார்கரலிகிதமென எழுதி, அப்புஸ்தகத்தினை சேமித்து, பின்னர், தம்மடியாராகிய மாணிக்கவாசக சுவாமிகளது பிரபாவத்தையும் மகிமையையும் சகலகலாபிரவீணத்துவத்தையும், மற்றைய அடியார் எல்லோர்க்கும் உணர்த்தத்திருவுளம்பற்றி, அத்திருமுறையை அரங்கமணிமண்டபத்தின் வாயிற்படியில்வைத்தருளினர். அதனை அர்ச்சகராகிய ஓர் தீக்ஷிதர்கண்டு அற்புதமடைந்து இப்புஸ்தகம் ஈண்டிருந்ததல் தைவீகமென்று அதிசயவெள்ளத்தாழ்ந்து, அந்தக்ஷணமே பேரவாவென்னும் பிரசண்டமாருதந்தாக்க ஓடி தில்லைமூவாயிரவர்க்கும் அந்தக்ஷேத்திரத்திலே உறையும் ஏனையோர்க்கும் தாம்கண்ட அற்புதத்தை மொழிந்தனர். அவ்வார்த்தை கேட்டோராயாவரும ஆனந்தவேலாவலய ஈாப்பட்படிந்து இரஜிதமணிய ரங்கமண்டப வாயிற்படிமுன் விரைந்தோடி, அச்சமதுடனின்று "இஃது எம்பிரான் திருவாய் மலர்ந்தருளிய ஆரியசைவசித்தாந்தமோ யாதோ?" என்றறி

லது உத்தமமென்று யாவருங்கூறலும், அமயவறா ன்கள் கூறியவார்த்தையைக் கடைப்பிடித்து, ஓதி கூதர் அத்திருமுறைக்கு மலர்களால் பூஜைபுரிந்து தூபதீபங்காட்டி, திருப்புஸ்தகத்தின் திருக்க யிற்றையவிழ்த்து அதிலெழுதியிருக்கும் சிவபுராண முதலிய திருவாசகத்தமிழையும் திருக்கோவையார் நானூறு பாடலையும் ஓதி ஈற்றில் திருவாதபுரேசன் மொழிந்தது திருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்தது என்று வாசித்தனர்.

ஒருகாற்கேட்பினும உருகாமனமும் அழல்வாய்ப்பட்ட மெழுகேபோல,உருகுமாறியற்றும் திருவாசகத்தமிழ், திருக்கோவையாருடன் செப்புதல்கேட் , தில்லைமூவாயிரச செய்யமாமுனிவரும், அல்லநீ ா நெஞ்சத் தறிஞருமதம்மை மறந்தருட் சிவபிரான மானுடர்உய்ய சிறந்தநற்றமிழ்நூல் செய்வித்தனர் என, நடராஜனை ஸ்தோத்திரித்து, சிவஞானச்செல் வரான மாணிக்கவாசகப் பெருமானைபபுகழ்ந்து, இப்பாடல்களிருக்க, சிவலோகசாதன மார்க்கமடைய வேறும் சைவநூல்கள்வேண்டுமோ" எனவியந்தோதி, விரைவில் ஆண்டுநின்றகன்று, அந்தஅற்புத திராவிடப் பிரபந்தங்களின் அருத்த்தனை மாணிகக

வாசகப் பெருமான் தமது அருமைத்திருவாயினுல் மொழிந்தருளும் வண்ணம், அவரைப் பிரார்த்திக்குமாறு அவரிருக்கும இடஞ்சென்று, அவர் திருமுன்னிலையில் வீழ்ந்து "எம்பெருமானே! இப்புஸ்தகம் நடராஜரது திருவருளால் அரங்கமணி மண்டபவாயிற படியிற்கண்டனம், இஃது சிவபெருமானது திருவருளன்றிப் பிறிதென்னே?" என்று விண்ணப்பஞ்செய்தனர். அவர்கூறுரைத்த வார்த்தை திருவாசகத்தமிழ்புகன்றருளிய சிவஞானச்செல்வராகிய திருவாதவூரடிகளது திருச்செவிவழியே தேவாமிர்த தாரைபோலச் செல்லலும், எம்பெருமான் உடலங்கம்பித்து திருநேத்திரங்களினின்றும் ஆனந்தவருவி பூரணமாயப் பொங்கித்ததும்பிச் சொரிய, அன்பாராமைம மீக்கொள்ள, திருக்கரசரோருகங்களிரண்டையும சிரமிசைவைத்து "இழியேன்பாடிய புன்பாடலையும் ஆரணங்களும், அரிபிரமேந்திராதியரும் போற்றப் பெறும் சிவபிரான் அங்கீகரித்தருளும் வண்ணம் யான்யாதுதவம்புரிந்தேன் அறிகிலேன் அறிகிலேன்" எனறுரைத்து அழுதனர். அவ்வமையத்தில் தில்லையிலுள்ளார் யாரும் அஞ்சலிக்கரத்தினராய்நின்று எம்பெருமானைநோக்கி "சுவாமீ! ஆரு

ர்த்த பூரணமான திருவாசகமென்னும் தேனை சிவ பிரான் திருச்செவிமடுத்தருளும் வண்ணம் வந்து செய்தருளிய செயல்கள்யாவை? அடியேங்கட்கு கௌதூகல முண்டாகின்றது அவற்றை எம்பெரு மான் மொழிந்தருளுக" எனவேண்டினர். அவர்கள் வேண்டலும் நாதவந்தமுங்கடந்த மெய்ஞ்ஞானவா னந்த போதமாகிய சிவபெருமான் விஷ்ணுமுதலிய தேவர்களது மனங்களுக்கும் வேதச்சிரங்களுக்கும் அதீதமான திருவடிக்கமலங்கள் பூமிமேற் பட்டுவ ருந்தவந்து, அடியார்க்கெளியனென்னும் தமதுபேர ருட்டிறத்தை விளக்கும்வண்ணம் செய்தருளிய செ யல்களனைத்தையும் செப்பியருளினர். அவற்றைக்கேட் டுப் "பொன்னம்பலநாதர் அவரடியார் இன்னம்பலப லயோனியிலெய்தாவகை கருணைகூர்ந்தனர்" எனப் புகன்று, அந்தமகிமைதங்கிய தமிழ்ப்பிரபந்தங்களின் அருத்தத்தை மொழிந்தருளும்வண்ணம் சிவஞான ச்செல்வனை பிரார்த்தித்தனர். அப்போதுமாணிக்க வாசகசுவாமிகள் "அன்பர்காள்! நீவிர்வேண்டியவா றே தமிழ்ப்பிரபந்தங்களின் அருத்தத்தைக் கனகம ணிஅரங்கஞ்சென்று பகர்வேன்" எனப்பகர்ந்து அ வர்களெல்லாஞ் சூழ்ந்துபோக நடந்து ஆண்டுசென

று நடேசராது திருச்சந்நிதியினின்று இத்தமிழ்ப்பிரப நதத்தினருத்தம் இவரேஎன்று தாண்டவராஜனாக் காட்டி யாவருங்காண மறைந்து சிவசாயுச்சியமடை ந்தனர். மாணிக்கவாசகப்பெருமான் பாலுடன்நீர்க லந்தென்ன சிவத்துடன் ஐக்கியமாதலும் தில்லையி லுள்ளார் யாவரும் ஆனந்தபரவசமடைந்து தேகக ம்பிதமுற்று மேனிவெயர்த்து உரோமாஞ்சிதமுற் றுசிரமிசை காதலங்கூப்பி ஹரஹர முழக்கஞ்செ யதனா. சிவஞானச்செல்வர் சிவசாயுச்சியபதம் அ டைந்தமாத்திரத்தில் சிவபெருமானுக்குப் பாங்கே நின்ற பிரமதகணங்கள் நடனஞ்செயதன; கணநாதி பதிகள ஆனந்தமுழக்கஞ்செய்தனர்; துமபுருநாரத சித்தவித்தியாதரர்கள் சாமவேதகானஞ் செய்தனா. அந்தரதுந்துபி முழங்கின; தேவர்கள் மந்தாரபுஷ்ப மாரிபொழிந்தனர். சிதம்பரவாசிகள் யாவரும் பொ ன்னம்பலநாதரது பூங்கழல்மன்னிய மனசுடையா ராய்ப் மஹாதேவரது கருணைவெள்ளத்தாழ்ந்துசை வசித்தாந்த சாகரமாகிய மாணிக்கவாசகப் பெருமா ன்திருவாய்மலர்ந்தருளிய அற்புததிருவாசகத் தமி ழெனனும் அதிமதுரச் செந்தேனைப் பருகிப்பருகி ஆ னந்தமடைந்திருந்தனர்.

ஈனமிகுந்துளதோலு மென்புநரம்புஞ்சியு
மானவுடற்சிவரூப மாமிதனைத்தெளியாம
லூனுடலுகனைதேடி யுழன்றுலகிற்றமொறி
மாநரகிற்புகுதுமதோ மாயைவலைப்பவோர்கள்.

வேறு.

வாதவூரந்தணர்தந்திரு வாய்மைவிளங்குதிருக்கலை
யோதினரன்புடனெணசெவி யூடுமுகந்துகேட்டவர்
போதமெனுஞானமுறுஞ்சுக போகமுடன்புகழ்பெறுவாக
டீதிலடவயகடொலைந்துபின் சோகுலவைச்சியலோகமே

வேறு.

பூதலயாதுமவாழ்க பொன்மழைபொழிந்துவாழ்க
வேதவாகமமுமவாழ்க வேந்தர்செங்கோலுமவாழ்க
தீதிலைஞ்செழுத்துநீறுஞ் சிவனடியாருமவாழ்க
வாதவூரிறைபுராணம் படித்திடக்கேட்டோர்வாழ்க

திருச்சிற்றம்பலம்.

திருவடிபெற்றசருக்கமுற்றிற்று.

---*---

மாணிக்கவாசகசுவாமிகள் புராணவசனம்

முற்றுப்பெற்றது.